விலை ரூபா: 15.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

பக்கங்கள்: பதினாறு — Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 பங்குனி 30 செவ்வாய்க்கிழமை (13.04.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 115

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாந்தர தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது ராம்கோ சிமெந்து
RAMCO

## நாட்டிலுள்ள பிரச்சினைகளுக்கு அரசினால் தீர்வு காண முடியாது

### ஜே.வி.பி. சுட்டிக்காட்டு

(கொழும்பு)

ஜே.வி.பி. ஒருபோதும் அரசுடன் இணையாது. ஏனென்றால் இந்த அரசாங்கத்தினால் மக்களின் பிரச்சினைகளையோ, தேசியப் பிரச்சினையையே முடிபுக்குக் கொண்டுவர முடியாது.

நாடாளுமன்றத்திற்குள்ளும் வெளியிலும் நாட்டிற்காகவும் பொதுமக்களுக்காகவும் ஜே.வி.பியின் போராட்டம் தொடரும் என ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

மாற்று அரசியலுக்காக மக்கள் வீதியில் இறங்கிப் போராடும் நாள் வெகுதொலைவில் இல்லை. இன்றைய அரசாங்கத்துடன் எதிர்க்கட்சிகளினால் ஒன்றிணைந்து ஒருபோதும் செயற்பட முடியாது.

எதிர்வரும் காலங்களில் நாட்டின் ஜனநாயகம் மற்றும் (16 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனநாயக தேசிய கூட்டமைப்புக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல்

(கொழும்பு)

ஜெனரல் சரத் பொன்சேகா தலைமையிலான ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்புக் கட்சிக்கு எதிராகக் காவல்துறையினர் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

தேர்தல் சட்டங்களை மீறியதாகத் தெரிவித்துப் புறக்கோட்டை நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. சரத் பொன்சேகாவின் பாரியார் அனோமா பொன்சேகா, சுனில் ஹந்துன்நெத்தி, அர்ஜுன ரணதுங்க, லக்ஷ்மன் நிபுணாரச்சி, விஜித ஹேரத் உள்ளிட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பொதுத் தேர்தல் நடைபெறுவதற்கு 48 மணித்தியாலங்களுக்கு முன்னதாக ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பு பிரசாரங்களை நடத்தியதாகப் புறக்கோட்டைப் பொலிஸார் குற்றஞ்சுமத்தியுள்ளனர்.

இராணுவப் (16 ஆம் பக்கம் பார்க்க)

# பெரும்பான்மை பலத்தைப் பெற எதிர்க்கட்சிகளுடன் அரசு பேச்சு

### ஆறு பேருடன் பேசிய இரகசியம் அம்பலத்துக்கு

(கொழும்பு)

எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் 6 பேருக்கு அமைச்சு மற்றும் பிரதி அமைச்சு பதவிகளை வழங்கி அவர்களை அரசின் பக்கம் இழுத்து நாடாளுமன்றில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையை நிலை நாட்டுவதற்கு ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி இரகசிய பேச்சுக்களை ஆரம்பித்திருப்பதாக கொழும்பிலிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (16 ஆம் பக்கம் பார்க்க)



புதுவருடத்தை முன்னிட்டு களைகட்டியுள்ள யாழ்.நகரம்

## உயர் நீதிமன்றில் நளினி மீண்டும் மனு

(சென்னை)

சிறையில் இருந்து விடுவிக்க முடியாது என்ற தமிழக அரசின் உத்தரவை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்தில் நளினி நேற்று மனுத் தாக்கல் செய்துள்ளார்.

தம்மை விடுவிக்க இயலாது என்பதற்குத் தமிழக அரசு தெரிவித்துள்ள காரணம் இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு எதிரானது என்று மனுவில் அவர் கூறியுள்ளார்.

தம்மை விடுவிக்கலாம் என்று சிறைத்துறை எஸ்.பி. உளவியல் நிபுணர் நற்சான்று அதிகாரிகள் ஆகியோர் பரிந்துரை செய்தும் தமிழக அரசு அதை ஏற்கவில்லை என்று நளினி தெரி (16 ஆம் பக்கம் பார்க்க)

## கொடுப்பதை வாங்கிக் கொண்டு வாழப் பழகிக் கொள்ள வேண்டும்

### கூட்டமைப்புக்கு ஹெலஉறுமய 'அட்வைஸ்'

(கொழும்பு)

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தீர்வை ஏற்படுத்திக் கொடுப்பார் என்பதால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கொடுப்பதை வாங்கிக் கொண்டு வாழப் பழகிக் கொள்ள வேண்டும் என ஜாதிக ஹெலஉறுமயவின் தலைவர் எல்லாவல மேதானந்த தேரர் தெரிவித்துள்ளார்.

நடந்து முடிந்துள்ள நாடாளுமன்றத் தேர்தல் வெற்றி தொடர்பாக ஊடகவியலாளர்கள் மத்தியில் தனது கருத்தினை வெளியிடுகையிலேயே எல்லாவல மேதானந்த தேரர் இவ்வாறு கூறியுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினதும் புலிகளினதும் கோரிக்கைகள் ஒரே மாதிரியானவை. எனவே அரசாங்கம் ஒருபோதும் அவர்களின் தனிநாட்டுக் கோரிக்கையை நிறைவேற்றக் கூடாது.

கேட்பது கிடைக்காவிட்டால் கொடுப்பை வாங்கிக் கொண்டு திருப்தியடைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பழகிக் கொள்ள வேண்டும்.

தேர்தலில் வட கிழக்கில் வெற்றி பெற்றுவிட்டதற்காக நாட்டைத் துண்டாடி தமிழீழம் அமைக்க இடமளிக்க முடியாது. நாட்டின் எதிர்காலத்திற்காகவும் அனைவரும் அரசாங்கத்துடன் (16 ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சுப் பதவி வழங்குவது குறித்து ஆளும் கட்சிக்குள் கருத்து மோதல்

(கொழும்பு)

இலங்கையின் புதிய பிரதமராக யாரை நியமிப்பது என்பதும் தொடர்பில் ஆளும் கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் முக்கியஸ்தர்களிடையே கருத்து மோதல் வலுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பசில் ராஜபக்ஷவுக்கான ஆதரவு வலுத்து வருவதனால் டி.எம்.ஜயரட்ன, மைத்திரிபால சிறிசேன ஆகியோர்களுக்கு மனத்தாக்கம் அதிகரித்து வருகின்றது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை இது தொடர்பில் கலந்துரையாடிய ஆளும் கட்சியின் மூத்த அமைச்சர்கள், பசில் ராஜபக்ஷவை பிரதமராக நியமிக்காதுவிடில் அவருக்கு வெளிநாட்டு அமைச்சர் பதவியாவது வழங்கப்பட வேண்டும் என்று திட்டவட்டமாகக் கருத்து வெளியிட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆகவே பசில் ராஜபக்ஷவுக்குப் பிரதமர் பதவி அல்லது வெளிநாட்டமைச்சர் பதவி வழங்கப்படலாம் (16 ஆம் பக்கம் பார்க்க)

## அரசிடமிருந்து அழைப்புக்கள் எவையும் கூட்டமைப்புக்குக் கிடைக்கவில்லையாம்

(கொழும்பு)

பேச்சுவார்த்தைக்கு வருமாறு அரசாங்கத்திடமிருந்து எழுத்து மூலமாக அழைப்பு எதுவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இதுவரை கிடைக்கவில்லை என்றும் அழைப்பு வந்தால் நாடாளுமன்றத்திற்கு குழு கூடிய பொறுப்புணர்ச்சியுடன் முடிபெடுக்கும் என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

அழைப்புக் கிடைத்தவுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழு கூடி அது குறித்து ஆக்கபூர்வமாகவும் பொறுப்புணர்ச்சியுடனும் பரிசீலித்து முடிபெடுக்கும். அவ்வாறு எடுக்கப்படும் முடிவு தமிழ் பேசும் மக்களின் நலன்களைப் பாதுகாப்பதற்காகவும் அவற்றை உத்தரவாதப்படுத்துவதாகவும் இருக்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவித்த அரசியல் தீர்வு மற்றும் மக்களின் உடனடித் தேவைகளை நிறைவேற்றல் ஆகியன கொள்கைகளின் (16 ஆம் பக்கம் பார்க்க)

## பேசும் படம்



## எப்படியிருக்கிறது நிலைமை...

# துர்நாற்றம் வீசுவதால் பயணிக்க முடியாதநிலை

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் வீதியில் கொட்டப் படும் விலங்குக் கழிவுகளால் வீதி யால் பயணிக்க முடியாத நிலையேற் பட்டுள்ளது.

கோம்பயன் மணல் இந்து மயா னத்தை அண்டியுள்ள பகுதிகளில் அண்மைக் காலங்களில் விலங்குக் கழிவுகளால் பெரும் துர்நாற்றம் வீசு கின்றது.

விலங்கு மற்றும் கோழிகளின் எலும்புகள், இறக்கைகள் என்பன அவ்விடத்தில் கொட்டப்படுவதாலேயே துர்நாற்றம் வீசுகின்றது.

இது குறித்து பலதடவைகள் எச் சரிக்கை செய்யப்பட்டபோதும் தொடர்ந்தும் விலங்குக் கழிவுகள் கொட்டப்படுவதாக தெரிவிக்கப்பட் டது.

இது குறித்து உடனடியாக நட வடிக்கை எடுக்காவிட்டால் அவ் வீதி யூடாக போக்குவரத்துச் செய்ய முடி யாத நிலை ஏற்படும் என அவ் வீதி யால் பயணிப்போர் சுட்டிக்காட்டி யுள்ளனர். (ச-5)

## தேர்த்திருவிழா

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு மேற்கு இறுப்பிட்டி கொம்மாபிட்டி மூத்தநயினார் புலம் அருள்மிகு வீரகத்தி விநாயகர் ஆலய தேர்த் திருவிழா நாளை 11.00 மணி க்கு இடம்பெறும்.

காலை 10.00 மணிக்கு வசந்த மண்டப பூஜை இடம்பெற்று 11.00 மணிக்கு விநாயகப்பெருமான் தேரில் ஆரோகணிப்பார்.

மறுநாள் 10ஆம் திகதி முற்பகல் 11.30 மணிக்கு தீர்த்தோற்சவம் இடம் பெறும். (ச)

## வீட்டுக் கிணற்றிலிருந்து மாணவி சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

கிணற்றிலிருந்து மாணவி ஒருவர் நேற்று அதி காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார். யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் விஞ்ஞானத்துறையில் உயர்தரம் கற்கும், புண்ணியர்மடம் செம்மணி வீதி, நாயன்மார்கட்டைச் சேர்ந்த இ.ஜென்சலா (வயது 19) என்ற மாணவியே சடல மாக மீட்கப்பட்டவராவார்.

இச்சம்பவம் குறித்து தெரியவருவதாவது, பிரஸ்தாப மாணவி அதிகாலையில் எழுந்து வழமையாகப் படித்து வருபவர். எனினும் நேற்று குறித்த நேரத்தில் மாண வியை காணாத நிலையில் உறவினர்கள் தேடியுள்ள னர்.

அப்போது அவர்களின் வீட்டு கிணற்றிலிருந்து சடலம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் குறித்து விசார ணைகளை மேற்கொண்டுள்ள கோப்பாய் பொலிஸார் பிரதே பரிசோதனைக்காக சடலத்தை யாழ்.போதனா வைத் திய சாலையில் ஒப்படைத்துள்ளனர். (ச-7,30)

## பிரதான பிரஜைகள் மூவரின் புதல்வர்கள் எம்.பி. ஆகினர்

நாட்டின் பிரதான பிரஜைகள் மூவரின் புத்திரர்கள் ஏழாவது நாடாளுமன்றத் தேர்தலில் உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மகன் நாமல் ராஜபக்ஷ, பிரதமர் ரட்ணசிறி விக்கிரம நாயக்கவின் மகன் விதுர விக்கிரம நாயக்க, முன்னாள் சபா நாய கர்டபிள்யூ.ஜே.எம்.லொக்குபண்டார வின் மகன் உதித்த லொக்கு பண்டார ஆகியோர்புதியஉறுப்பினர்களாகநாடாளு மன்றத் துக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள னர்.

இதற்கமைய நாமல் ராஜபக்ஷ ஹம்பாந் தோட்டை மாவட்டத்திலிருந் தும் விதுர விக்கிரம நாயக்க களுத்துறை மாவட்டத்திலிருந்தும் உதித்த லொக்கு பண்டார பதுளை மாவட்டத்திலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். (ச-14)

## விளையாட்டுப் போட்டியும் கலை நிகழ்வுகளும்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு சிவலப்பிட்டி சன சமூக நிலையமும், அம்பாள் விளை யாட்டுக்கழகமும் இணைந்து நடத் தும் தீவுப்பகுதி விளையாட்டுக்கழ கங்களுக்கிடையிலான விளையாட் டுப்போட்டியின் இறுதி நிகழ்வு நாளை சிவலப்பிட்டி அம்பாள் விளையாட் டுக்கழக மைதானத்தில் நடைபெறும்.

நாளைய நிகழ்வில் ஆண்கள் பெண்களுக்கான சைக்கிள், மரதன் ஓட்டப்போட்டிகள், நடைபெறும்.

அதனைத்தொடர்ந்து மாலை யில் பரிசளிப்புவிழாவும் விசேடகலை நிகழ்வுகளும் இடம் பெறும்.

புங்குடுதீவு சிவலப்பிட்டி சன சமூக நிலையத்தின் 50ஆவது நிறைவு மற்றும் 28ஆவது விளை யாட்டு விழாவை முன்னிட்டும் அம் பாள் விளையாட்டுக்கழகத்தின் 7 ஆவது விளையாட்டு விழாவை முன்னிட்டு இப்போட்டிகள் நடை பெறுகின்றன. (ச)


## நியூ கேம்பிரிச்

அளவெட்டி

புதிய பிரிவுகள்

O/L Day — வாரத்தில் 5 நாட்களும்

A/L 2012 — ஆரம்பத்திலிருந்து கற்பிக்கப்படும்.

எமது வழமையான ஆசிரியர் குழா முடன் ஆரம்பம்– 15.04.2010 காலை 7.00 சுபவேளையில் (1158)


## மரதன் ஓடி வென்ற வீரர் மயக்கமுற்றார்

(யாழ்ப்பாணம்)

மரதன் ஓடி முதலிடம் பெற்ற வீரர் உடல் பலவீனமடைந்த நிலை யில் யாழ்.போதனா வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நெஸ்ரமோல்ட், மஞ்சி ஆகிய வற்றின் அனுசரணையில் ஐ.ரி.என்., வசந்தம் ரிவி இணைந்து நடத்தும் புதுவருட விளையாட்டு நிகழ்வில் நேற்று மரதன் ஓட்டப் போட்டி இடம் பெற்றது.

இதில் பங்குபற்றி முதலிடத்தை வென்ற பண்டத்தரிப்பைச்சேர்ந்த அ.நிவாஸ், (வயது 24) என்ற வீரரே மயக்கமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட் டார். (ச-30)

## யூனியன் வங்கியின் புதுவருட கொடுக்கல் வாங்கல்

(யாழ்ப்பாணம்)

யூனியன் வங்கி புதுவருடக் கொடுக்கல் வாங்கல்களுக்காக நாளை புதன்கிழமை காலை 9.30 மணி முதல் மதியம் 12 மணி வரை திறந்திருக்கும் என யாழ். கிளை முகாமையாளர் அறிவித்துள்ளார். (ச)


## தேவை

நல்லூரிற்கு அருகாமை யில் இயங்கும் பாமஸி க்கு, பான்ஸி, மருந்து விற்பனையில் அனுப வமுள்ள பெண் பிள்ளை கள் தேவை.

தொடர்பு: 077 3689179 (1178)

## வீடு விற்பனைக்கு

நல்லூர்க் கோவில் சுற்றாட லில் யாழ். மாநகர சபை எல் லைக்குள் யாழ். கல்வி வல யத்திற்கு அண்மையில் சகல வசதிகளும் கொண்ட அழகான வீடு உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0777432645

எனது பக்கம் தரகர் தேவையில்லை. (1172)


# வியாபார நிறுவனங்களின் கழிவுகளை வீதியோரங்களில் கொட்ட வேண்டாம்

# மாநகர முதல்வர் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

வியாபார நிறுவனங்களின் சூழ லில் உள்ள குப்பைகள் மற்றும் கழி வுகளை வீதியோரங்களில் வீச வேண்டாம் என யாழ். மாநகரமுதல் வர் திருமதி யோ.பற்குணராஜா கேட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளி யிட்டுள்ள செய்திக்குறிப்பு வரு மாறு,

யாழ். நகருக்கு தினமும் பெரும் எண்ணிக்கையிலான பொதுமக் கள் குடாநாட்டின் பல பாகங்களிலும் இருந்தும் தென்பகுதியில் இருந்தும் வந்த வண்ணம் உள்ளனர்.

மக்கள் பெரும் மளவில் கூடும் இடங்கள் எப்போதும் அழகாகவும் சுத்தமாக வும் இருக்கவேண்டியது அவசிய மாகும்.

யாழ். நகரின் மத்தியில் அமைந் துள்ள வியாபார நிறுவனங்களின் சூழலில் எந்நேரமும் குப்பைகள் மற்றும் கழிவுப்பொருட்கள் குவிந்த வண்ணம் உள்ளன.

குப்பைகளை அகற்றி நகரை சுத்தமாகவும், அழகாகவும் வைத் திருக்க வேண்டிய பாரிய பொறுப்பு மாநகர சபைக்கே உரியது.

சபையினது சுத்திகரிப்பு தொழி லாளர்கள் தினமும் காலையும் மாலையும் நகரை சுத்திகரித்து வரு கின்ற போதிலும் பெரும்பாலான வர்த்தக நிறுவனங்கள் தமது வியா பார நிலையத்தினுள் சேரும் கழிவு களை வடிகால்களினுள்ளும், வீதி யோரங்களிலும் வீசுவதனால் நக ரின் சுகாதாரமும் அழகும் பாதிப்படை கின்றது.

இவ்வாறான நிலையைத் தவிர்ப் பதற்கு வியாபார நிறுவனங்களின் சூழலிலுள்ள குப்பைகள் மற்றும் கழிவுகளுக்கு அந்நிறுவனத்தின் உரிமையாளரே பொறுப்பாவார் என்ற கோட்பாட்டை அனைத்து வர்த்தக நிறுவனங்களின் உரிமை யாளர்களும் கொள்கையளவில் ஏற்றுக்கொண்டு தமது நிலையங் களில் அன்றாடம் சேரும் கழிவு களை வீதியோரங்கள் மற்றும் வடி கால்களினுள் வீசாது சேகரித்து வைக்குமிடத்து சபையின் வாகனங் கள் அவற்றை உரிய நேரத்தில் எடுத்துச் செல்வதற்குரிய ஒழுங்கு களை மாநகரசபை மேற்கொள்ளும்.

கடந்த 11ஆம் திகதி கௌரவ சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் சகிதம் யாழ். வணிகர்கழகப் பிரதிநிதிகளுடன் நடத்திய உரையாடலின் போது மேற் படி தீர்மானம் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது என யாழ்.முதல் வரின் செய்திக்குறிப்பில் தெரிவிக் கப்பட்டுள்ளது. (ச)

## நடிகை மாலினிக்கு பிரதியமைச்சர் பதவி

(கொழும்பு)

பிரபல நடிகை மாலினி பொன் சேகாவை தேசிய பட்டியல் மூலம் நாடாளுமன்றத்துக்கு தெரிவு செய்து அவருக்கு கலாசார பிரதியமைச்சர் பதவியை வழங்க ஜனாதிபதி தீர் மானித்துள்ளதாக ஜனாதிபதி செய லக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கலாசார அமைச்சப்பதவி பிர பல எழுத்தாளர் ஜே.ஆர்.பி.சூரிய பெருமவுக்கு வழங்கப்படவுள்ள தாகவும் கூறப்படுகிறது. (ச-5)


## நாளை தேர் உலா வரும்

## யாழ். அத்தியடிப் பிள்ளையார்



வசந்த மண்டப பூசை காலை 8.15

எம்பெருமான் தேருக்கு எழுந்தருளல் 9.00

தேர்ப் பவனி ஆரம்பம் 9.30

–ஆலய நிர்வாகம்–

## கண்ணீர் அஞ்சலி

காலஞ்சென்ற முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் மகா சபைத் தலைவருமான கௌரவ எம்.சி.சுப்பிரமணியம் அவர்களின் பாரியார் திருமதி இலட்சுமி சுப்பிரமணி யம் அவர்களின் மரணச் செய்தி கேட்டு நாம் துயர் கொள் வதுடன் அன்னாரின் பிரிவால் துயருறும் அவர் குடும்பத் துக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதோடு அவர் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம். சிறுபான்மைத் தமிழர் மகாசபை

யாழ்ப்பாணம். (1181)

# இன்று ஒரு தகவல்

## ஆன்மீக நோக்கம்

காசிக்குப் போனால் கர்மம் தொலையும் என்பது ஒரு நம்பிக்கை. காசியில் இருக்கும் பெண் தெய்வம் அன்னபூரணி. அதனால் அந்த ஊரில் பசியால் கஷ்டப்படுகிறவர்களே கிடையாது என்று சொல்வார்கள்.

அங்கிருப்பவர்கள் மற்றவர்களுக்குத் தாராளமாக தான தர்மங்கள் செய்வார்கள் என்று சொல்வதுண்டு.

சனங்களெல்லாம் அவ்வூரைப்பற்றிப் பெருமையாகப் பேசிக் கொண்டது வியாச முனிவரின் காதில் விழுந்தது.

இதில் எவ்வளவு தூரம் உண்மை இருக்கிறது என்பதைச் சோதித்துப் பார்க்க எண்ணினார். உடனே தன்னுடைய சீடர்களைக் கூப்பிட்டார். 'காசிக்குப் போக வேண்டும்' புறப்படுங்கள்' என்றார்.

சோதித்துப் பார்ப்பதை விட, அந்த ஊருக்குப் போனால் எல்லோரும் இலவசமாக சாப்பாடு போடுவார்கள். விதவிதமாக சாப்பிட்டுப் பார்க்கலாம் என்ற நினைப்புத்தான் சீடர்களுக்கு. அதிகமாக இருந்தது.

உடனே உற்சாகமாகப் புறப்பட்டார்கள். எல்லோரும் காசிக்குப் போய்ச் சேர்ந்தார்கள். போனதும் முதல் வேலையாக ஒரு தர்மசத்திரத்தைப் பிடித்து அங்கே தங்கினார்கள். அடுத்த வேலையாக எல்லோரும் கங்கையில் போய்க் குளித்தார்கள்.

அடுத்ததாக எல்லோரும் பிரிந்து ஆளுக்கொரு திசையாக சாப்பிடுவதற்காக சென்றார்கள். ஆனால் அவர்கள் யாருக்குமே ஒருவாய் சோறு கூடக் கிடைக்கவில்லை.

"என்ன இது? எல்லோரும் இந்த ஊரைப்பற்றி அவ்வளவு உயர்வாக பேசினார்கள். கடைசியில் இங்கே வந்து பார்த்தால் ஒன்றும் இல்லையே" என்று நினைத்தார்கள்.

"ஒருவேளை இன்றைக்கு சாஸ்திரப்படி பிச்சை போடக்கூடாத நாளாக இருக்குமோ?" என்றார் ஒருத்தர்.

வியாசர் பார்த்தார் : "சரி... இன்றைக்கு இப்படியாகவிட்டது. கொஞ்சம் பொறுமையாக இருங்கள் நாளைக்கு என்ன ஆகுது என்று பார்ப்போம்" என்றார்.

மறுநாளும் தெருத்தெருவாக அலைந்தார்கள். ஒன்றும் கிடைக்கவில்லை. அடுத்த நாளும் போனார்கள். பலவீடுகளில் எங்களிடம் எதுவும் இல்லை என்று சொல்லிவிட்டார்கள்.

மறுநாளும் போனார்கள். இவர்கள் வருவதை பார்த்ததுமே எல்லோரும் கதவை இழுத்து மூட ஆரம்பித்தனர். ஏழுநாட்கள் இப்படியே கழிந்தது.

எட்டாவது நாள் வியாசர் ஒரு வீட்டுக்கு முன்னால் போய் நின்று குரல் கொடுத்தார்.

வீட்டிலிருந்தவர்கள் யாருமே இதைக் கண்டு கொள்ளவில்லை. வியாசருக்குக் கோபம் வந்துவிட்டது. காசியில் இருப்பவர்கள் அத்தனை பேருக்கும் சாபம் கொடுத்துவிட வேண்டும் என்று நினைத்து வலது கையைத் தூக்கினார்.

அந்தச் சமயத்தில் ஒரு பெரிய வீட்டுக்கதவு திறந்தது. வீட்டுக்கார அம்மா வெளியே வந்து "நிறுத்துங்கள்" என்றார்.

அவ்வளவுதான். என்ன ஆச்சரியம்!

தூக்கிய கையை இவரால் இறக்கவே முடியவில்லை.

அந்த அம்மா இலேசாக புன்னகைத்தார். அதன் பின்னர் தான் இவர் கையை அசைத்தார்.

அந்த அம்மா இவரைப் பார்த்து,

"இதோ பாருங்கள்! நீங்கள் இந்த ஊரின் மீது கோபப்படுவதில் அர்த்தமில்லை" என்றார்.

"என்னம்மா இது... நாங்கள் ஏழுநாட்களாக பட்டினி கிடக்கிறோம்? நீங்கள் இப்படி சொல்கிறீர்களே!" என்றார்.

அந்த அம்மா சிரித்துக் கொண்டே "சரி, எல்லோரும் எங்கள் வீட்டுக்கு வாருங்கள்" என்று கூப்பிட்டார். இதைக் கேட்டதும் சீடர்கள் துள்ளிக் குதித்தார்கள். அடுத்த கணமே அந்த அம்மா வீட்டில் இருந்தார்கள்.

எல்லோருக்கும் இலை போட்டாயிற்று. சோறு வைக்கவில்லை. அந்த அம்மா அவர்களைப் பார்த்து "ஏன் சும்மா இருக்கிறீர்கள் சாப்பிட வேண்டியது தானே!" என்றார்.

என்ன இது... வெறும் இலையையா சாப்பிடுவது வியாசருக்குக் கோபம் வந்து விட்டது.

என்னமோ சொல்வதற்கு வாயைத் திறந்தார். அடுத்தகணமே இலையில் விதவிதமான உணவு வகை நிறைந்து போய் இருந்தது.

சீடர்கள் அடுத்த ஏழு நாட்களுக்கும் தங்குவது போல் ஒரு பிடி பிடித்தார்கள். அதன் பின் நிமிர்ந்து பார்த்தால் தேவி அன்னபூரணியே அவர்களுக்கு காட்சி கொடுத்தார்களாம்.

சரி அவர்களுக்கு ஏன் ஏழு நாட்களாக இவ்வளவு கஷ்டம்? இதற்கு சிவபெருமான் விளக்கம் கொடுத்தார்.

"உங்களில் ஒருத்தர் கூட பக்தி , சிரத்தையுடன் காசி யாத்திரை வரவில்லை. நீங்கள் இந்த ஊரின் அதிசயத்தை சோதிக்க வந்தீர்கள். சீடர்கள் விதவிதமாக சாப்பிட வந்தார்கள். அதனால் தான் கஷ்டம்" என்றார்.

உண்மைதான் நமது நோக்கங்கள் முறையாக இருந்தால் தான் ஆன்மீக அனுபவங்களும் முறையாக இருக்கும். இல்லையானால் அனுபவங்கள் வேறு விதமாகத் தான் இருக்கும்.

இப்பொழுதும் பலர் காசி யாத்திரை என்று போகிறார்களே. அவர்களுக்கும் ஒவ்வொரு நோக்கம் இருப்பது உண்டு. அங்கே போய் தங்களுக்கு பிரியமான ஏதாவது ஒன்றை விட்டுட்டு வந்து விடுவதுமுண்டு.

அலுவலகத்தில் வேலைபார்க்கும் ஒரு அம்மா சமீபத்தில் காசிக்கு குடும்பத்துடன் போய் வந்தார்.

"என்னம்மா உங்களுக்கு பிரியமான எதையாவது காசியில் விட்டுட்டு வந்தீர்களா? என்று கேட்டேன்.

"ஆமாம்" என்றார் ரொம்ப பக்தி சிரத்தையுடன்!

"எதை?" என்று கேட்டேன்.

"எங்க மாமியரை" என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# இவ்வருடத்திற்கான அரசசேவை இடமாற்றங்களை அடுத்த மாதத்திலிருந்து அமுல்படுத்த நடவடிக்கை

(கொழும்பு)

அரச சேவை உத்தியோகத்தர்களுக்கான இந்த வருடத்திற்கான வருடாந்த இடமாற்றங்களை அடுத்த மாதத்திலிருந்து அமுல்படுத்த அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இவ்வாண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் மே மாதம் முதலாம் திகதி வரையான காலப் பகுதியில் அமுல்படுத்தத் தீர்மானிக்கப்பட்டிருந்த இடமாற்றங்களை எதிர்வரும் மே மாதம் மூன்றாம் திகதி தொடக்கம் அமுல்படுத்தவுள்ளதாக இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

இதேவேளை மே மாதம் மூன்றாம் திகதி முதல் ஜூன் மாதம் முதலாம் திகதிவரை மேற் கொள்ளத் திட்டமிட்டிருந்த இடமாற்ற உத்தரவுகளை எதிர்வரும் ஜூன் மாதம் முதலாம் திகதி முதல் அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இணைந்த சேவை, அரச முகாமையாளர் சேவை, அலுவலகப் பணியாளர்கள் சேவை, சாரதி சேவை என்பவற்றைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கான இந்த வருடத்துக்கான இடமாற்றங்களையே குறிப்பிட்ட திகதிகளில் அமுல்படுத்தவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட திகதிகளில் புதிய சேவை ஸ்தானங்களில் கடமைகளைப் பொறுப்பேற்பதற்கு வசதியாக ஏற்கனவே இடமாற்ற உத்தரவுகளைப் பெற்றுள்ள உத்தியோகத் தர்களை விடுவிக்குமாறு இணைந்த் சேவைகள் பணிப்பாளர் நாயகம் திணைக்களங்களின் தலைவர்களைக் கேட்டுள்ளார். (6)

# பாடசாலை புத்தகப்பைகளை விரைவில் விநியோகிக்க ஏற்பாடு

தகுந்த தரத்திலான பாடசாலை புத்தகப்பைகளை மாணவர்களுக்கு விரைவில் வழங்குவதற்கான ஏற்பாடுகளை செய்வதற்கு குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இந்த குழுவின் தலைவராக கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம் டபிள்யூ எம்.ஜி.ஏ. புஸ்பகுமாரவும் உறுப்பினர்களாக இலங்கைத் தரநிர்ணய பணியகம், வர்த்தக அமைச்சு, கல்வி வெளியீட்டு திணைக்களம் ஆகியவற்றிலிருந்து தலா ஒருவரும் குடும்ப சுகாதார பணியகத்தின் வைத்தியர் ஒருவரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இப்பைகளை பாடசாலை மாணவர்களுக்கு சாத்தியமான குறைந்த விலைகளில் நேரடியாக அமைச்சு விநியோகிக்கவுள்ளது. மூன்றாம் தவணை விடுமுறைக்கு முன்னதாக இந்த பைகளை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (6-4)

# தேசிய ஜெபமாநாடும் சமாதானப் பேரணியும்

இலங்கை மெதடிஸ்த திருச்சபையினால் நடத்தப்படும் தேசிய ஜெப மாநாடு நேற்று திங்கட்கிழமை மாலை 6.30 மணிக்கு பரியோவான் கல்லூரியில் ஆரம்பமாகியது.

தொடர்ந்து இன்று செவ்வாய்க் கிழமை மாலை 5 மணிக்கு மத்திய கல்லூரி மைதானத்தில் திறந்த வெளிக்கூட்டம் நடைபெறவுள்ளது.

மேலும் நாளை புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகும் சமாதானப் பேரணி வைத்தியசாலை வீதிவழியாக சென்று தபால் நிலையம், வீரசிங்கம் மண்டபம் வீதி வழியாகச் சென்று மத்திய கல்லூரி மைதானத்தை வந்தடையவுள்ளது. (6-4)

## க.பொ.த (சா/த) பரீட்சை

# மீள்திருத்தத்திற்கான விண்ணப்பங்களை இம்மாதம் 30ஆம் திகதி வரை அனுப்பலாம்

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சை விடைத்தாள் மீள் திருத்தத்திற்கான விண்ணப்பங்களை இம்மாதம் 30 ஆம் திகதி வரை ஒப்படைக்க முடியுமென பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பாடசாலை அதிபர்களூடாக விண்ணப்பங்களை அனுப்பிவைக்க வேண்டுமென பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அனுர எதிரிசிங்க குறிப்பிட்டார்.

பெலவத்தையில் அமைந்துள்ள பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு நிலையத்திற்கு விண்ணப்பங்களைத் தபால் மூலம் அனுப்பி வைக்க வேண்டுமென தெரிவித்த அவர் விடைத்தாள் மீள் திருத்தும் பணிகளை அடுத்த மாதம் மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவித்தார். (6)

## இராசி பலன்

13-04-2010
(பங்குனி 30 , செவ்வாய்க்கிழமை)
சதுர்த்தசி பிற்பகல் 5.41 மணிவரை
உத்தரட்டாதி பிற்பகல் 4.07 மணிவரை
இராகுகாலம் 3.06-4.36 மணிவரை
சுபநேரம் 10.36-12.06 மணிவரை
குழந்தைவேற்சுவாமி குருபூசை,
போதாயன அமாவாசை,
அமிர்தசித்தம்.

| | |
|---|---|
| மேடம் | சோம்பல் நிலை, சயனசுகக் குறைவு, எடுத்த காரியம் தாமதமாகும், சுபசெலவு. |
| இடபம் | எடுத்த காரியம் கைகூடும், தன தானிய சேர்க்கை, நண்பர்கள் சந்திப்பு, கீர்த்தி. |
| மிதுனம் | பிறருக்கு உதவுதல், தூரதேசச் செய்தி, காரிய அனுகூலம், ஆரோக்கியம். |
| கடகம் | தேவையற்ற பயம், சரீரப்பிரயாசை, பிரயாணம், அதிக செலவு. |
| சிங்கம் | அஜீரணக்கோளாறு, வீண்பகை, எடுத்த காரியம் தாமதமாகும், கௌரவக்குறைவு. |
| கன்னி | மனோதைரியம், தேகநலன், போசன சுகம், புகழ். |
| துலாம் | சுவாரஸ்யம், பொருள் சேர்க்கை, நோய்குணமடைதல், பாராட்டு. |
| விருச்சிகம் | காரிய இடையூறு, உறவினர் சந்திப்பு, அமைதிக்குறைவு, பணக்குறைவு. |
| தனுசு | மனச்சஞ்சலம், நண்பர்கள் சந்திப்பு, சுபகாரியச் செலவு, முயற்சி தாமதம். |
| மகரம் | உறவினர் வருகை, செய் தொழில் விருத்தி, கருமங்கள் நிறைவேறும், பொருள் சேர்க்கை. |
| கும்பம் | மனோ சங்கடம், சுபசெலவு, கடினமுயற்சி, போசனசுகக் குறைவு. |
| மீனம் | வெகுமானம், உஷ்ண வியாதி, தொழில் சிந்தை, மாதர் நட்பு. |

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | கல்வியங்காடு | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 90 | 50 |
| உருளைக்கிழங்கு | 60 | 80 | 50 |
| பச்சைமிளகாய் | 60 | 90 | 60 |
| தக்காளி | 80 | 100 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 20 | 40 | 40 |
| கோவா | 30 | 40 | 40 |
| கரட் | 100 | 120 | 90 |
| பூசணி | 30 | 40 | 50 |
| புடோல் | 40 | 60 | 40 |
| வாழைக்காய் | 30 | 40 | 50 |
| சின்ன வெங்காயம் | 60 | 70 | 50 |
| பெரிய வெங்காயம் | 60 | 70 | 60 |
| பாகற்காய் | 50 | 60 | 80 |
| வெண்டிக்காய் | 40 | 50 | 40 |
| கரணைக் கிழங்கு | 30 | 40 | 50 |
| பயிற்றங்காய் | 80 | 100 | 80 |
| லீக்ஸ் | 80 | 100 | 80 |
| பீற்றூட் | 40 | 20 | 40 |
| கறிமிளகாய் | 80 | 100 | 60 |
| முருங்கைக்காய் | 250 | 300 | 300 |
| போஞ்சி | 80 | 100 | 80 |
| கத்தரிதம்புள்ள | 60 | 80 | 40 |
| கீரை - 1 பிடி | 30 | 40 | 25 |
| தேசிக்காய் | 120 | 140 | 90 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 30 | 35 |

## திருநெறிய தமிழ்மறைக் கழகத்தினால்

# மாணவர்களுக்கான பண்ணிசைப் போட்டி

(யாழ்ப்பாணம்)

திருநெறிய தமிழ்மறைக் கழகத்தினால் இணுவில் ஸ்ரீபரராஜசேகரப் பிள்ளையார் ஆலய மஹோற்சவத்தை முன்னிட்டு நடத்தப்படும் பண்ணிசைப் போட்டிக்கு மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தரம் 4,5,6 (கீழ்ப்பிரிவு), தரம் 7,8,9 (மத்திய பிரிவு), தரம் 10,11,12 (மேற்பிரிவு) ஆகிய மூன்று பிரிவுகளில் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

இப்போட்டியில் பங்குபற்றும் கீழ்ப்பிரிவு மாணவர்கள் ''காதலாகி, நீளநினைந்தடியேன்,கூற்றாயினவாறு, முத்திநெறி, மன்னுகதில்லை (பல்லாண்டு) , சென்றகாலத்தின் பழுதிலாத்திறனும், பக்தியால் யானுனை'' ஆகிய பாடல்களும் மத்திய பிரிவு மாணவர்கள் ''மானினேர் விழி,பண்ணும் பதமேழும், மாப்பினை தழுவிய,மீளா அடிமை, அன்றே எந்தன் ஆவியும், ஏகநாயகனை (திருவிசைப்பா) பாலுக்குப் பாலகன் (பல்லாண்டு), சிவனடியே சிந்திக்கும், நிறைமதி முகமெனும்'' ஆகிய பாடல்களும் , மேற்பிரிவு மாணவர்கள் ''தேமாங்கனி என்பொடு கொம்பொடாமை, திருவே என் செல்வமே, கோலமால் வரை, சிந்தனை நின்தாக்கி, கற்றவர் விழுங்கும் (திருவிசைப்பா), குழலொலி யாழொலி (பல்லாண்டு), நன்மை பெருகருள், அகரமுமாகி அதிபனுமாகி'' ஆகிய பாடல்களும் மனனம் செய்திருத்தல் வேண்டும்.

மேலும் ஒவ்வொரு பிரிவிலும் முதலாம் இடத்தைப் பெறுவோருக்கு தங்கப் பதக்கமும் ஏனையோருக்கு முதல் மூன்று இடங்களுக்குப் பரிசில்களும் ஆறுதல் பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

இப்போட்டியில் கலந்துகொள்ளும் மாணவர்கள் தங்களுக்குரிய சமய ஆசாரத்துடன் கலந்துகொள்ளவேண்டும் எனவும் சென்ற வருடம் ஏதாவதொரு பிரிவில் பங்குபற்றி தங்கப்பதக்கம் பெற்ற மாணவர்கள் இவ் வருடம் அதே பிரிவில் பங்குபற்றி போட்டியிட முடியாது எனவும் குறிப்பிடப்படுகிறது.

விண்ணப்பப்படிவத்தில் பிரிவு, மாணவர் முழுப்பெயர், முகவரி,பால், பிறந்த திகதி 31.12.2010 இல் வயது என்பனவற்றை குறிப்பிட்டு அதிபரால் அல்லது தலைவரால் உறுதிப்படுத்தி எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன்னர் திருமதி வை.கணேசபிள்ளை ஓய்வு பெற்ற ஆசிரியை அமைப்பாளர், திருநெறிய தமிழ்மறைக்கழகம், இணுவில் தெற்கு , இணுவில் அல்லது மணிமண்டபம், ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் கோயில், இணுவில் தெற்கு,இணுவில் அல்லது இணுவில் பொது நூலகம், சனசமூக நிலையம் இணுவில் என்ற ஏதாவது ஒரு முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டும் என கழக செயலாளர் பா.சத்தியமூர்த்தி அறிவித்துள்ளார். (6-4)

## அறநெறிக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி பிரதேச செலகத்தினால் நடத்தப்படும் அறநெறிக் கருத்தரங்கு எதிர்வரும் 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் சி.சத்தியசீலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் '' ஆலயம் ஆற்ற வேண்டிய சமூதாயக் கடமைகள்'' என்னும் விடயம் பற்றி ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அதிபர் செஞ்சொற்செல்வர் ஆறுதிருமுருகன் '' சமூகமும் வாழ்வும்'' என்னும் விடயம் பற்றி வல்வை சிவகுரு வித்தியாலய அதிபர் ஆ.சிவநாதன் ஆகியோர் கருத்துரைகளை வழங்கவுள்ளனர். (6-4)




# க.பொ.த (சா/த) பரீட்சை சிறந்த பெறுபேறுகள்

**வேலணை மத்திய கல்லூரி**

து.தனுசன்-7ஏ,சி,எஸ், சி.சாரங்கா - 4ஏ,2பி,சி,எஸ்,ஜெ.ஜெசிந்-3ஏ,2பி,3சி, எஸ், ஜெ.மைதிலி -3ஏ,பி,2சி,3எஸ், ச.கஸ்தூரி -3ஏ,பி, 2சி,3எஸ், ந.கவிதரன்- 3ஏ,பி,4சி. ந.தர்சிகா - 2ஏ,4பி,சி,எஸ், அ.பத்மலோஜினி- 2ஏ,2பி,சி,3எஸ், மு. பபித்திரா - 2ஏ,2பி,சி, 3எஸ்,ஈ.சிறீவதனா - 2ஏ, பி,4சி, 2எஸ்,

சி.திவ்யா-2ஏ, 2பி,சி,.4எஸ், வ.சாய்மீரா - 2ஏ,பி,2சி,3எஸ், இ.பிரதீபா -2ஏ,2சி, 2எஸ்.

**சுண்டுக்குளி மகளிர் கல்லூரி**

9ஏ- சா.மதுராமி, வி.லக்ஷனா, எஸ். மகிழினி.

8ஏ- ரி.தாரணி,எஸ்.அபிரா, ஜே.ஜெனி, ஏ.றூத் ஸ்ரெபானி

7ஏ- ஜே.வேதுஜா, சி.சங்கீதா, இ.பானுஜா, ரி.துஷ்யங்கா.

6ஏ - ஜி.தாரணி, எஸ்.பிருதிவி, வி.கேசிகா, எஸ்.கனிமொழி, எஸ்.நிலானி, எஸ்.கீர்த்தனா, ரி.மதுரா, யூ.ஜெபபிரியா

5ஏ- ஜே.மிஷெல் வினோஜா, ஜே.லக்ஷி, எம்.சோபிதா, இ.பிருதுஷா, ஆர். தாட்சாயினி, எஸ்.சோபனா. (6-4)

# குடத்தனையில் மணல் ஏற்றியிறக்கும் பணிகளில் ஈடுபட்டோருக்கான சம்பளக் கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கு குடத்தனையில் மணல் ஏற்றியிறக்கும் வாகன உரிமையாளர்கள் மற்றும் கூலியாளர்களுக்கான மார்கழி மற்றும் தை மாதத்தின் 15 நாட்களுக்குமான சம்பளம் விரைவில் வழங்கப்படவுள்ளதாக குடத்தனை மணல் ஏற்றியிறக்கும் பணிகளுக்குப் பொறுப்பாகவுள்ள அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக தற்போது மணல் ஏற்றியிறக்கும் பணிக்கும் பொறுப்பாக இருக்கின்ற பிரதேச செயலகத்திடம் இருந்த இது தொடர்பான கணக்கு வழக்குகள் மகேஸ்வரி நிதியத்திடம் மாற்றப்பட்டமையே இந்த சம்பளக் கொடுப்பனவும் வழங்கப்படாமல் போனமைக்குக் காரணம் எனவும் விரைவில் இந்தத் தொழிலாளர்களுக்கான சம்பளக் கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (6-4)

## தீவகக் கல்வி வலயத்தில்

# அனர்த்த பாதுகாப்புக் கல்வி பொறுப்பாசிரியர்களுக்கான பயிற்சிப்பட்டறை

(யாழ்ப்பாணம்)

கடந்த 5ஆம் திகதி திங்கட்கிழமை அதிபர் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக G.T.Z. நிறுவனத்தின் அனுசரணையுடனான அனர்த்த பாதுகாப்புக் கல்வி தொடர்பாக தீவக வலய பாடசாலைகளின் பொறுப்பாசிரியர்களுக்கான பயிற்சிப் பட்டறை எதிர்வரும் 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தீவகக் கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் குறித்த நேரத்தில் நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் ஜி. வி. இராதா கிருஷ்ணன் அறியத்தந்துள்ளார்.(6)

## தென்மராட்சி பிரதேச

# இளைஞர், யுவதிகளுக்கான தொழில் பயிற்சி நெறிகள்

(யாழ்ப்பாணம்)

கனேடிய உலக பல்கலைக்கழகத்துடன் இணைந்து அறவழிப் போராட்டக் குழு தென்மராட்சி பிரதேச இளைஞர், யுவதிகளுக்கான தொழிற்பயிற்சிகளை வழங்கவுள்ளது.

இத் திட்டத்தின் கீழ் வீட்டு மின்னிணைப்பு, மின் ஒட்டு (welding) ஆகிய பயிற்சிகளுக்கு பயிற்சியாளர்கள் இணைத்துகொள்ளப்படவுள்ளனர்.

கைதடி, நுணாவில் பயிற்சி நிறுவனத்தில் நடைபெறவுள்ள இப்பயிற்சியில் கலந்து கொள்ள விரும்பும் பயிற்சியாளர்களுக்கு போக்குவரத்துப்படி மற்றும் துவிச்சக்கர வண்டி என்பன அன்பளிப்பாக வழங்கப்படவுள்ளதாகவும் பயிற்சியாளர்கள் எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டும் எனவும் செயலாளர் எம்.கே.ஜீவகதாஸ் அறிவித்துள்ளார். (6-4)

# சட்டவிரோத மதுபாவனைக்கு —எதிராக நடவடிக்கை—

யாழ்.மாவட்ட மதுவரித் திணைக்களத்தின் மல்லாகம் பிரதேச அலுவலகத்தினர் தமது நிர்வாகப் பரப்பினுள் வரும் பிரதேசத்தில், கடந்த மார்ச் மாதம் குற்றச் செயல்களில் ஈடுபட்டிருந்தோரை நீதிமன்றில் பாரப்படுத்தியதன் மூலமாக ரூபா 8 இலட்சம் குற்றப் பணம் பெறப்பட்டுள்ளது.

இவர்கள் சட்டவிரோத மது உற்பத்தியில் ஈடுபடுவோரைக் கைதுசெய்து தண்டனைக்குட்படுத்தும் நடவடிக்கைகளை நீதிமன்றங்களின் ஒத்துழைப்புடன் செய்து வருகின்றனர்.

பொதுமக்களிடையே சட்டவிரோத மதுவின் தீமைகள் பற்றிய விழிப்புணர்வையும் ஏற்படுத்த நடவடிக்கைகள் எடுத்து வருகின்றனர்.

இதற்கு கிராம அலுவலர்களின் ஒத்துழைப்பையும் பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. சட்டவிரோதமாக கசிப்பு உற்பத்தி செய்தல், வீடுகளில் கள் விற்பனை செய்தல், அனுமதிப்பத்திரமின்ற சாராயம் விற்றல், அனுமதிக்கப்பட்ட அளவிற்கு மேல் சாராய வகைகளின் விற்பனை, தடை செய்யப்பட்ட புனித தினங்கள், முக்கிய நாட்களில் விற்பனை செய்தல் போன்ற குற்றச் செயல்களில் ஈடுபடுவோரையே மதுவரித் துறையினர் கூடுதலான அளவில் பிடித்து வருகின்றனர். (6)

# ALP நிலையறி பரீட்சை

(யாழ்ப்பாணம்)

தீவகக் கல்வி வலயத்தில் தரம் 3 தொடக்கம் தரம் 9 வரையான நிலையறி பரீட்சைப் புள்ளிகளை கணனியில் பதிவுசெய்து, உருப்படிப் பகுப்பாய்வினையும் விடைத்தாள்களையும் எதிர்வரும் 15 ஆம் திகதி அன்று வலய கணனி வள நிலையத்திற்குக் கொண்டுவருமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் பொறுப்பாசிரியர்களைக் கேட்டுள்ளார். (6)

# கலாபூஷண விருதிற்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் 2010 ஆம் ஆண்டில் நடாத்தப்படவுள்ள கலாபூஷண விருதிற்கு கலைஞர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பிக்கும் கலைஞர்கள் 2010 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 15 ஆம் திகதியன்று 60 வயதினைப் பூர்த்தியடைந்திருத்தல் வேண்டும்.

எதிர்வரும் மே மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் நல்லூர் பிரதேச செயலக கலாசார பிரிவிடம் தொடர்புகொள்ளுமாறு நல்லூர் பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (6-30)

# புதுவருடத்தை முன்னிட்டு வசந்த விழா போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கு பிரதேச கலாசாரப் பேரவை வருடந்தோறும் புதுவருட கொண்டாட்டத்தினை முன்னிட்டு நடத்திவரும் வசந்த விழாவின் முதல் நிகழ்வாக நாளை மறுதினம் வியாழக்கிழமை பிரதேச செயலக முன்றலில் இருந்து மரதன் ஓட்டநிகழ்வு ஆரம்பமாகும்.

அன்றைய தினம் காலை போர்த்தேங்காய் அடித்தல், முட்டி உடைத்தல், கைக்கொடிச் சவாரி, கிட்டி இழுத்தல், மாலை கட்டுதல் ஆகிய போட்டிகளும் நடத்தப்பட்டு பரிசில்களும் வழங்கப்படவுள்ளது.

இப்போட்டிகளில் வலிகாமம் வடக்கு பிரதேசத்திற்குட்பட்ட போட்டியாளர்கள் மட்டும் பங்குபற்ற முடியும் என பிரதேச செயலர் எஸ்.முரளிதரன் தெரிவித்துள்ளார். (6)

# ஆளும் கட்சியின் முக்கிய புள்ளிகள் இடையே மோதல்கள்

(கொழும்பு)

பாராளுமன்றத் தேர்தல் வாக்களிப்பு முடிவடைந்த பின்னர் கொழும்பில் வாக்குகள் எண்ணப்பட்ட நிலையமொன்றில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முக்கிய புள்ளிகளும் அவர்களின் ஆதரவாளர்களும் காரசாரமான வாக்குவாதத்தில் ஈடுபட்டு முட்டி மோதியுள்ளனர்.

முன்னாள் அமைச்சர்கள் ரோகித போகொல்லாகம, சுசில் பிரேமஜயந்த, ஏ.எச்.எம். பௌசி, காமினி லொக்குகே ஆகியோர் மத்தியிலேயே சச்சரவு இடம்பெற்றதாக ஆங்கிலப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

விருப்பு வாக்குப்பட்டியலில் இவர்களின் பெயர்கள் அடியில் இருந்ததைக் கண்டதையடுத்தே அவர்கள் சச்சரவுகளில் ஈடுபட்டதாகக் கூறப்படுகிறது.

வாக்குகளை மீள எண்ணுமாறு கேட்ட வேட்பாளர்களில் ஐ.ம.சு.மு.யின் செயலாளர் சுசில் பிரேம ஜயந்தவும் ஒருவராகும். முதலில் எண்ணப்பட்டுத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் அவர் இருக்கவில்லையென்று தெரிவிக்கப்பட்டது.

ரோஹித போகொல்லாகம 45,605 வாக்குகள் பெற்றிருந்தார். சில சாவடிகளின் வாக்குகளை மீள எண்ணுமாறு அவர் கேட்டிருந்தார்.

பட்டியலில் ஏற்கனவே இரண்டாம் இடத்தில் இருந்த துமிந்த சில்வா இதற்கு ஆட்சேபனை தெரிவித்திருந்தார். இந்த விடயம் தொடர்பாக இருவருக்கும் இடையில் சூடான வாக்குவாதம் இடம்பெற்றது.

இதேவேளை பல தடவைகள் வாக்குகள் எண்ணப்பட்டபோதும் அதிகாரிகள் வேறுபட்ட எண்ணிக்கைகளை தெரிவித்தாகவும் இதனால் வேட்பாளர்கள் மத்தியில் அசௌகரியமான நிலைமை ஏற்பட்டதாகவும் முன்னாள் அமைச்சர் பந்துல குணவர்த்தன கூறியுள்ளார்.

இறுதி முடிவு வருவதற்கு அதிகாரிகளுக்கு 5 மணித்தியாலங்கள் எடுத்தது என்று அவர் மேலும் கூறினார்.

முக்கியமான வேட்பாளர்களின் ஆதரவாளர்கள் மத்தியில் முறுகல் நிலை காணப்பட்டதாக நேரில் கண்டவர்கள் கூறியுள்ளனர்.

இதேவேளை ஆளும் கட்சியைச் சேர்ந்த முன்னாள் சிரேஸ்ட அமைச்சர்களான சரத் அமுனுகம மற்றும் மஹிந்தானந்த அலுத்கமகே ஆகியோர் முன்னாள் அமைச்சர்களுக்கு இடையில் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் நாவலப்பிட்டி தேர்தல் மோசடி தொடர்பில் சரத் அமுனுகம வெளியிட்ட கருத்து காரணமாக இந்த முறுகல் நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிகிறது.

தமது நற்பெயருக்கு களங்கம் ஏற்படும் வகையில் சரத் அமுனுகம பிரசாரங்களை மேற்கொண்டு வருவதாக மஹிந்தானந்த அலுத்கமகே தெரிவித்துள்ளார்.

தமக்கு எதிராக தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்களுக்கு நட்ட ஈடாக ஐந்து கோடி ரூபா வழங்கப்பட வேண்டுமென அவதூறு வழக்குத் தொடரப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (6)

## சவுதி அரேபியாவில் இலங்கையர் ஒருவர் பலி

(கொழும்பு)

சவுதி அரேபிய ஜெத்தாவில் கந்தகார் பாலத்தின்கீழ் தங்கியிருப்பவர்களிடையே ஏற்பட்ட மோதலில் இலங்கையர் ஒருவர் உயிரிழந்தார்.

இந்த மோதலின்போது மேலும் சிலர் காயமடைந்துள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் பிரதிப் பொது முகாமையாளர் எல்.கே.ருஹுனுகே குறிப்பிட்டார்.

இலங்கைக்கு இலவசமாகத் திரும்பும் நோக்குடன் கந்தஹார் பாலத்தின்கீழ் 30க்கும் அதிகமான இலங்கையர்கள் தங்கியுள்ளனர்.

இவர்களை அந்த நாட்டின் அரச முகாம்களுக்கு அனுப்பி வைப்பதற்குத் திட்டமிட்டுள்ளதாகப் பிரதிப் பொது முகாமையாளர் மேலும் தெரிவித்தார். (6)

## பாராளுமன்ற உறுப்பினர்களின் நலன்கருதி தகவல் நிலையம்

(கொழும்பு)

ஏழாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டுத் தொடருக்கு தேவையான ஏற்பாடுகளை செய்வதற்கு பாராளுமன்ற உறுப்பினர்களின் நலன்கருதி தகவல் நிலையம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் இயங்கும் இந்நிலையம் எதிர்வரும் 16, 17, 18 ஆம் திகதிகளில் காலை 9.30 தொடக்கம் 3 மணி வரை செயற்படும் எனவும் இந்த நிலையத்திலிருந்து பாராளுமன்ற அங்கத்தவர்கள் தேவையான தகவல்களையும் மற்றும் ஆவணங்களையும் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

சகல பாராளுமன்ற உறுப்பினர்களும் தமது தேசிய அடையாள அட்டைகளை கொண்டுவரவேண்டும் என்றும் பாராளுமன்ற கட்டடத் தொகுதிக்குள் பிரவேசிப்பதற்கு பாராளுமன்ற அங்கத்தவர்களுக்கான வாயிலையே பயன்படுத்துமாறும் பாராளுமன்ற செயலாளர் நாயகம் கேட்டுள்ளார்.

மேலதிக தகவல்களை பாராளுமன்ற புள்ளி விபரவியல் பிரிவின் நிர்வாக சபைகளுக்கு பொறுப்பாகிவிருக்கும் உதவிப் பணிப்பாளர்களான ஏ. ஜி. ஜனகானந்த சில்வா, சாம்சமரவீர ஆகியோரிடமிருந்து பெற்றுக் கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (6-4)

## இரும்புச்சத்து மாத்திரையால் இதயத்தில் பாதிப்பு ஏற்படும்

### ஆய்வில் தகவல்

ஐம்பது வயதுக்கு மேற்பட்டவர்கள் உடல் ஆரோக்கியமாக இருக்க வேண்டும் என நினைத்து இரும்புச்சத்து மாத்திரைகளை விழுங்கினால் அவர்களுக்கு தேவையில்லாத புதுநோய்கள் வரக்கூடும். இதய நோய் பாதிப்பு ஏற்படவும் வாய்ப்புள்ளது என ஆய்வில் தெரியவந்துள்ளது.

அமெரிக்கன் கெமிக்கல் சொசைட்டியின் சார்பில் நடந்த ஆய்வுகளில் இது தெரிய வந்துள்ளது. இந்த ஆய்வு விவரங்களை விளக்கி கட்டுரை ஒன்றும் வெளியிடப்பட்டுள்ளது.

அதில் கூறியிருப்பதாவது,

இரும்புச்சத்து, தாமிரச்சத்து ஆகியவை கலந்த டொனிக்குகள், சத்து மாத்திரைகள் இளவயதுக்காரர்களுக்கு பெரிதும் உதவியாக இருக்கும். அதுவும் இனவிருத்தித் திறன் உள்ளவர்களுக்கு இவை நல்ல பலனைத் தரும்.

முதுமை காரணமாக இனவிருத்தித் திறனை இழந்தவர்கள் இரும்புச்சத்து, தாமிரச்சத்து உள்ள மாத்திரைகள், டொனிக்குகளை பெருமளவில் சாப்பிடுவதால் அவர்களுக்கு புது நோய்கள் வரக்கூடும்.

முதலில் வயதான காலத்தில் வரக்கூடிய நோய்கள் பாதிக்கலாம்.

இதன்படி நினைவுகள் மற்றும் சிந்தனைத் திறனை படிப்படியாக அழிக்கும் அல்ஜமியர்ஸ் நோய் ஏற்படும். இதய நோய்கள் ஏற்படக்கூடும். மேலும் வயதானவர்களுக்கு வரக்கூடிய நோய்கள் எல்லாம் அவர்களுக்கு விரைவில் வந்து சேரும்.

எனவே 50 வயதுக்கு மேற்பட்டவர்கள் இரும்புச்சத்து மற்றும் தாமிரம் தங்கள் உடலில் தேவைக்கு அதிகமாக சேர்வதைத் தவிர்க்க வேண்டும் என கட்டுரை ஆசிரியர் ஜோர்ஸ் ஜே புருவர் கூறியுள்ளார்.

இந்த நிலையைத் தவிர்க்க 50 வயதுக்கு மேற்பட்டவர்கள் செய்ய வேண்டியது என்ன என்று ஆய்வுக் கட்டுரையில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

இரும்பு, தாமிரம் கலந்த விற்றமின் மாத்திரைகள், டொனிக்குகளை தவிர்த்து விட வேண்டும். குறிப்பிட்ட இடைவெளியில் இரத்த தானம் செய்வதால் இரும்புச் சத்து உடலில் குறைந்து சமனிலை ஏற்படும். துத்தநாகம் உள்ள உணவுப் பொருட்களை சாப்பிட்டால் தாமிர உப்புகளின் அளவு குறைந்து விடும் எனவும் ஆய்வுக்கட்டுரையில் கூறப்பட்டுள்ளது. (6)

## இ.தொ.கா–தொழிலாளர் தேசிய சங்க ஆதரவாளர்களுக்கிடையில் மோதல்

(கொழும்பு)

நோர்வூட் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட போட்றி தோட்டத்தில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் தொழிலாளர் தேசிய சங்கத்தின் ஆதரவாளர்களுக்கிடையில் கடந்த ஒன்பதாம் திகதி முதல் மோதல் சம்பவங்கள் இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றன.

பொதுத் தேர்தல் முடிபுகள் வெளியாகியமையைத் தொடர்ந்து இ.தொ.கா.வின் ஆதரவாளர்கள் சிலர் போட்றி தோட்டத்திற்குச் சென்று தொழிலாளர் தேசிய சங்கத்தின் ஆதரவாளர்களின் வீடுகளைத் தாக்கியதாகவும் இதன்போது படுகாயமடைந்த சிலர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தொழிலாளர் தேசிய சங்கம் அறிவித்துள்ளது.

இதேவேளை மேற்படி சம்பவத்தில் காயமடைந்த இரண்டு தரப்புக்களையும் சேர்ந்த மூவர் கிளங்கன் மற்றும் நாவலப்பிட்டி வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் நோர்வூட் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதுடன் இச்சம்பவத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து போட்றி தோட்ட மக்கள் கவனயீர்ப்புப் போராட்டமொன்றிலும் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6)

## திருமலை துறைமுகத்தில் இந்திய கடற்படை கப்பல்

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான நட்புறவை மேம்படுத்தும் வகையில் இந்தியக் கடற்படைக்குச் சொந்தமான *மாகர்* என்ற கப்பல் திருகோணமலை துறைமுகத்திற்கு நல்லெண்ண விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளது.

குறிப்பிட்ட கப்பல் கடந்த சனிக்கிழமை திருகோணமலை துறைமுகத்தில் நங்கூரமிட்டுள்ளது.

இரு நாடுகள் மற்றும் இரு கடற் படைகளுக்கும் இடையிலான நட்புறவுகளை மேலும் வலுப்படுத்தும் நோக்குடனேயே இந்தக் கப்பல் நல்லெண்ண விஜயத்தை மேற்கொண்டு இங்கு வந்துள்ளதாக கடற்படைப் பேச்சாளர் கப்டன் அத்துல செனரத் தெரிவித்தார்.

மாகர் கப்பலின் கப்டனான கொமாண்டர் சிமோன் மத்தாயிஸ் தலைமையில் திருகோணமலை துறைமுகத்தை வந்தடைந்த இந்தக் கப்பலை இலங்கை கடற்படையினர் சம்பிரதாயபூர்வமாக வரவேற்றனர்.

கடற்படையின் கிழக்குப் பிராந்தியத்திற்குப் பொறுப்பான கட்டளைத் தளபதி ரியர் அட்மிரல் ஜயந்த கொழம்பகே இந் நிகழ்வில் கலந்து கொண்டார்.

மாகர் என்ற இந்தக் கப்பல் யுத்தத் தாங்கியும் ஹெலிகொப்டர்களும் நிறுத்தக் கூடிய வசதிகளைக் கொண்டது. 125 மீற்றர் நீளமான இக் கப்பலில் 5 ஆயிரத்து 700 தொன் பொருட்களை ஏற்றலாம். 20 அதிகாரிகளும் 235 பணியாளர்களும் இதில் சேவையாற்றி வருகின்றனர்.

சில நாட்களுக்கு நங்கூரமிட்டிருக்கும் இக்கப்பலில் இலங்கை கடற்படை அதிகாரிகள் நூறு பேர் பயிற்சி பெறவுள்ளன்ர்.

கப்பல் ஓட்டும் முறை, கப்பல் திருத்தும் முறை மற்றும் தீ அணைக்கும் முறை போன்ற பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன. (6)

## ஜனநாயக தேசிய முன்னணி உறுப்பினருக்கு நீதிமன்ற உத்தரவு

(கொழும்பு)

தேர்தல் சட்ட விதிகளை மீறியமை தொடர்பில் வாக்குமூலமொன்றை பதிவு செய்வதற்கு கோட்டை பொலிஸ் நிலையத்திற்கு வருமாறு ஜனநாயக தேசிய முன்னணியின் முக்கிய உறுப்பினர்களுக்கு கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான விஜித்த ஹேரத், சுனில் ஹந்துன்நெத்தி, அர்ஜுன ரணதுங்க, லக்ஸ்மன் நிபுணாராய்ச்சி மற்றும் ஜெனரல் சரத் பொன்சேகாவின் பாரியார் அனோமா பொன்சேகா ஆகியோருக்கே கொழும்பு நீதவான் நீதிமன்றம் இந்த உத்தரவினைப் பிறப்பித்தது.

கடந்த நாடாளுமன்றத் தேர்தல் இடம் பெறுவதற்கு 48 மணித்தியாலயத்திற்கு முன்னராக கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்னால் ஜெனரல் சரத் பொன்சேகாவை விடுவிக்குமாறு கோரி ஜனநாயக தேசிய முன்னணியினர் கூட்டமொரன்றை நடத்தியிருந்தனர்.

இது தேர்தல் சட்ட விதிகளை மீறுவதாகக் கூறி கொழும்பு நீதிமன்றத்தில் கொழும்பு கோட்டை நீதவான் லங்கா ஜயரட்ண வழக்குத் தாக்கல் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (6)

# நினைவுத் தூபிகள் அழிக்கப்படுவதை ஜனாதிபதி தடுத்து நிறுத்த வேண்டும்

## ஸ்ரீகாந்தா, சிவாஜிலிங்கம் கூட்டாகக் கோரிக்கை



வல்வெட்டித்துறை தீருவிலில் அமைந்திருக்கும் 12 விடுதலைப்புலி உறுப்பினர்களுக்கான நினைவுத் தூபியையும் விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் இளவயதில் வாழ்ந்த வல்வெட்டித்துறை இல்லத்தையும் அழிப்பதற்கு எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகளை தடுத்து நிறுத்துமாறு ஜனாதிபதிக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பின் சார்பில் அதன் தலைவர் என். சிறீகாந்தா, செயலாளர் நாயகம். எம்.கே. சிவாஜிலிங்கம் ஆகிய இருவரும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு அனுப்பி வைத்திருக்கும் கடிதத்தில் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளனர்.

''விடுதலைப் புலிகள் இயக்கத்தின் சில முன்னணி உறுப்பினர்களோடு தொடர்புபட்ட சில அமைவிடங்களையும் கட்டிடங்களையும் திட்டமிட்டு அழித்தொழிக்கும் வெறுக்கத்தக்க நடவடிக்கையில் அதிகாரங் கொண்ட சில விசமத்தனமான சக்திகள் ஈடுபட்டு வருவதை தங்கள் கவனத்திற்குக் கொண்டுவர நாம் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம்'' என்று இந்த வேண்டுகோளில் கூறப்பட்டுள்ளது.


இதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது...

''இந்திய அமைதி காக்கும் படை வந்திறங்கியதைத் தொடர்ந்து, தனது கோரிக்கைகளை இந்திய அரசாங்கத்திடம் சமர்ப்பித்தும் ஆக்கபூர்வமான பதிலெதுவும் கிடைக்காத நிலையில் உண்ணாவிரதமிருந்து அதன் 12 ஆவது நாளில் 1987 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 26 ஆம் திகதி மரணமடைந்த திலீபனின் நினைவாக எழுப்பப்பட்ட தூபி மூன்று வாரங்களுக்கு முன்னர் சிதைக்கப்பட்டது.

வரலாற்றுப் புகழ்மிக்க நல்லூர் கந்தசுவாமி கோவில் சுற்றாடலில் இருபது வருடங்களுக்கு முன் இந்த நினைவுத்தூபி நிறுவப்பட்டிருந்தது.

1987 ஐப்பசி மாதத்தில் இந்திய அமைதிப் படை முகாமொன்றில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் கொழும்பில் புலன் விசாரணையை எதிர்நோக்குவதற்காக வலுக்கட்டாயமாக விமானத்தில் ஏற்றப்படவிருந்த சூழ்நிலையில் தற்கொலை செய்து கொண்ட 12 விடுதலைப் புலிகளின் நினைவாக வல்வெட்டித்துறை தீருவிலில் அமைக்கப்பட்டிருந்த நினைவகம் இப்பொழுது மெதுவாக இரவு நேரங்களில் சிதைக்கப்பட்டு வருவதாக நம்பகமான தகவல் எமக்குக் கிடைத்துள்ளது.

விடுதலைப் புலிகள் இயக்கத்தலைவர் தனது இளம் பிராயத்தில் பெற்றோர்களுடனும் தனது குடும்ப உறுப்பினர்களுடனும் வாழ்ந்த வீடு கிட்டத்தட்ட முற்றாக சிதைக்கப்பட்ட நிலையில் அதன் முன்புறத்தின் ஒருபகுதி மட்டுமே எஞ்சியுள்ளது. கடந்த பல வருடங்களாக யாருமே வசித்திராத இந்த தனியார் சொத்து முற்றிலும் இல்லாதொழிக்கப்படுவதற்கு மேலும் ஒரு சில நாட்களே போதும்.



இந்த திட்டமிட்ட அழித்தொழிப்பு முக்கிய நோக்கத்தைக் கொண்டுள்ளது என்பது மிகவும் தெட்டத்தெளிவானது.

இறந்தவர்களுக்கான நினைவிடங்கள் என்பவை, அவர்களில் எவர் தொடர்பிலும் ஒருவர் கொண்டிருக்கக்கூடிய மனோ நிலைக்கு அப்பால், மதிப்பிற்கு உரியவை ஆகும். எமது நாட்டின் சகல மக்களினதும் பண்பாட்டு பாரம்பரியத்தின் அடிப்படை அம்சங்களில் இந்த உன்னத விழுமியமும் அடங்கி நிற்கின்றது.

யாழ்ப்பாண மக்களின் மன உணர்வுகளை புண்படுத்தியிருக்கும் இந்த விவகாரத்தில் நீங்கள் தலையிட்டு இங்குள்ள சில அதிகாரமிக்க சக்திகளினால் மேற்கொள்ளப்பட்டு வரும் இந்த நடவடிக்கையை உடனடியாக நிறுத்தப்படுவதை உறுதிப்படுத்துவீர்கள் என்று நாங்கள் நம்புகின்றோம் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

## வீதி திருத்தக் கோரிக்கை

(கொழும்பு)

மந்துவில் - ஸ்ரீபாரதி வித்தியாலயத்தில் இருந்து கோயிலாமனை ஊடாக கொடிகாமம் பிரதேசத்துக்கு செல்லும் அண்ணமார் சுடலை வீதி கடந்த 50 வருடங்களுக்கு மேலாக திருத்தப்படவில்லை.

சுமார் 7 கிலோ மீற்றர் தூரம் வரையான இவ்வீதி அமைக்கப்பட்ட காலத்தில் இருந்து இதுவரை திருத்தப்படவில்லை என பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வீதி கொடிகாமம் பிரதான சந்தைக்குச் செல்லும் வீதியாக உள்ளதென்பதோடு மந்துவில் - கோயிலாமனை மக்கள் தமது தேவைகளுக்கு இவ்வீதியை பயன்படுத்தும் அதேவேளை இப்பிரதேசத்தில் விவசாய நிலங்கள் அதிகமாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

எனவே உரியவர்கள் இவ்வீதியைப் புனரமைத்து தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (6)

## 33 வருடமாக பா.உறுப்பினர் இல்லாத பசறைத் தொகுதி

(கொழும்பு)

பசறை தேர்தல் தொகுதிக்கென கடந்த 33 வருடகாலமாக பாராளுமன்ற உறுப்பினரொருவர் இல்லாதிருந்த நிலை மேலும் தொடர்ந்த வண்ணமுள்ளது.


இதுகுறித்து பசறைப் பகுதி மக்கள் பலத்த கவலையைத் தெரிவித்துள்ளனர்.

நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலிலாவது அந்நிலை மாற்றப்பட்டு விடுமென்று எதிர்பார்த்த போதிலும் பாராளுமன்ற உறுப்பினரொருவரைத் தெரிவு செய்து கொள்ள முடியாத அவலமே ஏற்பட்டிருக்கின்றது.

இத் தொகுதியில் தமிழ் - சிங்கள மக்கள் சரிசமனாக இருந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (6)

# கடந்த தேர்தலை விட ஆளும்கட்சி 11 இலட்சம் வாக்குகள் குறைவாகப் பெற்றுள்ளது

## ரணில் விக்ரமசிங்க தெரிவிப்பு



(கொழும்பு)

ஜனவரி மாதம் 26 ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ஆளும் கட்சி பெற்றுக்கொண்டதனை விடவும் 11 இலட்சம் வாக்குகள் இந்த பாராளுமன்றத் தேர்தலில் குறைவாக கிடைக்கப்பெற்றுள்ளதென ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

மக்கள் மத்தியில் ஆதரவு கூடியிருந்தால் ஜனாதிபதித் தேர்தலில் பெற்றுக் கொண்டதனை விடவும் அதிகமான வாக்குகளை பொதுத் தேர்தலில் அரசாங்கம் பெற்றுக் கொண்டிருக்க வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியை மறுசீரமைப்பது குறித்து சகல மட்டத்தினருடனும் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருவதாகவும் கட்சியின் சார்பில் போட்டியிட்டு வெற்றியீட்டிய எவரும் ஆளும் கட்சிக்கு தாவ முயற்சித்தால் அதற்கு எதிராக கடுமையான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் குறிப்பிட்டுள்ளார். (6)

# புத்தளம் நகரசபை தலைவரின் வீட்டைத் தாக்க முயற்சி

(கொழும்பு)

புத்தளம் நகரசபை தலைவர் எம்.என்.எம். நஸ்மியின் வீட்டின் மீது தாக்குதல் நடத்த வந்த கும்பலை பாதுகாப்பு கடமையில் இருந்த பொலிஸார் துப்பாக்கி பிரயோகம் செய்து விரட்டியடித்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்று அதிகாலை புத்தளத்தில் இடம்பெற்றுள்ளது.

புத்தளம் ஜாவுசன் பள்ளி வீதியில் அமைந்துள்ள நகரசபை தலைவரின் வீட்டை நோக்கி அதிகாலை 2.30 மணியளவில் மோட்டார் சைக்கிள்களில் வந்த கும்பல் தலைவரின் வீட்டுக்குள் நுழைய முயற்சித்தனர்.

வந்த கும்பல் உரத்த குரலில் சத்தமிட்டதை அறிந்து கொண்ட நகரசபை தலைவரின் மெய்ப்பாதுகாவலராக கடமையாற்றும் பொலிஸார் அவர்களை வீட்டுக்குள் நுழைய வேண்டாம் என்று எச்சரித்தும் அதனைப் பொருட்படுத்தாது நுழைய முற்படுகையில் துப்பாக்கி பிரயோகம் செய்தனர்.

இதனையடுத்து இக்கும்பல் தப்பிச் சென்றுள்ளது. இச்செய்தி கிட்டியதும் புத்தளம் பொலிஸார் உடனடியாக ஸ்தலத்திற்கு விரைந்து சென்று மேலதிக பாதுகாப்பினை வழங்கியுள்ளனர்.


இதுகுறித்து புத்தளம் நகரசபை தலைவர் எம்.என்.எம்.நஸ்மி புத்தளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். (6)

# நாற்பது இலட்சம் ரூபா பெறுமதியான வெளிநாட்டு போலி சிகரெட்டுக்கள் மீட்பு

வெளிநாட்டிலிருந்து கொண்டு வரப்பட்ட 40 இலட்சம் ரூபா பெறுமதியான போலி சிகரெட்டுக்கள் மீட்கப்பட்டிருப்பதுடன் அதனுடன் சம்பந்தப்பட்ட இருவர் கைது செய்யப்பட்டிருப்பதாக கலால் திணைக்களத்தின் சுப்ரின்டன் பிரபாத் ஜயவிக்கிரம தெரிவித்தார்.

டுபாயிலிருந்து சட்ட விரோதமான முறையில் கொண்டுவரப்பட்டிருக்கும் கோல்ட் லீப் மற்றும் கோல்ட் சீல் வகையைச் சேர்ந்த 2 இலட்சம் சிகரெட்டுக்களே கைப்பற்றப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

தனியார் வியாபாரியொருவரது களஞ்சிய சாலையிலேயே மேற்படி சிகரெட்டுக்கள் ஆடைகள் மற்றும் பாதணிகளுடன் பதுக்கி வைக்கப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளன. (6)



ஆறுகால்மடம் அரசடி ஞானவைரவர் ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவத்தையொட்டி நடத்தப்பட்ட சைவ சமயப் போட்டிப் பரீட்சையில் அதி கூடிய புள்ளிகள் பெற்ற மாணவன் ஒருவருக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளர் அருந்தவராஜா பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம்.

# களம் பல கண்ட யாழ் கோட்டை 2

## பிலிப் தே ஒலிவேறா

### 28,ஒக்டோபர் 1591

பண்ணை நெருங்கியபோது, யாழ்ப்பாணக் குடாநாட்டின் தென்கரையோரம் தெளிவாகத் தெரிந்தது. தென்கரையோரம் முழுவதும் ஒரே கட்டைக்காட்டு மரங்களினாலும், கண்ணா மரங்கள் நிறைந்த சதுப்பு நிலத் தாவரங்களினாலும் மூடப்பட்டிருந்தது.

வானளாவி உயர்ந்து நின்றிருந்த பனை மரங்கள் காட்டின் வட விளிம்புகளில், சோளகக் காற்றுக்கு ஈடுகொடுத்து அசைந்தாடின; *எதிரியே வராதே, இது எங்கள் சுதந்திர பூமி* அக்காட்டுப் தரப்பிற்கு அப்பால் நாகரி கமான நல்லூர் நகரம் இருப்பதனை அவர்கள் அறிவார்கள். அக்காட்டு மரங்களுக்கிடையில் பண்ணைக் கரையில் முருங்கை கற்களாலும் களி மண்ணாலும் கட்டப்பட்டு பீலி ஓடுகளால் வேயப்பட்ட இரு சிறு கட்டிடங்கள் இருப்பதை மொன்டொன்சா கண்டான்.

பறவைகள் சுதந்திரக் காற்றில் மிதந்து கண்ணா மரங்களில் தங்கி இனம் பெருக்கின. எனினும் கொழும்புத்துறை அலுப்பாந்திப்பகுதிகள் போக்கு வரத்துக்குரிய துறைகளாக விளங்கியதால் குடியிருப்புக்களைக் கொண்டிருந்தன. அவற்றை விட பண்ணையில் காட்டுப்பரப்பில் கரையோரமாக முஸ்லிம் வர்த்தகர்களின் இரு சிறு பண்டகசாலைகள் அமைந்திருந்தன. அவற்றை அமைக்க யாழ்ப்பாண மன்னன் அவர்களுக்கு அனுமதி வழங்கியிருந்தான். பகலில் நகரத்தில் வியாபாரம் செய்து விட்டு இரவு வேளைகளில் கரையோரப் பண்டக சாலைகளுக்கு திரும்பி விட வேண்டும் என்ற மன்னனின் கட்டளையை அராபிய முஸ்லிம்கள் ஒழுங்காக பேணினர். இத்தகைய முஸ்லிம் வர்த்தக சாலைகள் யாழ்ப்பாணப் பண்ணையில் மாத்திரம் அன்றி நீர் கொழும்பு, கொழும்பு, காலி



போர்த்துக்கேயரின் யாழ்ப்பாணக்கோட்டை அதன் கிழக்குப் பாகத்தில் அமைந்துள்ள சீதாரி (பறங்கித்தெரு நகரம்),வடக்கே காணப்படும் பெரியகடை (நகரம்) ,வலன்ரைனின் வரைபு -1726

அவை முஸ்லீம் வர்த்தகர்களின் வர்த்தகசாலைகள். ஆம், யாழ்ப்பாணக் கோட்டை கம்பீரமாக எழுந்து நின்ற இடத்தில் முதலில் முஸ்லிம் வர்த்தகர்களின் இரு வர்த்தக சாலைகள் இருந்தன. நாவந்துறையில் இருந்து அரியாலை வரையிலான கடற்கரையோரமும் , உள்வாங்கி நாவலர் வீதி வரையிலான பரப்பும் அக் கால கட்டத்தில் காட்டு மரங்கள் நிறைந்த பிரதேசமாக விளங்கின.

மனித சஞ்சாரம்ற்ற இப்பரப்பில் சிறுகாட்டு விலங்குகள் சுதந்திரமாகச் சஞ்சரித்தன. மான்கள், முயல்கள், நரிகள் வெகு இயல்பாக அலைந்து திரிந்தன. பலவிதமான கடற்கரையோரப் பகுதிகளிலும் காணப்பட்டன.

(முதலான, கரையோரப் பகுதிகளிலும் காணப்பட்டன.)

போர்த்துக்கேய படை கரை இறங்கியது. யாழ்ப்பாண மன்னன் புவிராச பண்டாரம் பரா ரா சசேகரம் தனது வீரர்களுடன் போர்த்துக்கேய ஆக்கிரமிப்புப்படையை எதிர்த்தான். பெரும் யுத்தம் மூண்டது. சுதந்திரத்தைப் பேண ஆக்கிர மிப்பாளர்களை எதிர்த்து அணி திரண்ட தமிழர் படை களப் பலியாகியது. யாழ்ப்பாண அரசனைக் கைப்பற்றிய போர்த்துக்கேய தளபதி பூர்த்தாடு அவனது சிரசை கொய்து ஈட்டியிற் குத்தி நிறுத்தி வைத்ததன் மூலம் தனது ஆதிக்க வெறியைத் தீர்த்துக் கொண்டான். கைப் பற்றிய பூமியைத் தொடர்ந்து போர்த்துக்கேயரின் கீழ் வைத்திருப்பதிலும் இடர்ப்பாட்டை பூர்த்தாடு நன்குணத்தான். அதனால் ஊர் பிரமுகர்களை கூட்டி எதிர்மன்ன சிங்ககுமாரன் என்ற அரச குலத்தானை யாழ்ப்பாணத்தில் மன்னாக நியமித்து போர்த்துக்கேயரின் மேலாதிக்கத்தை ஏற்று அரசாளும் படி பணித்து பெரும் திரவியத்திறைகளுடன் மரக்கலம் ஏறினான். அவ்வாறு திரும்பும் போது தமக்கு எதிராகச் செயற்பாடுவார்கள் எனக் கருதிய எண்ணூறு வடக்கரையும் சில சோனகரையும் சிரச்சேதம் செய்துள்ளான். அத்துடன் பண்ணைக் கரையில் இருந்த முஸ்லிம்களின் வர்த்தகசாலைகளை அளித்து அவற்றில் இருந்து பத்து ஆயிரம் கண்டி நெல்லையும், நானூறு கண்டி அரிசியையும் கொள்ளையடித்துச் சென்றான். (கண்டி என்பது ஓர் அளவு-ஐந்நூறு இறாத் தல்களைக் கொண்டது.



### 1621 , பெப்ரவரி மாதம் , 2ஆம் திகதி

யாழ்ப்பாண மன்னனுடன் ஏற்பட்ட மனக்கசப்பால் போர்த்துக்கேயர் மீண்டும் 1620ஆம் ஆண்டு படையெடுத்து யாழ்ப்பாணவரசை கைப்பற்றிக்கொண்டான். யாழ்ப்பாண இராச்சியத்தில் கடைசிச் சுதந்திர மன்னன் சங்கிலி (குமாரன்), செகரராச சேகரன் யாழ்ப்பாணம் தன் சுதந்திரத்தை இழந்த இறுதிப் போரில் சிறைப்பட்டு மரணமடைய நேரிட்டது. போர்த்துக்கேயரின் இப் படையெடுப்பிற்கு கற்பித்தான் *மேஜயர் பிலிப்தே ஒலிவேறா*( Phillip de olibeira) என்பான் தலைமை வகித்தான். 1621ஆம் ஆண்டு பிலிப்தே ஒலி வேறா நல்லூரை தன்னுறைவிடமாக்கிக்கொண்டான்.

நல்லூரில் பெரிய கோயிலாக நல்லூர் கந்தசுவாமி கோயில் விளங்கியது. இன்று முத்திரைச் சந்தியில் கிறிஸ்தவ தேவாலயம் இருக்கும் இடத்தில் இக்கோவில் வானளாவிய இராஜகோபுரங்களுடன் கோட்டை போன்ற மதிற்சுவர்களுடனும் தென்னிந்திய கோயில்களில் பாரிய வடிவில் அமைந்திருந்தது. பிலிப்தே ஒலிவேறா அப்பெரிய கோயிலை இடித்துத் தரைமட்டமாக்குமாறு கட்டளையிட்டான். நல்லூர் கந்தசுவாமி கோயிலை அடி அத்திவாரத்தோடு கிளறிக் குவிக்குமாறு கட்டளையிட்டான். முருகைக் கற்களினாலும் சுண்ணாம்பு கற்களினாலும் சுதை கொண்டு கட்டப்பட்டிருந்த அக்கோயிலின் கற்கள் மலை போல குவிந்தன.

இப்பெரிய கோயிலில் கிறிஸ்தவர் அல்லாதவர்கள் மிக்க ஈடுபாடுடையவர்களாக இருந்தனர். அவன் அதனை அழிக்காது விட்டால் அவன் விரும்பிய எல்லாவற்றையும் வழங்குவதாக யாழ்ப்பாண பிரமுகர்கள் அவனுக்கு வாக்குறுதி அளித்தன. ஆனால் அவன் ஒரு மதப்பற்று மிக்க கத்தோலிக்கனாதலால் அவர்களின் நடவடிக்கை அக்கோயிலை அழிப்பதற்கு கொண்டிருந்த விருப்பத்தினை மேலும் அதிகரிக்க வைத்தது. எனவே அதனை அத்திவாரம் இல்லாது அழிக்குமாறு கட்டளையிட்டான் என குவேறோஸ் பாதிரியார் தனது நூலில் கூறுகிறார். ஒலிவேறா யாழ்ப்பாணத்தின் ஏனைய பகுதிகளில் இருந்த சைவாலயங்கள்,வைணவ ஆலயங்கள் அனைத்

**செங்கை ஆழியான்**

தையும் உடைத்துத்தள்ளுமாறு பணித்தான் கீரிமலை திரித்தம்பலேஸ்வரன் கோயில்,பொன்னாலை வரதராஜப்பெருமாள் கோவில் போன்ற பெரிய ஆலயங்களும் தரைமட்டம் ஆக்கப்பட்டன. போர்த்துக்கேய பறங்கிகளின் கண்களில் பட்ட சைவ கோயில்கள் அனைத்தும் கற்குவியல்கள் ஆக்கப்பட்டன. (தொடரும்)

## நாவலப்பிட்டி திருமலை மீள் தேர்தலுக்கு வாக்காளர் அட்டைகள் விநியோகம்

(கொழும்பு)

இலங்கையில் தேர்தல் முடிபுகள் இரத்துச் செய்யப்பட்டுள்ள நாவலப்பிட்டி மற்றும் திருகோணமலை தொகுதிகளில் வாக்களிப்புப் பிரிவுகளின் மீள் தேர்தலுக்கான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை மீண்டும் விநியோகிக்கவுள்ளதாகத் தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.

சித்திரைப் புத்தாண்டின் பின்னர் இந்த வாக்காளர் அட்டைகளை தபாலில் சேர்க்கவுள்ளதாக தேர்தல்கள் செயலகம் குறிப்பிட்டுள்ளது.

கடந்த எட்டாம் திகதி நடைபெற்ற பொதுத் தேர்தலில் கண்டி மாவட்டத்தின் நாவலப்பிட்டி தொகுதியிலுள்ள 37 வாக்களிப்பு பிரிவுகளுக்கான தேர்தல் முடிபுகளை இரத்துச் செய்வதற்கு தேர்தல்கள் ஆணையாளர் தயானந்த திசாநாயக்க தீர்மானித்தார்.

இந்தப் பிரிவுகளில் சுதந்திரமானதும் நியாயமுமான வாக்களிப்பு நடைபெறவில்லை எனத் தீர்மானிக்கப்பட்டதன் பிரகாரம் தேர்தல்கள் ஆணையாளர் இந்த முடிவை எடுத்த தாகக் கண்டி மாவட்டத் தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரி கோட்டாபய ஜயரத்ன கூறினார்.

இது தவிர திருகோணமலை மாவட்டத்திலும் வாக்களிப்பு நிலையமொன்றின் தேர்தல் முடிபு இரத்துச் செய்யப்பட்டது.

தேர்தல் முடிபுகள் இரத்துச் செய்யப்பட்ட வாக்களிப்பு பிரிவுகளில் எதிர்வரும் 20ஆம் திகதி மீள் தேர்தலை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது. (6-4)

## புதிய சபாநாயகர் தொடர்பில் விரைவில் தீர்மானம் எடுக்கப்படும்

### சுசில் பிறேமஜயந்த தெரிவிப்பு

(கொழும்பு)

புதிய அரசாங்கத்தில் யார் சபாநாயகராக நியமிக்கப்படுவார் என்பது தொடர்பில் கட்சிக்குள் பேசி தீர்மாணம் எடுக்கப்படும் என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் சுசில் பிரேம்ஜயந்த தெரிவித்தார்.

கொழும்பில் அமைந்துள்ள மகாவலி கேந்திர நிலையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதுவரை காலமும் சபாநாயகராக பதவி வகித்தவர் தொடர்ந்து நீடிக்கப்படுவாரா? அல்லது புதியவர் ஒருவர் சபாநாயகராக நியமிக்கப்படுவாரா? என்று ஊடகவியலாளர் வினவியிருந்தார்.

புதிய சபாநாயகர் தொடர்பில் கட்சிக்குள் விரைவில் பேச்சு நடத்தி தீர்மானம் ஒன்றை எடுப்போம் என்றும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் சுசில் பிரேம ஜெயந்த குறிப்பிட்டார். (4-6)

## புதிய நாடாளுமன்றில் ஐ.தே.க. சக்தி வாய்ந்த எதிர்க்கட்சியாக விளங்கும்

### ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

புதிய நாடாளுமன்றத்தில் ஐக்கிய தேசிய கட்சி ஒரு சக்தி வாய்ந்த எதிர்க்கட்சியாக விளங்குமென ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக்கட்சியின் தலைமையலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற புதிய நாடாளுமன்ற உறுப்பினர்களில் முதலாவது ஒன்றுகூடலில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒன்றுகூடவுள்ள புதிய நாடாளுமன்றத்தில் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் குரல் எழுப்பக்கூடிய எதிர்க்கட்சியாக ஐக்கிய தேசியக்கட்சி செயற்படவேண்டும். இந்த செயற்பாட்டிற்காக அனைவரும் ஒன்றிணைந்து கட்சியின் அனைத்து வளங்களை யும் ஒன்று சேர்த்து செயற்படவேண்டும்.

இதற்காகவே மக்கள் உங்களை தெரிவு செய்து நாடாளுமன்றம் அனுப்பியுள்ளார்கள் என்றும் ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்துள்ளார். (6-9)

# றோயல் கல்லூரி, கொழும்பு -07

## கல்வி பொதுத் தராதர உயர்தரப்பரீட்சை -2010

## வழிகாட்டல் பரீட்சை

### உயிரியல் -I — *Biology-I*

*2 மணித்தியாலங்கள்* — *2 Hours*

01) தாவரக் கலத்திலுள்ள இழைமணியில் காணப்படும் இறைபோசோம்கள்
1. சயனோபற்றிரியாவிலுள்ளதை விட பெரியவை ,ஆனால் அதன் கூறுகள் , ஒத்தவை
2. பச்சையவுருமணியிலுள்ளதைவிட சிறியவை .ஆனால் கூறுகளில் வேறுபட்டவை
3. பருமனிலும் கொண்டுள்ள கூறுகளிலும் பற்றீரியாவிலுள்ளதை ஒத்தவை
4. பற்றீரியாக் கலங்களின் குழியவுருவிலுள்ளவற்றின் பருமனை ஒத்தவை ஆனால் கூறுகள் வேறுபட்டவை
5. இயூகரியோட்டக் கலங்களின் குழியவுருவிலுள்ளவற்றின் பருமனை ஒத்தவை.

02) ஒரு கருதுகோளானது ,
1.தொடர்ச்சியான அவதானங்களை விளக்கும் ஆலோசனை
2.ஒரு பரிசோதனையின் பின் உறுதிப்படுத்தப்படும் ஆலோசனை
3. பரிசோதனைகளால் உறுதிப்படுத்தமுடியாத ஆலோசனை
4.கொள்கையை உறுதிப்படுத்தும் ஆலோசனை
5.நியமச்சட்டங்களிலிருந்து வேறுபடும் புதிய ஆலோசனை

03) பின்வருவனவற்றுள் புரதமல்லாதது ,
1.கொலாஜன் 2. தைமின் 3.இன்சுலின் 4.கெரட்டின் 4. பட்டு

04) கொல்கி உபகரணத்தின் தொழில் அல்லாதது ,
1.நடுமென்றட்டு உருவாவதில் தொடர்புபட்டது
2.கிளைக்கோபுரதம் தொகுக்கப்படும் மையம்
3.கலச்சுரப்புகளை பொதி செய்தல்
4.இலைசோசோம் உற்பத்தி
5.கல நஞ்சகற்றல்

05) தாவரபுன் வெற்றிடத்தின் கூறு அல்லாதது ,
1.நீர் 2. அந்தோசயனின் 3.கரட்டின் 4.இனுயுலின் 5.உப்பு

06) DNA கலத்தின் இடையவத்தையில் நடைபெறாதது ,
1.தொகுப்பு 2.குழியவுருபுன்னங்களின் இரட்டிப்பு
3.கருப்புரதங்களின் தொகுப்பு 4.பெரிய அளவில்சக்தி சேமிப்பு
5. கதிாநாாகள் உருவாதல்


07) அமைவிடம், தொழில் என்பன தொடர்பான தவறாகப் பொருந்தியுள்ள சோடியைத் தெரிவு செய்க

| தொழில் | அமைவிடம் |
|---|---|
| 1.கிரப்பின் வட்டம் | இழைமணியின் தாயம் |
| 2.கிளைக்கோப்பகுப்பு | குழியவுரு |
| 3.புரததொகுப்பு | புன்கரு |
| 4.DNAஇரட்டிப்பு | பச்சையஉருமணி |
| 5. ஒளித்தொகுப்பின் ஒளித்தாக்கம் | தைலகோயிட்மென்சவ்வு |

08) ஒடுக்கற்பிரிவில் கோப்புக்கள் தோன்றுவது முக்கியம் வாய்ந்தது ஏனெனில் இது
1.பெற்றோரின் அதே பிறப்புரிமை அமைப்பு, மகட்கலங்களில் தோன்றுவதை உறுதி செய்கிறது
2.புதிய நிறமூர்த்தத்தில் காணப்படும் பரம்பரை அலகுகளின் எண்ணிக்கை மாறாமல் பேணப்படுவதை உறுதிப்படுத்துகிறது.
3.புதிய பரம்பரை அலகுகள் தோன்றுவதற்கான சந்தர்ப்பத்தை வழங்குகிறது
4.அமைப்பொத்த நிறமூர்த்தங்கள் சோடி சேர்வதை தடைசெய்கின்றது
5.அரைநிறவுருக்கள் கதிர்நார்களுடன் இணைவதை அனுமதிக்கின்றது

09) DNA பிரதியெடுத்தலை சரியாக விளக்கும் கூற்று எது?
1.அமினோ அமிலத்தை உற்பத்தி செய்கின்றது
2.செய்திகாவும் RNA ஐ உற்பத்தி செய்கின்றது
3.இதன் விளைவாக DNAதொகுப்பு அதிகரிக்கின்றது
4.இது ஒரு பகுதி பாதுகாப்பு செயன்முறையாகும்
5. இறைபோசோமின் மேற்பரப்பில் நிகழ்கிறது.

10) ஒளித்தொகுப்பின் ஒளியில் தங்கியிராத தாக்கத்தின் படி நிலைகளை கீழ் வரும் வரைபடம் காட்டுகிறது




அனேக NADP க்கள் ஒட்சியேற்றப்படும் படி எது?
1.A 2.B 3.C 4. D 5. E

11) ஒளித்தொகுப்பின் ஒளித்தாக்கத்தில் நிகழ்வது பின்வருவனவற்றுள் எது?
1.ADP பொஸ்போரிலேற்றம்
2.எட்சோசு பொஸ்பேற்றுக்கள் நீர்ப்பகுக்கப்படும்
3.தாழ்த்தப்பட்ட NADP ஒட்சியேற்றப்படும்
4.RuBP காபொட்சிலேற்றப்படும்
5.றையோஸ் பொஸ்பேற்றுக்கள் தாழ்த்தப்படும்

12) அழியும் ஆபத்தை எதிர்நோக்கியுள்ள இனங்கள் எவ்வாறு அழைக்கப்படும்
1.ஆபத்திற்குள்ளாகிய இனம்
2.எதிர்காலத்தில் ஆபத்தை எதிர்நோக்கியுள்ள இனம்
3.ஆபத்தை எதிர்நோக்கிய இனம் 4. அரிய இனம்
5.அருகிச் செல்லும் வாய்ப்பு குறைவாக உள்ள இனம்

இரு விலங்குக் கூட்டத்தின் பொதுவான பாகுபட்டு இயல்புகளை பின்வரும் பட்டியல் காட்டு கின்றது.

| | |
|---|---|
| ஈரலிப்பான மென்மையான மேற்றோல் | – அனுக்கழிநீரகவகைச் சிறுநீரகம் |
| ஓடுள்ள கருவூணுள்ள முட்டை | – வட்டமான, நீளப்பாடான தசைப்பட்டைகள் உடற்சுவரில் காணப்படல் |
| சுவாசப்பை | – தோலில் செதில்கள் காணப்படல் |
| முள்ளந்தண்டு | – கலன்கள் விருத்தியடைந்த தோல் |
| நன்கு விருத்தியடைந்த உடற்குழி | – நீர் நிலையியல் வன்கூடு |

13) பின்வருவனவற்றுள் எச்சோடி அங்கிகள் மேற்கூறப்பட்ட இயல்புகளைக் காட்டுகின்றன
1.அம்பிபியாவும் சிலந்தரேற்றாவும் 2.அம்பிபியாவும் அனலிடாவும்
3.அம்பிபியாவும் றெப்ரீலியாவும் 4.சீலந்திரேற்றாவும் பறவைகளும்
5.நெமற்றோடாவும் பறவைகளும்

14) பொருத்தமற்ற இணைப்புச் சோடியை தெரிவு செய்க
1. Ophiuroidea - பூரணமற்ற சமிபாட்டுத்தொகுதி
2. Bivalvia - பூரணமற்ற சமிபாட்டுத்தொகுதி
3. Cestoda - சமிபாட்டுத்தொகுதி இல்லை
4. Turbellaria - பூரணமற்ற சமிபாட்டுத்தொகுதி
5. Nematoda - பூரணமற்ற சமிபாட்டுத்தொகுதி

15) சுவாச மேற்பரப்பு தொடர்பான பொருத்தமற்ற இணைப்புச் சோடியைத் தெரிவு செய்க.
1. Nereis-பரபாதம்
2.Frog - சுவாசப்பை
3.Starfish- நீர்க்கலன் தொகுதி
4.Clams (மட்டி) - சுவாசப்பூக்கள்
5.Inseets ஏட்டுநுரையீரல்

16) மூலவுயிர்களை உறைநிலையில் சேமிப்பது
1.குளிர் சேமிப்பு 2. In-Situ காப்பு 3.Ex- Situ காப்பு
4.In vitroகாப்பு 5.Gene bank

17) ஒரு அங்கியானது பின்வரும் இயல்புகளைக் கொண்டுள்ளது.
இயோகரியோற்றா, தற்போசணி, ஒருமடியம்,இலிக்கின் ஏற்றப்படாத செலுலோசு கலச்சுவர். இவ்வங்கி யாது?
1.பிறையோபைற்றா பெண்புணரித் தாவரம் 2.பன்னத்தின் வித்தித் தாவரம்
3.பங்கசு பூஞ்சண இழை 4.ஒளித்தொகுப்பு பற்றீரியா
5. ஒளித்தொகுப்பு புரட்டோசோவா

18) புறவன்கூட்டை கொண்டிராத கணம் யாது?
1.சீலந்தரேற்றா 2.கோடேற்றா
3.எக்கைனோடேமேற்றா 4.மொலஸ்கா 5.ஆத்திரப்போடா

19) அந்தோபைற்றாக்களின் இயல்பு அல்லாதது
1.வித்து விருத்தியடைதல் 2.வலையுருவான, சமாந்தர நரம்பமைப்பு
3. இரட்டைக் கருக்கட்டல் 3. முளையப்பை காணப்படல்
5.பெண்கலச்சனனி காணப்படல்

20) பூச்சிகளிலோ அவற்றின் வாழ்க்கை வட்டத்திலோ காணப்படாதது பின்வருவனவற்றுள் எது?
1.சுவாசத்துவாரம் காணப்படல் 2.நீர்வாழ் குடம்பிநிலை காணப்படல்
3.மல்பீசியன் சிறுகுழாய் காணப்படல்
4.அகக் கருக்கட்டல் 5.தரைச்சூழலில் மட்டும் முட்டையிடல்

21) விலங்கு இராச்சியம் தொடர்பாக சரியான கூற்றைத் தெரிவு செய்க
1.நெமற்றோடாக்கள் துண்டுபட்டவை , போலி உடற்குழி கொண்டவை
2.எல்லா விலங்குகளும் இழையமட்ட ஒழுங்கமைப்பைக் கொண்டுள்ளன
3.எல்லா முள்ளந்தண்டுகளிலும் தாடைகளை கொண்டவை
4.அனலிட்டுகள் துண்டுபட்டவை , உடற்குழியுடையவை
5. செஸ்ரோடாக்கள் துண்டுபட்டவை , முப்படை உள்ளவை

22) சரியான கூற்றைத் தெரிவு செய்க.
1.Poganatum - வித்தித்தாவரம் புணரித்தாவரத்தில் முழுவதுமாக தங்கியுள்ளது
2.Nephrolepis -இலைகளின் கீழ்ப்புறத்திலுள்ள குவைகளில் வித்திக்கலன் காணப்படும்
3.Cycas - கூம்பி தோற்றுவிக்கப்படல்
4.Sellaginella - ஒரு மடியவித்திகள் காற்றால் பரவும்
5.Anthophyta - ஒடுக்கற்பிரிவு முளையப்பையில் நிகழும்.

23) அஞ்சியோஸ்பேம்களில் புணரித் தாவர சந்ததியை பிரதிநிதித்துவப்படுத்துவது,
1.வித்திலுள்ள முளையத்தின் கலம்
2. முளையப்பையும் மகரந்தமணியின் கருவும்
3.வித்தின் வித்தகவிழையம்
4.மகரந்தப்பையும் மூலவுருப்பையகமும்
5.சூலகமும்,கேசரமும்

24) மொலிப்தனம் பற்றாக்குறையால் ஏற்படுவது,
1.இலைநுனி வளைதல் 2.இலைநுனி மஞ்சளடைதல்
3. புன்வெற்றிடவிருத்தி குறைவடைதல் 4.நைத்திரேற்று குறைவடைதல் 5.வாடல்

25) துளைக்கும் போது உரியத்தினூடு சாறு பாய்வதற்கான காரணம்
1.மயிர்த்துளைத்தன்மை 2. நீர்நிலையியல் அமுக்கம்
3. வேரமுக்கம் 4. ஆவியுயிர்ப்பு இழுவை
5.உட்கொள்ளுகை

26) பின்வருவனவற்றுள் எது பரபரிவுத் தூண்டலின் விளைவு அல்ல,
1.கண்மணி சுருங்குதல்
2. உமிழ்நீர் சுரப்பு அதிகரித்தல்
3.இரைப்பைத் தொழிற்பாடு அதிகரித்தல்
4.சுவாசப்பை குழாய்களின் சுருக்கம்
5.இதயத்துடிப்பை அதிகரித்தல்

27) மனிதனின் கழிவகற்றல் தொடர்பாக சரியான கூற்று எது,
1.கலன்கோள வடிதிரவத்திலுள்ள 99% மான நீரும் குளுக்கோசும் மீள அகத்துறிஞ்சப்படும்
2.கலன் கோள வடிதிரவத்திலுள்ள 90% மான நீரும் சோடியம் அயனும் மீள அகத்துறிஞ்சப்படும்
3.பெரும்பான்மையான நீர்-சேய்மை மடிந்த சிறுகுழாயில் மீள அகத்துறிஞ்சப்படும்
4. குளுக்கோசு பெரும்பாலும் அண்மை மடிந்த சிறுகுழாயில் மீள அகத்துறிஞ்சப்படும்
5.பொட்டாசியம் அயன் சுரத்தலுக்கு சக்தி தேவை இல்லை

28) உணவுத் திரளை எனப்படுவது,
1.உமிழ்நீரினால் ஈரலிப்பாக்கப்பட்ட அரைக்கப்பட்டு திரளாக்கப்பட்ட உணவு
2.இரைப்பையில் நிகழும் பகுதிச் சமிபாட்டின் விளைவாகத் தோன்றிய குறைதிண்மப் பதார்த்தம்
3.சிறுகுடலில் அகத்துறிஞ்சப்பட்ட பாற்தன்மையாக குழம்பாக்கப்பட்ட கொழுப்பு
4.அகத்துறிஞ்சலிலும் அசைவிலும் பங்குகொள்ளும் சமிபாடடையாத பதார்த்தங்கள்
5. முன் சிறுகுடலிலிருந்து வெளியேறும் அமிலத்தன்மையான இரைப்பைப்பாகு

29) இன்சுலினின் தொழிற்பாட்டின் விளைவாக நிகழ்வது,
1.தசைக்கலங்களால் குளுக்கோசு உள்ளெடுக்கப்படும் அளவு அதிகரிக்கும்
2.கலங்களால் குளுக்கோசு உள்ளெடுக்கப்படும் அளவு குறையும்
3.சிறுநீரில் குளுக்கோசு காணப்படும்
4.குருதிக்கலன்களில் கொழுப்பு படியும்
5.கொழுப்புச் சேமிப்பு இல்லாது போகும்

30)பின்வருவனவற்றில் எதன் அதிகரிப்புடன் மூலையூட்டிகளின் அடிப்படை அனுசேப வீதம் குறைவடையும்.
1.உடல் திணிவு 2.தசைத் தொழிற்பாடு 3. சுவாசப்பை காற்றூட்டல் வீதம்
4.தைரொயிட் தொழிற்பாடு 5.பிற்கபச் சுரப்பியின் தொழிற்பாடு

31)கருக்கட்டலின் பின் மஞ்சட் சடலம்
1.சிதைவடையும் 2. Progesterone ஐ உருவாக்கும்
3.FSHஇனால் பேணப்படும் 4.LH ஐ.உருவாக்கும்
5.Oestrogen ஐ உருவாக்கும்

32) புகைத்தல் தொடர்பான தவறான கூற்று,
1.சிகரெட் புகை சீதம் சுரத்தலைத் தூண்டும்
2.புகையிலுள்ள நிக்கொட்டின் தற்காலிகமாக இதயத்துடிப்பு வீதத்தை அதிகரிக்கச் செய்யும்
3.சிகரெட் புகையிற்கு கூடியளவு வெளிக்காட்டப்படல் நுரையீரல் புற்றுநோயைத் தோற்றுவிக்கலாம்
4.சிகரெட் புகை சுவாசச் சுவட்டில் பிசிர்த் தொழிற்பாட்டைத் தூண்டும்
5.புகையிலையிலுள்ள காபனோரொட்சைட்டு குருதிச் சுற்றோட்டத்தைப் பலவீனப் படுத்தும்

33)மனிதனின் உணவில் காணப்படும் விற்றமின் K இன் பிரதான பங்காக அமைவது,
1.பார்வை ஊதாவை உருவாக்குவதில் பங்கு கொள்வது
2.தோல் குறைபாடுகளைத் தடுத்தல்
3.கல்சியம்,பொசுபேற்று அனுசேபத்தில் பங்குகொள்ளுதல்
4.குருதி உறைதலுக்கான காரணிகளின் உற்பத்தியைத் தூண்டுதல்
5. சுவாச நொதியப் பாதையில் துணைக் காரணியாகத் தொழிற்படுதல்

34) சாதாரண ஆரோக்கியத்துடன் முழுமையாக வளர்ந்த ஆண் முதிர்மூலவுரு தொடர்பாக சரியான கூற்று,
1.சகல தலையோட்டு என்புகளும் முழுமையாக வன்மையடைந்திருக்கும்
2.விரல் நுனிவரை நகம் வளர்ந்திருக்கும்
3.கண் இமைகள் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்கப்பட்டிருக்காது
4.உடல் அடர்த்தியான உரோமத்தால் மூடப்பட்டிருக்கும்
5.விதைப்பை விருத்தியடைந்திருக்காது.

35)இரு பெற்றோரின் நான்கு பிள்ளைகளும் வெவ்வேறான குருதிவகையுடையவர்களாக இருப்பின் பெற்றோரின் குருதி வகைகளாக இருக்கக்கூடியது,
1. A யும் Bயும் 2. A யும் Oவும் 3. A யும் ABயும்
4. B யும் Oவும் 5. B யும் ABயும்

36)என்லேயின் தடத்தில் காணப்படும திரவம் அதிக செறிவுடையதாக இருப்பது,
1.ஏறு புயத்தில் 2. இறங்கு புயத்தில்
3.கொண்டை ஊசி வளைவில்
4. சேய்மை மடிப்படைந்த சிறுகுழாயின் ஆரம்பத்தில்
5.சேர்க்கும் கானுக்கும் சேய்மை மடிப்படைந்த சிறுகுழாய்க்கும் இடையில் அமைந்த வளைவில்

37) பின்வருவனவற்றில் தெறிவினைச் செயற்பாடு அல்லாதது,
1.பிரகாசமான ஒளிபடும் போது கண் இமைகள் மூடுதல்
2.உணவு விழுங்குதல் 3.அதிக குளிரின் போது நடுக்கம் உருவாதல்
4.உணவைக் காணும் போது உமிழ்நீர் சுரத்தல் 5.முழங்கால் திடீரென இழுத்தல்

38) நைதரசன் வட்டத்தில் நைத்திரேற்றாக்கும் பற்றீரியாக்கள்
1.அமோனியம் சேர்வைகளை நைத்திரேற்றுக்களாகவும் ,நைத்திரைற்றுக்களாகவும் மாற்றும்
2.வளிமண்டல நைதரசனை அமோனியம் சேர்வைகளாக மாற்றும்
3.வளிமண்டல நைதரசனை நைத்திரேற்றுக்களாக மாற்றும்
4.நைத்திரேற்றுக்களை வளிமண்டல நைதரசனாக மாற்றும்
5.அமினோ அமிலங்களை நைத்திரேற்றுக்களாக மாற்றும்

39) பின்வருவனவற்றில் நுண்ணங்கி பூச்சிகொல்லியாக பயன்படுத்தப்படுவது,
1) Bacillus subtilis 2) Bacillus thuringiensis
3) Bacillus polymixa 4) Escherichia coli
5) Thiobacillus ferroxidons


40) பின்வருவனவற்றில் கலமென்சவ்வைச் சேதப்படுத்தி பற்றீரியாக்களின் வளர்ச்சியை நிரோதிக்கும் நுண்ணுயிர் கொல்லி,
1) Griseofulvin 2)Penicillin 3)Tetracycline
4) Polymyxin 5) Erythromycin

41) பின்வருவனவற்றில் உயிருள்ள நுண் அங்கிகளைக் கொண்டிராதது,
1) பாய்ச்சராக்கப்பட்ட பால் 2) B.C.G வக்சீன்
3) கடல்நீர் 4) வாயினூடாக வழங்கப்படும் போலியோ வக்சின்
5) ஏற்புவலி தடுப்பூசி

42) பற்றீரியாவை வளர்ப்பதற்கு பயன்படுத்தப்படும் கண்ணாடி உபகரணங்களை கிருமியளிக்க பயன்படுத்தப்படும் முறை,
1) 121°C வெப்பநிலையில் ஈரவெப்பமுறை 2) 160°C யில் உலர் வெப்பமுறை
3) UV கதிர்வீச்சு முறை 4) அற்ககோல் 5.அடைகாக்கும் உபகரணம்

43) பின்வருவனவற்றில் காய்களின் பழுத்தலைத் தூண்டுவது,
1) அப்சிசிக்கமிலம் 2) எதிலீன் 3) இன்டோல் அசற்றிக்கமிலம்
4) ஜிபறலின் 5) சைற்றோகைனின்

44) கீழ்த்தரப்பட்டுள்ள வரைபு தூயநீரில் இடப்பட்ட தாவரக்கலத்தின் நீரழுத்தம், கரைய அழுத்தம், அமுக்க அழுத்தம் என்பவற்றிற்கிடையிலான இடைத்தொடர்பைக் காண்பிக் கின்றது.




வரைபுகளுக்கான சரியான பெயரீட்டைக் காட்டுவது,

| | X | Y | Z |
|---|---|---|---|
| 1) | $\psi$ | $\psi_p$ | $\psi_s$ |
| 2) | $\psi$ | $\psi_s$ | $\psi_p$ |
| 3) | $\psi_p$ | $\psi$ | $\psi_s$ |
| 4) | $\psi_p$ | $\psi_s$ | $\psi$ |
| 5) | $\psi_s$ | $\psi_p$ | $\psi$ |

45) ஒளித்தொகுப்புச் செயற்பாட்டிற்கு உட்படும் பச்சை அல்காவின் தொங்கலிற்கு கதிர்த் தொழிற்பாடுடைய $^{14}Co_2$ சேர்க்கப்படும் போது பின்வருவனவற்றில் முதன்முதலாக அக் காபனைக் கொண்டு தோன்றக்கூடிய யதார்த்தம்.
1) குளுக்கோசு 2)PGA 3)RuB 4)PEP 5)PGAL

46) பின்வருவனவற்றில் புரதங்கள் தொடர்பாகச் சரியான கூற்று,
1) புரதங்கள் யாவும் நொதியங்கள்
2) புரதங்கள் யாவும் கோள வடிவானவை
3)கார $CuSO_4$ உடன் வெப்பமேற்றும் போது ஊதா நிறத்தைத் தரும்
4) புரதங்கள் யாவும் பல்பகுதியங்கள்
5) உயர் காபனீரொட்சைட்டு செறிவு உள்ள போது புரதங்கள் அமைப்பழிவுக்குள்ளாகும்

47) பின்வருவனவற்றில் கலச்சுவரின் கூறாக அமையாதது,
1) கைற்றின் 2) பெப்ரிடோகிளைக்கன் 3) சுபரின்
4) கியூற்றின் 5) இலிக்னின்

48) $C_4$ தாவரங்கள் தொடர்பான பின்வரும் கூற்றுகளில் தவறானது,
1) கலன் கட்டுகள் தடித்த சுவருள்ள புடைக்கல விழையங்களால் சூழப்பட்டிருக்கும்
2) இருவகையான பச்சையவுருமணிகள் காணப்படும்
3) பொசுபோகிளிசரிக்கமிலம் தாழ்த்தப்படுவதில் Rubisco நொதியம் பங்குகொள்ளும்
4) தொடக்கத்தில் $Co_2$ பொஸ்போ பீனோல் பைருபிக் அமிலத்தால் பாதிக்கப்படும்
5) காபனீரொட்சைட்டு ஈடுசெய்நிலை மிகவும் தாழ்வானது

49) உரியக்கடத்தலில் அமுக்க ஓட்ட மாதிரி குறிப்பிடுவது,
1) உரியச்சாறு எப்போது இலையிலிருந்து வேருக்குச் செல்லும்
2) உரியச்சாறு எவ்வாறு வேரிலிருந்து இலைகள் நோக்கிச் செல்லும்
3) மூலத்திலிருந்து தாழிநோக்கி நீரோட்டம் சுக்குரோசை எடுத்துச் செல்லும்
4) மறை அமுக்க அழுத்தப்படித்திறன் இலைகளிலிருந்து வேர் நோக்கித் தொழிற்படும்
5) சேதனப் பதார்த்தங்களின் கடத்தலானது உரியத்தில் ஒரு திசையிலேயே நடை பெறும்

50) சரியான கூற்றைத் தெரிவு செய்க.
1) இலைவாய்களினூடாக மட்டுமே ஆவியுயிர்ப்பு நடைபெறும்
2) ஒளிக்குரிய பிறபோசணிகள் காபன் தேவையை காபனீரொட்சைட்டிலிருந்து பெற்றுக்கொள்கின்றன.
3) Proteoplytic (புரதப்பகுப்பு) அங்கிகள் புரதத்தின் மீது தொழிற்படுவதன் மூலம் $H_2S$ஐ உருவாக்கும்
4) பூச்சியுண்ணித் தாவரங்கள் பிறபோசணிகள்
5) பூக்கும் தாவரங்கள் யாவும் தற்போசணிகள்

பின்வரும் சாவியைப் பயன்படுத்தி 51 முதல் 60 வரையான வினாக்களுக்கு விடையளிக்க
ABD சரியாயின் -1 ACD சரியாயின் -2
AB சரியாயின் -3 CD சரியாயின் -4
வேறு ஏதாவது விடையாயின்-5

51) பின்வருவனவற்றில் ஈரலின் தொழில்கள்
A) திரவவிழையப் புரதங்களைத் தொகுத்தல்
B) கொழுப்பு அனுசேபத்தை ஒழுங்காக்குதல்
C) விற்றமின் Dயைத் தொகுத்தல்
D) விற்றமின் Dயைச் சேமித்தல்
E) சமிபாட்டு நொதியங்களை உருவாக்குதல்

52) பின்வருவனவற்றில் நெபிரோலெப்பிஸ் தொடர்பாகத் தவறானது,
A) இலைகள் அச்சு சுருண்ட தளிரிலையைக் காட்டும்
B) கலன் தாவரம்
C) காற்றினால் வித்துக்கள் பரம்பலடையும்
D) பல்லின வித்தியுண்மையைக் காட்டும்
E) சுயாதீன புணரித்தாவரம்

53) Phylum Coelenterata விற்கு மட்டுமுரிய இயல்பு அல்லாதது,
A) பிசிர்கொண்ட குடம்பி B) பரிசக் கொம்பு
C) அழன்மொட்டுக்கள் D) குடற்குழி E) ஆரைச் சமச்சீர்

54) ஒளித்தொகுப்பின் ஒளித் தாக்கத்தில் நடைபெறுவது,
A) நீரின் ஒளிப்பிரிகை
B) ADP பொசுபரிலேற்றம் அடைய NADP தாழ்த்தப்படும்
C) ATP நீர்ப்பகுப்படைய $NADPH_2$ ஒட்சியேற்றப்படும்
D) PGA ஆனது PGAL ஆகத் தாழ்த்தப்படும்
E) ATP பொசுபரிலேற்றம் அடையும்

55) Kingdom fungi தொடர்பாகத் தவறானவை,
A) பதிய உடல் பிரிவிலி B) பிறபோசணைக்குரிய போசணைமுறை
C) புணரிகளைத் தோற்றுவிக்கும் D) ஒடுக்கற்பிரிவு நிகழாதது
E) கலச்சுவரில் கைற்றின் காணப்படும்

56) மனித சூல்வித்தகம் தொடர்பான பின்வரும் கூற்றுக்களில் சரியானவை,
A) கருத்தரித்தலின் ஆரம்ப நிலையில் hCG யை சுரக்க ஆரம்பிக்கும்
B) கர்ப்பகாலம் முழுவதும் Progesterone ஐச் சுரக்கும்
C) எந்த ஒரு நுண்ணங்கியினதும் பாதையைத் தடைசெய்யும்
D) அமினியன் பாய்பொருளைச் சுரக்கும்
E) சில குறிப்பிட்ட பிறபொருளெதிரிகள் தாயிலிருந்து முதிர்மூலவுருவை சென்றடைவதைத் தடுக்கும்.

57) மனிதனில் காணப்படும் இருகால் இடப்பெயர்ச்சி முறையுடன் தொடர்புடைய இயல்புகள்,
A) பாதத்திலுள்ள வளைவுகள்
B) தொடை என்பின் சேய்மை அந்தம் நடுக்கோட்டை நோக்கி வளைந்திருத்தல்
C) பக்க அல்லது நடுக்கோட்டு சம்மட்டியுரு
D) ஒப்பீட்டளவில் பெரிய பாதம்
E) பெருவிரல் எதிரிடையாக காணப்படாமை


58) நுண்ணங்கிகள் -உற்பத்தி தொடர்பாக சரியான சோடிகள்
A) *Amylase -Aspergillus oryzae*
B) *Tetracyclin - Streptomyces aureofaciens*
C) *Invertase -Amylase oryzac*
D) *L-Lysine - Corynebacterium glutamicus*
E) *Vitamin* $B_{12}$ *- Bacillus subtilis*

59) அப்சிக்கமிலம்,
A) சாதகமற்ற சூழ்நிலையில் அரும்புகளில் உறங்கு நிலையை ஏற்படுத்தும்
B) இலை உதிரும்போது வெட்டுப்படை உருவாதலைத் தூண்டுதல்
C) பூத்தலைத் தூண்டும்
D) உருளைக்கிழங்கில் அரும்புகளின் உறங்குநிலையைப் பேணுதல்
E) இழைய வளர்ப்பில் மூடுபடை உருவாகத் தூண்டும்

60) Herpe simplex வைரசு,
A) DNA யைக் கொண்டது B) RNA யைக் கொண்டது
C) Icosahedral வகைக்குரியது D) உறை கொண்டது
E) மனிதன் தவிர வேறு விலங்குகளையும் தொற்றக்கூடியது

*அன்பு மாணவர்களே!*
2010 ஆகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள கல்வி பொதுத்தராதரப் உயர்தரப்பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கு என இன்று முதல் உங்கள் வலம்புரியில் மாதிரி வினாக்கொத்துகள் ஓர் சீரான ஒழுங்கில் வெளிவரும். அத்துடன் வழமை போன்று இம்முறையும் நாட்டின் சகல பாகங்களிலும் உள்ள பிரபல ஆசிரியர்களினால் தயாரிக்கப்பட்ட வினாப்பத்திரங்கள் பிரசுரிக்கப்படும். - [illegible]

# இலங்கையிலே தமிழ்க்கல்வியும் ஆய்வும் தொடர்ச்சியும் வளர்ச்சியும் 5


ஆறுமுகநாவலர்

பாடப் புத்தகங்களிலே, சொற்களைப் பிழையானவை இவை சரியானவை இவை என்றும், எழுத்து வழக்கில் உள்ளவை இவை பேச்சு வழக்கில் மட்டும் உள்ளவை இவை என்றும் மாணவர்களுக்கு எடுத்துக்காட்டுமிடத்துக் கூடிய கவனம் வேண்டப்படுவதாய்த் தெரிகிறது. வழக்காற்றைக் கவனத்தில் கொள்ளாது பழைய இலக்கண நூல்களில் மட்டும் தங்கியிருத்தல் சரியாகாது.

"கடிசொல் இல்லைக் காலத்துப் படினே" என்று தொல்காப்பியர் கூறியுள்ளமையும் நோக்கற்பாலது.

இன்றைய உலகில் பரந்த தேடலுக்கான ஆர்வமும் அவசரமும் அதிகரித்து வருகின்றன. புதிய விடயங்களை வழங்கும் ஆற்றல் தமிழுக்கு இல்லையாகையால் ஆங்கிலத்தை நாடவேண்டியுள்ளது என்று பலர் கூறுகின்றனர். "பஞ்சபூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்புத்தகம் புதிய கலைகளைப் பற்றிப் பேசிய மகாகவி பாரதி, "சென்றிடுவீர் எட்டுத்திக்கும்-கலைச் செல்வங்கள் யாவுங் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்" என்று கூறிச் சுமார் ஒரு நூற்றாண்டாகிவிட்டது.சில செயற்பாடுகள் நடந்ததும் தொடக்கப்பட்டதும் உண்மைதான். ஆனால் தொடரும் வளர்ச்சிகளுக்கும் மாற்றங்களுக்கும் நாம் ஈடு கொடுத்திருக்கிறோமா? மொழிபெயர்ப்பினைப் பொறுத்தவரை அது 'கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதை', புதிய சொற்களை அவரவர் விரும்பியவாறு, மொழி பெயர்த்துக் கொள்கின்றனர். அத்துறையில் ஒருங்கிணைப்பும் பலதுறை அகர முதலிகளும் அவசரமாக வேண்டப்படுகின்றன. இன்று இன்றியமையாத சில உச்சரிப்புகளுக்குமான எழுத்துருவங்களை ஏற்றுக் கொள்வதற்கு வேண்டிய எழுத்துச் சீர்திருத்தங்களைப் பற்றியும், அதுகுறித்தும் புதிய சொற்களை உள்வாங்குவது குறித்தும் முடிவு செயயக் கூடிய ஓர் அறிஞர் குழாம் அமைககப்பட வேண்டியதன் அவசியம் குறித்தும் நீண்டகாலமாகப் பேசப் பட்டாலும் செயலில் ஒன்றையும் காணோம்.

முழுமைவாய்ந்த ஒரு தமிழ் அகராதி உருவாக்கப்படவேண்டும். பல்வேறு துறைகளுக்குமான கலைச்சொல் அகர முதலிகள் ஆக்கப்படுவதோடு தொடர்ந்து இற்றைப்படுத்தப்பட வேண்டும்.தரம் வாய்ந்த ஒரு மும்மொழி அகரமுதலியும் தோற்றுவிக்கப்படவேண்டும். இத்துறைகளில் சில முயற்சிகள் பெரும் பணச் செலவில் அங்குமிங்கும் மேற்கொள்ளப் பட்டாலும், ஒருமுகப்படுத்தப்பட்ட காத்திரமான முயற்சி காணப்படவில்லை. ஒத்த பொருளுடைய சொற்கள் மற்றும் தொடர் களைப் பட்டியற்படுத்தும் இணைப் பொருள் சொற்களஞ்சியம் (Thesaurus) புதுச் சொல்லாக்கத்துக்கும் மொழித் திறன் விருத்திக்கும் உதவக்கூடியது. அத்தகைய ஒரு சொற்களஞ்சியம் உருவாக்கப்பட வேண்டியது அத்தியாவசியமாகும். இலங்கையில் வசிக்கின்ற ஈழத் தமிழர், இந்திய வம்சாவழித் தமிழர், முஸ்லிம்கள் ஆகியோரது பண்பாட்டுத் தனித்துவங்களும அவர்களுக்கிடையிலான ஊடாட்ட உறவுகளும் நுணுகி ஆராயப்பட வேண்டும். தேசிய நூதன சாலைகள் திணைக்கள இனவியலா ளராகப் பணியாற்றிய கலாநிதி எம்.டி. ராகவன் யாழ்ப்பாணத்து மலபார்வாசி கள் என்ற தலைப்பில் சில கருத்துக் களை வெளியிடடு அரைநூற்றாண் டுக்கு மேல் ஆகிறது. அவை சம்பந்தமான ஆய்வு களேதும் தொடர்ந்து மேற்கொள்ளப் பட்டதாகத் தெரியவில்லை.

சிங்கள மொழிக்கும் தமிழ் மொழிக்கும் இடையிலும் சிங்கள இலக்கியத்துக்கும் தமிழ் இலக்கியத்துக்கும் இடையிலும் வளர்ந்த ஊடாட்டங்கள், உறவுகள் பற்றியும் விரிவானவையும் ஆழமானவையுமான ஆய்வுகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். பண்பாட்டைப் பொறுத்தமட்டில் சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் இடையே ஒத்த தன்மைகள் பெருமளவிற் காணப்படுகின்றன. இந்துமதத் தெய்வங்கள் பலவற்றைப் பௌத்தர்கள் வழிபடுகின்றனர். ஏழாலை மு.ஞானப்பிரகாசர் சைவசித்தாந்தம் குறித்துத் தாம் எழுதிய கட்டுரைகள் சிலவற்றைப பௌத்த பிக்கு ஒருவரைக் கொண்டு சிங்களத்துக்கு மொழி பெயர்க்க முயன்றதாக அறியக்கிடக்கின்றது. சிவனொளிபாதமலை, கதிர்காமம், முன்னேஸ்வரம் முதலான தலங்களோடு சிங்கள மக்கள் ஏற்படுத்திக் கொண்ட தொடர்புகளும் விண்டு நோக்க வேண்டியவை. இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்ததைத் தொடர்ந்து இடம்பெற்ற தேசியக்கொடி பற்றிய விவாதங்களின் போது, யாழ்ப்பாண இளைஞர் காங்கிரசோடு சம்பந்தப்பட்டவர்கள், தேசியக்கொடியில் சிங்கத்துக்குப் பதிலாகச் சிறிபாதவை (சிவனொளிபாதத்தை)ப் பொறித்தால் அது தேசிய ஒற்றுமை உரம்பெற உதவும என்று விதந்துரைத்தனர். இந்த விடயங்கள் தொடர்பான ஆய்வுகளில் சிங்கள அறிஞர்கள் அதிக ஆர்வம் காட்டுவார்களோவென்பது சந்தேகத்திற்கிடமானதாகையால், தமிழறிஞர்கள் இவற்றின்பால் கவனம் செலுத்துவது அவசியமாகும்.

எமது நாட்டுப்புறவியல் சம்பந்தமான விஞ்ஞானபூர்வமான ஆய்வுகள் பற்றியும் சிந்திக்கவேண்டும். உதாரணமாக தவிலும் பறைமேளமும் அடிக்கப்படும், குறிப்பாகப் போட்டிபோட்டுக் கொண்டு ஆற்றலை வெளிப்படுத்தும் வகையில் அடிக்கப்படும் பக்குவம் கவனத்துக்கு உரியது. மரபுவழித் தமிழ்க் கல்வி அங்கீகாரம் குறைந்து அலட்சியப் படுத்தப்படும் நிலையில் உள்ளமை விசனத்துக்கு உரியது. எமது பாரம்பரியத்தையும் பழைய விழுமியங்களையும் இழத்தல் ஏற்றதன்று. புலவர் வகுப்புக்களை நடாத்தத் தமிழவேள் மேற்கொண்ட முயற்சிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட வேண்டியனவாகும். கிடைத்தற்கரியனவாகிவிட்ட சிறந்த நூல்களின் மறுபதிப்புக்களை வெளியிடுவதும் வரவேற்கத்தக்கது. பேராசிரியா தெ.பொ.மீனாட்சிசுந்தரனார் அடிக்குறிப்புகளோடு பதிப்பித்த சைமன் காசிச்செட்டியின் Tamil Plutarch என்ற நூலைக் கிடைக்கச் செய்யமுடியுமாயின், அது பெரும் பயனுடையதாகும்.

எல்லாவற்றையும் பற்றிப் பொறுமையாகவும் நிதானமாகவும் பரிசீலித்து இலங்கையில் செய்யப்பட வேண்டியவை எவையென்பதையும், செய்யப் படக்கூடியவை எவை என்பதையும் முடிவு செய்து செயற்பாட்டைத் தூண்ட இலங்கையின் எல்லாப்பகுதிகளையும் சேர்ந்த தமிழியல் அறிஞர் கருத்தரங்கொன்று கூட்டப்படுதல் விரும்பத்தக்கது.

பேராசிரியர்
சி.தில்லைநாதன்

தமிழவேள் க.இ.க.கந்தசுவாமி திருக்குறள் மாநாட்டில் ஆற்றிய உரையின் இறுதியிலே கூறியதை நினைவுபடுத்தி என் உரையினை முடிக்கிறேன்: "ஆக்கபூர்வமான பணியை இச்சங்கம் மேற்கொள்ள வேண்டும். சங்க வருங் காலத்திற்காகத் தொடங்கிய பணிகள் பல ஆண்டுகளாகச் செயற்படாமல் உள்ளன. வருங்காலத்தில் இச்சங்கம் இந்நாட்டில் உயர் தமிழ்ப்பணிகள் செயயும் ஸ்தாபனமாக வளரவேண்டும்." (முற்றும்)

# பிரதமர் பதவி தமக்கே வழங்கப்பட வேண்டும்

## டி.எம்.ஜயரட்ன தெரிவிப்பு

(கொழும்பு)

பிரதமர் பதவி தமக்கே வழங்கப்பட வேண்டும் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவரான டி.எம்.ஜயரட்ன தெரிவித்துள்ளார்.

தாம் பிரதமர் பதவிக்கு நியமிக்கப்பட வேண்டும் என்பதே அனைவரினதும் பொதுவான விருப்பமாகக் காணப்படுகிறது எனவும் பிரதமர் பதவி தமக்கு வழங்கப்பட வேண்டும் என்பதற்காக நாடு முழுவதிலும் உள்ள விஹாரைகள், கோயில்கள், தேவாலயங்கள் மற்றும் பள்ளிவாசல்களில் மக்கள் பிரார்த்தனைகளை மேற்கொண்டு வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த உறுப்பினர் என்ற ரீதியில் பதவி தமக்கு வழங்கப்படுவதே நியாயமானது என குறிப்பிட்ட அவர் 58 ஆண்டுகளாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் அங்கம் வகிப்பதாகவும், யாழப்பாணம் முதல் அம்பாந்தோட்டை வரையிலான மக்கள் தம்மை பிரதமராகப் பார்ப்பதற்கு ஆசைப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது இரண்டாம் தவணைக்காக பதவிப் பிரமாணம் செய்து கொள்ளும் நாள் வரையில் மட்டும் தமக்கு பிரதமர் பதவி வழங்கப்படவுள்ளதாக அரசியல் வட்டாரத்தில் வெளியாகி யுள்ள தகவல்கள் குறித்து எதுவும் தெரியாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (6-4)

# பலாங்கொடைக்கு 17 வருடங்களின் பின் பாராளுமன்ற பிரதிநிதித்துவம்

(கொழும்பு)

7ஆவது பாராளுமன்றத் தேர்தல் இரத்தினபுரி மாவட்டத்தில் ஐ.ம.சு.முன்னணி 7 ஆசனங்களையும், ஐ.தே.முன்னணி 3 ஆசனங்களையும் பெற்றுக்கொண்டுள்ளன.

பலாங்கொடைத் தேர்தல் தொகுதியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் அமைச்சருமான அல்லாஹ் எம்.எல்.எம். அபூசாலிக்குப் பின்னர் சுமார் 17 வருடங்களாக பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் இன்றிக் காணப்பட்ட பலாங்கொடைத் தேர்தல் தொகுதியில் சப்ரகமுவ மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் ரஞ்சன் ராமநாயக்க இம் முறை வெற்றி பெற்றுள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் பலாங்கொடைத் தேர்தல் தொகுதியில் போட்டியிட்ட நெசவுக் கைத்தொழில் அமைச்சர் மகிந்த ரத்னதிலக மற்றும் சப்ரகமுவ மாகாண சபையின் உறுப்பினர் பானுமுனுப்பிரிய ஆகியோர் தோல்வியடைந்துள்ளனர்.

7இலட்சத்து 34 ஆயிரத்து 651 பதிவு செய்யப்பட்ட வாக்குகளைக் கொண்ட இரத்தினபுரி மாவட்டத்தில் இம்முறைத் தேர்தலில் 2 இலட்சத்து 54 ஆயிரத்து 256 பேர் வாக்களிக்கத் தவறியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (6)

# சட்டவிரோத தேர்தல் நடவடிக்கையில் ஈடுபட்ட கிராம அலுவலருக்கு விளக்கமறியல்

(கொழும்பு)

தேர்தல் தினத்தன்று காத்தான்குடியில் சட்டவிரோத தேர்தல் நடவடிக்கையில் ஈடுபட்ட காத்தான்குடியைச் சேர்ந்த கிராம உத்தியோகத்தர் ஒருவரை காத்தான்குடி பொலிஸார் கைதுசெய்துள்ளனர். தேர்தல் தினத்தன்று புதிய காத்தான்குடிப் பகுதியை கடமைப் பிரதேசமாகக் கொண்ட குறித்த கிராம உத்தியோகத்தர் சட்டவிரோத தேர்தல் நடவடிக்கையில் ஈடுபடுவதாக கபே அமைப்பின் கிழக்கு மாகாணத்துக்குப் பொறுப்பான சுகலா குமாரி காத்தான்குடிப் பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டினையடுத்து காத்தான்குடிப் பொலிஸார் இக் கிராம உத்தியோகத்தரை கைதுசெய்துள்ளனர்.

இவர் கைது செய்யப்படும் போது குறித்த கிராம உத்தியோகத்தரிடம் 21 தேசிய் அடையாள அட்டைகளையும் 15 தற்காலிக அடையாள அட்டைகளையும் வைத்திருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

வாக்குச் சாவடியொன்றுக்கு முன்பாக நின்று இவ் அடையாள அட்டைகளை வழங்க முற்பட்ட போதே பொலிஸார் இவரை கைது செய்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கைது செய்யப்பட்ட இக்கிராம உத்தியோகத்தரை மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற நீதிபதி வி.ராமகமலன் முன்னிலையில் பொலிஸார் ஆஜர்படுத்திய போது எதிர் வரும் 20 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிப்தி உத்தரவிட்டுள்ளார். (6)

# சாலமன் தீவில் பயங்கர பூகம்பம்

(ஹோனியாரா)

பசுபிக் கடலில் ஏற்பட்ட பயங்கர பூகம்பத்தால் சாலமன் தீவு குலுங்கியது.

மேற்கு பசுபிக் கடலில் உள்ள சாலமன் தீவு அருகே நேற்று முன்தினம் பயங்கர பூமி அதிர்ச்சி ஏற்பட்டது.

ரிக்டர் அளவு கோலில் 7.1 ஆக பதிவான அதன் மையம் மகிரா தீவுக்கு 97 கிலோ மீற்றர் தென் மேற்கே கடலுக்கு அடியில் 52 கிலோ மீற்றர் ஆழத்தில் இருந்தது.

இந்த பூகம்பத்தால் பெரிய அளவில் சுனாமி எழாவிட்டாலும் சிறிய அளவில் 100 கிலோ மீற்றர் தூரத்துக்குள் சுனாமி அலைகள் எழலாம் என்று எச்சரிக்கப்பட்டது.

ஆனாலும் சுனாமி அலைகள் எழவில்லை. பூமி அதிர்ச்சி ஏற்பட்டபோது அந்த பகுதியில் இருந்த வீடுகள், கட்டிடங்கள் குலுங்கின.

மக்கள் அலறி அடித்து வீடுகளை விட்டு வெளியே ஓடினார்கள். உயிர்ச் சேத விபரம் உடனடியாகத் தெரியவில்லை. (6)

# தாய்லாந்தில் அரசியல் வன்முறை
# 20பேர் பலி; 800க்கும் மேற்பட்டோர் காயம்

(பாங்கொக்)

தாய்லாந்தில் ஏற்பட்ட அரசியல் வன்முறையில் 20 பேர் உயிரிழந்தனர். 800க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். 18 ஆண்டுகளுக்குப் பின் தாய்லாந்தில் நடக்கும் மோசமான அரசியல் வன்முறை இது என்று




தெரியவந்துள்ளது.

தாய்லாந்தின் முன்னாள் பிரதமர் தாக்ஷினாவத்ராவின் ஆதரவாளர்கள் கடந்த சில நாட்களாக அரசைக் கண்டித்து மத்திய பாங்கொக் நகரின் 2 இடங்களில் ஆர்ப்பாட்டம் நடத்தி வருகின்றனர். அவர்களை சிவப்புச் சட்டை ஆர்ப்பாட்டக்காரர்கள் என்று அழைத்து வருகின்றனர்.

இந்த நிலையில் ஆர்ப்பாட்டக்காரர்களை, ஆர்ப்பாட்டம் நடத்திய இடத்திலிருந்து அப்புறப்படுத்த தாய்லாந்து இராணுவ வீரர்கள் சனிக்கிழமை முயன்றனர்.

இதனால் ஆத்திரமடைந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் இராணுவ வீரர்கள் மீது கல்வீசித் தாக்கினர். இதைத் தொடர்ந்து இராணுவ வீரர்கள் கண்ணீர்ப் புகைக்குண்டுகளை வீசினர். ஆனால் ஆர்ப்பாட்டம் செய்தவர்கள் கலைந்து செல்லவில்லை. இதைத் தொடர்ந்து வானை நோக்கி துப்பாக்கியால் சுட்டு அவர்களை எச்சரிக்கை செய்தனர்

அப்போதும் அவர்கள் கலைந்து செல்ல மறுத்ததையடுத்து இராணுவ வீரர்கள் துப்பாக்கிச் சூடு நடத்தினர். பதிலுக்கு ஆர்ப்பாட்டக்காரர்களும் வெடிகுண்டுகளை வீசினர். இதில் 16 பொதுமக்கள் உட்பட 20 பேர் இறந்தனர். இதில் 4 இராணுவ வீரர்களும் அடங்குவர்.

வன்முறையில் இதுவரை 800க்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர். அவர்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். துப்பாக்கிச் சண்டையின்போது 5 இராணுவ வீரர்களை ஆர்ப்பாட்டக்காரர்கள் பணயக் கைதிகளாக பிடித்து வைத்துக் கொண்டனர். மேலும் ஆயுதங்கள் அடங்கிய இராணுவ வாகனத்தையும் அவர்கள் கைப்பற்றினர்.

சண்டைக்குப் பின்னர் இராணுவ வீரர்கள் ஆர்ப்பாட்டக்காரர்களின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டனர். இந்தச் சம்பவம் குறித்து அரசு செய்தித் தொடர்பாளர் பனிட்டன் வட்டநயகார்ன் கூறியதாவது,


1992 ஆம் ஆண்டுக்குப் பின் தாய்லாந்தின் பாங்கொக் நகரில் நடைபெறும் மோசமான அரசியல் வன்முறை இதுவாகும்.

இதுதொடர்பாக விசாரணை நடத்த உத்தரவிடப்பட்டுள்ளது. அங்கு அமைதியை ஏற்படுத்துவதற்காக அரசு தொடர்ந்து முயன்று வருகிறது. போராட்டத் தலைவர்களுடன் பிரதமரின் செயலாளர் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறார் என்றார்.

இதுகுறித்து சிவப்புச்சட்டை ஆர்ப்பாட்டக்காரர்கள் கூறியதாவது,

நீதிமன்ற உத்தரவின் பேரில் பிரதமர் தாக்ஷினிடமிருந்து ஆட்சியை 2008 ஆம் ஆண்டு பறித்தனர். தற்போதுள்ள அரசு இராணுவத்தின் பலத்துடன் ஆட்சிக்கு வந்துள்ளது. மக்களுக்காக எதையுமே இந்த அரசு செய்யவில்லை.

அரசியல் கலவரத்தால் ஏழை மக்களின் உயிர்கள் பறிக்கப்பட்டுள்ளன. ஏராளமானோர் காயமடைந்துள்ளனர். மேலும் வன்முறை நடக்காமல் தடுக்க இந்த விடயத்தில் நாட்டின் அரசர் பூமிபால் அதுல்யதேஜ் தலையிட வேண்டும் என்று அவர்கள் தெரிவித்தனர். (6)




தாய்லாந்து பிரதமராக இருந்த தக்ஷின் ஷினவத்ரே இராணுவ புரட்சி மூலம் பதவியில் இருந்து அகற்றப்பட்டதை தாங்கிக் கொள்ள முடியாத அவரது ஆதரவாளர்கள், தொடர்ந்து போராட்டம் நடத்தி வருகின்றனர். பாராளுமன்றத்தை முற்றுகையிட்ட சிவப்பு சட்டை அணிந்த போராட்டக்காரர்களால் பதட்ட நிலை ஏற்பட்டுள்ளது.

# சூடானில் பாராளுமன்ற மற்றும் ஜனாதிபதி தேர்தல்கள் ஆரம்பம்

சூடானின் வரலாற்று முக்கியத்துவம் மிக்க தேர்தல்கள் ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமானது. கடந்த 24 வருடங்களில் சூடானில் பல கட்சிகள் பங்கேற்கும் தேர்தல்கள் நடைபெறுவது இதுவே முதல் தடவையாகும்.

வட மற்றும் தென் சூடானியப் பிராந்தியங்களுக்கு இடையிலான உள்நாட்டுப் போரை முடிவுக்குக் கொண்டு வந்த சமாதான உடன்படிக்கையொன்றின் அங்கமாகவே மேற்படி ஜனாதிபதி, பாராளுமன்ற மற்றும் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்களை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இன்று செவ்வாய்க்கிழமை வரை நடைபெறும் இத்தேர்தல்களில் வாக்களிக்க 16 மில்லியன் வாக்காளர்கள் பதிவு செய்துள்ளனர். இத்தேர்தல்களானது இராணுவ அடிப்படையிலான அரசாங்கத்தை ஜனநாயக அரசாங்கமாக மாற்றுவதற்கான முக்கிய திருப்புமுனையாக கருதப்படுகிறது.

அதேசமயம் தேர்தல் ஆணையகத் தலைவர் அபெல் அலியர் விபரிக்கையில்,

தமது அமைப்பு ஜனாதிபதி பஷீரின் தேசிய காங்கிரஸ் கட்சி தொடர்பில் ஆதரவைக் கொண்டிருக்கவில்லை என்று தெரிவித்தார்.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றமானது போர்க்குற்றங்கள் தொடர்பில் பஷீருக்கு எதிராக பிடியாணை பிறப்பித்தது முதற்கொண்டு அவர் ஜனநாயகத்தை பலப்படுத்த வேண்டிய தேவைப்பாட்டை எதிர்கொண்டுள்ளதாகக் கூறப்படுகிறது. (6)

# பாகிஸ்தானிய இராணுவம் நடத்திய தாக்குதலில் 12 தலிபான்கள் பலி

பாகிஸ்தானிய இராணுவம் நடத்திய தாக்குதல்களில் 12 தலிபான்கள் கொல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆப்கானிஸ்தானிய எல்லைப்பகுதியில் பாகிஸ்தானிய இராணுவத்தினர் நடத்திய முற்றுகையின் போது குறித்த தலிபான்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

தலிபான்களின் மறைவிடங்களை நோக்கி வான் மற்றும் தரைவழித் தாக்குதல்கள் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை பாகிஸ்தான் விமானப்படையினர் அண்மையில் நடத்திய வான் தாக்குதலில் 40 தலிபான்கள் கொல்லப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தாக்குதல் இடம்பெற்ற பிரதேசங்களுக்கு ஊடகவியலாளர்கள் அனுமதிக்கப்படாத காரணத்தினால் சேத விபரங்கள் பற்றிய சரியான தகவல்களை வெளியிடுவதில் சிக்கல் நிலைமை காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த மாதம் முதல் பாகிஸ்தான் படையினர் நடத்திய தாக்குதல்களில் 205 க்கும் மேற்பட்ட படைவீரர்கள் கொல்லப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

இதேவேளை பாகிஸ்தான் படையினர் கூடுதலாக பொதுமக்கள் மீதே தாக்குதல் நடத்தி வருவதாக தலிபான்கள் தெரிவித்துள்ளனர்.

உயிரிழப்பு விபரங்கள் தொடர்பாக வெளியிடப்படும் புள்ளி விபரங்கள் உண்மைக்குப் புறம்பானவை என தலிபான் தலைவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

தற்போது மோதல்கள் இடம்பெற்று வரும் தென் வசிரிஸ்தான் பகுதியின் ஒராகாஸி நகரிலிருந்து பொதுமக்கள் இடம்பெயர்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (6)



அணு பாதுகாப்பு மாநாடு அமெரிக்காவின் வோஷிங்டனில் உள்ள பிளேயர் ஹவுசில் நடைபெற்று வருகிறது. இந்திய பிரதமர் மன்மோகன்சிங், அதிபர் ஒபாமா உள்ளிட்ட தலைவர்கள் கூடி விவாதிக்கின்றனர்.

# விவசாயிகளுக்கு வலிமையளிக்கும் 'ரோபோ' கவச ஆடை

## ஜப்பானிய பல்கலைக்கழக விஞ்ஞானிகள் வடிவமைப்பு

அணிபவருக்கு அதீத ஆற்றலை அளிக்கும் ரோபோ கவச ஆடையை ஜப்பானிய பல்கலைக்கழக விஞ்ஞானிகள் வடிவமைத்துள்ளனர்.

உலோகம் மற்றும் பிளாஸ்டிக் உள்ளடக்கங்களைக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ள இந்த கவச ஆடையானது அணிபவரின் கரங்களுக்கும் கைகளுக்கும் மேலதிகமாக வலிமையை அளிக்கும் வகையில் 8 மின் சாரமோட்டார் கருவிகளால் சக்தியூட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

குரலை அடையாளம் கண்டு இயங்கும் முறைமையின் ஊடாக கட்டளைக்கு ஏற்ப இயக்கங்களை வழிப்படுத்தக்கூடிய உணர் கருவிகளையும் இந்த 'ரோபோ' கவச ஆடை கொண்டமைந்துள்ளது.

இந்த கவச ஆடையானது வயதான விவசாயிகளுக்கு அவர்களது நாளாந்த தொழிலை செய்வதற்கு உதவும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.



டோக்கியோ பல்கலைக்கழகத்தின் விவசாய மற்றும் தொழில்நுட்ப பீட விரிவுரையாளரான ஷிகேகி தொயாமா இந்த ரோபோ கவசஆடையை வடிவமைத்துள்ளார்.

மேற்படி கவச ஆடை இந்த வருட இறுதியில் ஜப்பானியக் கம்பனி யொன்றால் உற்பத்தி செய்யப்பட்டு பாவனைக்கு விடப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (6)

# கர்ப்பிணிகளுக்கு அம்மை வந்தால் என்ன செய்வது ?

கோடைக்காலம் வந்துவிட்டது. கூடவே அழையா விருந்தாளியாக வித விதமான அம்மை நோய்களும் சேர்ந்தே வந்துவிடும். இந்த அம்மை நோய்கள் எதனால் ஏற்படுகின்றன? வராமல் தடுப்பது எப்படி? வந்த பின்னர் எப்படி நடந்து கொள்ளவேண்டும்? பெரியம்மை என்று சொல்லப்படக்கூடிய அம்மைதான் உயிர் குடிக்கும் ஒரு அம்மையாக இருந்துவந்தது. பெரியம்மைக்கான தடுப்பு மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டு இன்று அந்த அம்மையை உலகத்தை விட்டு துரத்திவிட்டோம்.

**தற்போது என்னென்ன அம்மைகள் நமக்கு வருகின்றன?**

- சின்னம்மை என்றழைக்கப்படும் சிக்கன் பாக்ஸ் (கொப்புளங்களாக வருமே...)
- மணல்வாரி அம்மை என்றழைக்கப்படும் மீசில்ஸ்
- பொன்னுக்கு வீங்கி என்றழைக்கப்படும் மம்ப்ஸ்

**அம்மைநோய்கள் எப்படி பரவுகின்றன?**

அம்மைநோய்கள் பெரும்பாலும் காற்றின் மூலமாகத் தான் பரவுகின்றன. அதனால் தான் அம்மைநோயை" பிராப்லெட் இன்ஃபெக்ஷன்" என்று சொல்கிறோம். நோயாளி இருமும் போதோ, தும்மும் போதோ அவரிடமிருந்து " வைரஸ் கிருமிகள்" காற்றில் வெளியேற்றப்பட்டு, மற்றவர்களைத் தாக்குகிறது.இது தவிர நோயாளியைத் தொடும் போது கூட இந்த நோய் தொற்றிக் கொள்ளும் வாய்ப்பு இருக்கிறது.

அதனால் தான் அம்மை நோய்களை தீவிரமான ஒரு தொற்றுநோய் என்று சொல்கிறோம்.

**கர்ப்பிணிப் பெண்களுக்கு அம்மை நோய் வந்தால் பிரச்சினை என்கிறீர்களே?**

கருவுற்றிருக்கும் தாய்மார்களுக்கு அம்மைநோய் வந்தால், அஜாக்கிரதையாக இருக்கக்கூடாது. குறிப்பாக, கருவுற்றிருக்கும் முதல் மூன்று மாதங்களில் அம்மை நோய் வந்தால் உடனடியாக பெண்கள் மகப்பேறு மருத்துவரைச் சந்திக்கவேண்டும். சாமி குற்றம் ஆகிவிடும் என்று வீட்டிலேயே இருந்து விடக்கூடாது .ஏனென்றால், குழந் தையின் இதயம் ஐந்தாவது வாரம் வளர ஆரம்பித்து விடுகிறது. அந்த சமயத்தில் அம்மை நோயால் தாய் பாதிக்கப்பட்டாலும்,சரியான சிகிச்சை எடுத்துக் கொள்ளாவிட்டாலும் தாயின் வயிற்றில் உள்ள குழந்தையின் இதயத்தில் பாதிப்பு ஏற்படுகிறது.

அதுமட்டுமில்லை, ஆண் குழந்தைகள், அம்மை நோயால் பாதிக்கப்பட்டு அதற்கு சரியான சிகிச்சை கொடுக்கப்படாவிட்டால், அவர்கள் பெரியவர்கள் ஆன பின்னர் மலட்டுத்தன்மையும் கூட ஏற்படலாம்.

**அம்மை நோய்க்குத் தடுப்பூசிகள் இருக்கிறதா ?**

சின்னம்மைக்குக் கூட தற்போது தடுப்பூசிகள் வந்துவிட்டது. குழந்தைப் பருவத்தின் ஓரிரு ஆண்டுகளிலேயே போடப்படும் இந்தத் தடுப்பூசியால் வாழ்நாள் முழுவதும் நோய் பற்றிய பயம் இன்றி இருக்கலாம்.

இந்த தடுப்பூசிகளை டாக்டரின் ஆலோசனைப்படி தவறாமல் போட்டுக் கொண்டாலே அம்மை பற்றிய பய மில்லாமல் இருக்க லாம்.

**அம்மை நோய் வருவதை முன் கூட்டியே தெரிந்து கொள்வது எப்படி?**



சின்னம்மை வருவதற்கு மூன்று, நான்கு நாட்கள் முன்பே காய்ச்சல், ஜலதோஷம், இருமல், உடல்வழி, தலைவலி கண் எரிச்சல் போன்றவை ஆரம்பிக்கும். பின்னர் தோலில் எரிச்சலும் அரிப்பும் ஏற்படும். பின்னர் முகம், கழுத்து, முதுகு, மார்பு என்று உடல் முழுவதும் கொப்புளங்கள் வரும்.

சின்னம்மைக்கு என்றே தனியாக மாத்திரைகள் , சிரப், ஓயின்மென்ட்டுகள் இருக்கின்றன. டாக்டரிடம் முதலிலேயே காட்டி சிகிச்சை எடுத்துக்கொண்டால் நோயின் வீரியத்திலிருந்தும் பக்க விளைவுகளிலிருந்தும் தப்பலாம்.

சிகிச்சை சரியாக எடுத்துக் கொள்ளாத போது வயிற்றுப் போக்கு ஏற்படும். சின்னம்மை ஒரு முறை ஏற்பட்டால் அது ஆயுளுக்கும் திரும்பவராது.

மணல் வாரி அம்மை வந்தாலும் சளி இருமல், ஜலதோஷம், கண் எரிச்சல் இருக்கும். தாடையின் உட்பகுதிகளில் சிவப்பு கலந்த வெண் புள்ளிகள் தோன்றுவதுதான் இந்த நோயின் அறிகுறி.

இந்த அம்மைக்கும் சரியான மருத்து வம் எடுத்துக் கொள்ளாவிட்டால் வயிற்றுப் போக்கு, காதில் சீழ் வடிவது, நிமோனியா போன்ற பிரச்சினைகள் ஏற்படும்.

காதின் கீழ்ப்புறம், தாடையின் கீழ்ப்புறம் காணப்படும் உமிழ்நீர் சுரப்பிகளைத் தாக்கக் கூடியது, ''பொன்னுக்கு வீங்கி'' அம்மை. தொண்டை வலி, விழுங்குவதில் சிரமம், வாயைத் திறக்கும் போது வலி, காதின் கீழ் வலியுடன் வீக்கம் போன்றவை இதன் அறிகுறிகள். மருந்து மாத்திரைகள் மூலமே வலியையும் வீக்கத்தையும் குறைக்கலாம்.

**டாக்டர் வெ. சீதாராமன்**
**சென்னை**

**அம்மையின் போது என்ன சாப்பிடலாம்?**

உணவில் காரம், புளிப்பைத் தவிர்ப்பது நல்லது. பழரசம், கஞ்சி, மோர், பழங்கள், இளநீர், குளுக்கோஸ் போன்றவை உடம்புக்கு மிகவும் நல்லது. எல்லாவற்றுக்கும் மேலாக தனி நபர் சுத்தமும் சுற்றுப்புற சுத்தமும் சரியான நேரத்தில் டாக்டரின் ஆலோசனைகளும் இந்த் நோயிலிருந்து காப்பாற்றும்.

# 'கோடை கண்வலி!'

கோடை காலம் என்றாலும் அழையா விருந்தாளியாக வந்துவிடும் தொற்றுநோய்கள். அதில் முக்கியமானது...அவஸ்தைக்கு பெயர் போன ''மெட்ராஸ் ஐ' என்னும் கண்வலி.



கண்களில் நாட்டு வைத்தியம், பாட்டி வைத்தியம் என்று தாய்ப்பாலை ஊற்றுவது, எண்ணெய் ஊற்றுவது என்று ஏடாகூடமாக எதுவும் செய்யக் கூடாது என்றும் எச்சரிக்கின்றனர் மருத்துவர்கள். கண்களை கசக்கினால் ஒரு சிலருக்கு திருப்தியாக ஏற்படுவது போன்று இருக்கும்.ஆனால் அப்படி கண்களை கசக்குவது கூடாது.

இதனால் கண்களின் பாகங்களாகிய கருவிழி, வெண்ணிறமாகிய ஸ்கிலீரா, கண்ணில் உள்ள ஆடி, விழித்திரையில் பாதிப்பு ஆகியவை ஏற்படும். இவைகளை மருத்துவர்கள் சரியாகக் கண்டுபிடித்து மருந்துகளைக் கொடுப்பார்கள்.

ஆனால் நாம் பொதுவாக ஏதாவது ஒரு மருந்தை ஊற்றி விடுவோம். இதனால் பார்வை பறிபோகும் அபாயம் ஏற்படும்.

கண்வலி வந்தால் சூரிய ஒளிக்கதிர்கள் கண்ணில் படாதவாறு பார்த்துக்கொள்ளுங்கள். அதிகபட்ச ஒளியையும் பார்க்க வேண்டாம். கண்களுக்கு பொருத்தமான கண்ணாடியை போட்டுக்கொள்ளுங்கள்.

கண்வலி உள்ளவர்களுக்கு கண் அழுத்தினால் தலைவலி உண்டாகும். இதனால் இந்த மாதிரியான நேரங்களில் கண் சிவப்பாகும்.

தலைவலி , பார்வைக்குறைவு ஏற்பட்டால் உடனே கண் மருத்துவரிடம் காண்பிக்கவும். ஒரு வித வைரஸ் கிருமியால் ஏற்படும் இந்த கண்நோய் ஏற்பட்டவர்கள், அடிக்கடி சுத்தமான நீரில் கண்களைக் கழுவி விடவும். கண்களுக்கு மருந்திட்டும் சுகாதாரமாக வைத்துக் கொள்ளவும்.

தினமும் காலை, மாலை குளிப்பது மிகவும் நல்லது.

# வாழ வைக்கும் வாழைத்தண்டு !



வாழைத் தண்டை பொரியல் , கூட்டு, சாம்பராகச் செய்து சாப்பிடுவது வரைக்கும் தான் நமக்குத் தெரியும்.அது எந்த வகையில் நமக்கு மருந்தாக உதவுகிறது என்பதைப் பார்க்க வேண்டும்.

வாழைத்தண்டு குடலில் சிக்கிய மணல் கற்களை விடுவிக்கும். சிறுநீர் தாராளமாகப் பிரியும். மலச்சிக்கலைப் போக்கும். நரம்புச் சோர்வையும் நீக்கும். வாழைத் தண்டுச் சாற்றை இரண்டு அல்லது ஒரு டம்ளர் வீதம் தினமும் சாப்பிட்டு வந்தால், அடிக்கடி வரும் வறட்டு இருமல் நீங்கும். கோழைக்கட்டையும் இளகச்செய்யும்.

நல்ல பாம்புக் கடிக்கும் வாழைத் தண்டுச் சாற்றை ஒரு டம்ளர் வீதம் உள்ளுக்குள் விட்டால் விஷம் தானாக இறங்கிவிடும்.

## Health Care மருத்துவ உலகம்

உங்கள் நலம் உங்கள் கைகளில்


# இயற்கை இளநீரும் செயற்கை குளிர்பானமும்...

**இளநீரில் இருப்பவை**

சோடியம் குளோரைட் , பொட்டாசியம் , தாது உப்புக்கள் , நீர்ச்சத்து , கல்சியம் , உப்புச்சத்து , விற்றமின்கள் நிறைந்திருக்கின்றன.

**மருத்துவ குணம் எப்படி?**

தினமும் இளநீர் நம்மை இளமையாக வைத்திருக்கும். குறிப்பாக கோடைகாலங்களில் உப்புச்சத்தும் நீர்ச்சத்தும் , பிற பொதுவான சத்துக்களும் உடலில் இருந்து வியர்வை மூலமாக வெளியேறி விடுவதால் உடல் வெளிறி விடும். மயக்கம் , நாடித் துடிப்பு தளர்வு , தசைகள் இறுகுவது நடக்கும்.



இதற்கெல்லாம் முக்கியமான காரணம் உடலில் உள்ள உப்பு வெளியேறுவதுதான். இளநீரில் இருக்கின்ற உப்புச் சத்து நம் உடலில் வெப்பநிலையை சமச்சீராக பாதுகாப்பதோடு, வெப்ப நிலையை சரிவர உள்வாங்கி முறையே வெளித் தள்ளுகிறது. இதனால் வேனல் பிடிப்பு , வேனல் அதிர்ச்சி , அயர்ச்சி போன்ற கோடையின் ஆபத்தான விடயங்கள் இல்லாமல் போகிறது.

**எப்படி சாப்பிடலாம்?**

இளநீரை உடனடியாக குடித்துவிடுவது தான் நல்லது. இரண்டு / மூன்று மணி நேரங்கள் வைத்திருப்பதோ , குளிர்சாதனப் பெட்டியில் வைத்திருந்து குடிப்பதோ அதன் மருத்துவக் குணங்கள் மந்தப்படுத்தக் கூடும். வேண்டுமானால் அரை மணிநேரம் வைக்கலாம்.இதில் எதனையும் கலந்து குடிக்கக்கூடாது.

சர்க்கரை நோயாளிகள் குறைவாகக் குடிக்கலாம். சிறுநீரக செயலிழப்பு நோயாளிகள் குடிக்கக் கூடாது. இதய நோயாளிகளுக்கு இளநீர் இதம்.

**இளநீருக்கு மாற்று குளிர்பானமா?**

குளிரூட்டப்பட்ட செயற்கை குளிர்பானங்களில் " கார்பனேட்டட் வோட்டரும் " காற்றும் தான் செயற்கையாக அடைக்கப்படுகிறது. இதில் உடலுக்கு தேவையற்ற கலோரிச்சத்து அதிகமாக இருப்பதால் உடல் குண்டாகும்.எலும்புகள் பலவீனமடையும். குடற்புண் உண்டாகும்.

**டாக்டர் ப.உ.லெனின்**

இவையெல்லாம் தொடர்ந்து குடிப்பதில் உள்ள பக்கவிளைவுகள். ஆக இளநீர் இளமைக்கும் வலிமைக்கும் இதம்.

இருட்டில் எல்லாப் நிறப் பூனைகளும் கறுப்பாகத் தெரியும்.

-சீனா

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் மீண்டும் 'மிஸ்ரர்' மின்சாரம்

யாழ்ப்பாண மின்சார சபைக்கு முன்னால் சனக் கூட்டம். கூடவே அம்புலன்ஸ் வண்டிகளின் அலறல். ஏதோ நடந்து விட்டது என்பதை இந்நிகழ்வுகள் உணர்த்தின.

இரவுவேளை குப்பென்ற இருட்டில் சம்பவத்தை அறிவதற்காக மக்கள் கூட்டத்தை விலத்திக் கொண்டு உள்ளே சென்றேன்.

எனக்குள்ளும் ஒருவித பரபரப்பு. இருந்தும் சம்பவத்தை அறிவதற்காக அங்கிருந்தவர்களிடம் விசாரித்தேன்.

எனது விசாரிப்பை செவிமடுப்பதாகத் தெரியவில்லை. இருந்தும் மீண்டும் மீண்டும் கேட்டேன். என்ன நடந்தது?

அங்கிருந்த யாரோ ஒருவர் 'மாரடைப்பு' என்றார்.

மாரடைப்பா யாருக்கு... அதிர்ச்சியுடன் கேட்டேன்.

வேறுயாருக்கு எங்கட மிஸ்ரர் மின்சாரத்திற்குத்தான் என்று பதிலளித்தார்.

அடக் கடவுளே! இது முதற்தடவையாக ஏற்பட்ட மாரடைப்பா? என்று கேட்டேன்.

இல்லை ஐயா! இதற்கு முதலும் நான்கு ஐந்து தடவை மாரடைப்பு வந்துள்ளது என்றார்.

பதிலளித்தவர் மீது எனக்குக் கோபம்தான் ஏற்பட்டது. நான்கு ஐந்து தடவையாக் மாரடைப்பு வருகின்றதென்றால் நீங்கள் விழிப்பாக அல்லவா இருந்திருக்க வேண்டும்?

மருத்துவரிடம் காட்டியிருக்க வேண்டும். உரத்த குரலில் கூறினேன். நான் கூறியது அதட்டல் போல இருந்ததால் பதிலளித்தவருக்கு கோபம் வந்துவிட்டது.

சும்மா பொறுப்பில்லாமல் கதைக்காதீர்கள். ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் எங்கட மின்சாரம் கிளினிக்குக்குச் செல்வது வழக்கம்.

கிளினிக்கென்றாலும் நேரத்திற்கு முடிபடைவதில்லை. காலை 8 மணிக்கு கிளினிக் ஆரம்பித்தால் மாலை நான்கு ஐந்து மணியாகும் கிளினிக் முடிய.

மிஸ்ரர் மின்சாரத்தின் பொடியை நன்றாகச் சோதித்துப் பார்க்கிறதுதான் கிளினிக்கின்ற வேலை. இதுபற்றி நாங்கள் குடாநாட்டு பத்திரிகைகளிலும் விளம்பரப்படுத்துவது வழக்கம் என்று கடுப்போடு பதிலை முடித்தார்.

இறைவா! ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் மிஸ்ரர் மின்சாரத்தை சோதித்து இருந்தும் திடீர் என்று மாரடைப்பு ஏற்பட்டது கவலைதான்.

இந்த நோய் எப்ப குணமடையுமோ தெரியவில்லை.

கடவுள்தான் காப்பாற்ற வேண்டும். அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் இருக்கும் எங்கட யாழ்ப்பாண மண்ணின் மைந்தன் மிஸ்ரர் மின்சாரத்தை.

# விகிர்தி புது வருடப்பிறப்பு

### வாக்கிய பஞ்சாங்கம்

நிகழும் விரோதி வருடம் பங்குனி மாதம் 30 ஆம் திகதி (14.04.2010) செவ்வாய்க் கிழமை அபரபக்க அமாவாசைத் திதியில் ரேவதி நட்சத்திரத்தின் மூன்றாம் பாதத்தில், நாம யோகத்தில், மீன லக்கினத்தில், தனுசு நவாம்சத்தில், சுக்கிர கால வோரையில், சனி சூக்குமவோரையில், இராட்சத குணவேளை யில், அதிகாலை 5.21 மணியளவில் ***விகிர்தி*** என்னும் புதிய வருடம் பிறக்கின்றது.

அன்று பின்னிரவு 1.21 மணி தொடக்கம் புதன் கிழமை காலை 9.21 மணி வரை விஷ புண் ணிய காலமாகும்.

### திருக்கணித பஞ்சாங்கம்

சித்திரை மாதம் (14.04.2010) புதன்கிழமை காலை 6.57 மணி யளவில் மேட லக்கினத்தில் ***விகிர்தி*** என்னும் புதிய வருடம் பிறக்கின்றது. அன்று ரேவதி நட்சத்திரத்தின் மூன்றாம் பாதம் அமாவாசைத் திதி யாகும். செவ்வாய்க்கிழமை பின்னிரவு 2.57 மணி தொடக்கம் புதன் கிழமை முற்பகல் 10.57 மணி வரை மேட சங்கிரமான புண்ணிய காலமாகும்.

### சங்கிரம தோஷ நட்சத்திரங்கள்

ஆயிலியம், மகம், பூரம், உத்தரம் 1, கேட்டை, பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி என்பனவாகும்.

இந்நட்சத்திரங்களில் பிறந்தோர் தவறாது மருத்து நீர் தேய்த்து, ஸ்நானஞ் செய்து, தான தரும வழிபாடு செய்து, சர்கிரம தோஷத் தை நிவர்த்தி செய்தல் வேண்டும்.

### மருத்து நீர் தயாரித்தல்

தாழம்பூ, தாமரைப்பூ, மாதுளம் பூ, துளசி, விஷ்ணு கிராந்தி, சீதேவி யார்செங்கழு நீர், வில்வம், அறுகு, பீர்க்கு, பால், கோசலம், கோமயம், கோரோசனை, மஞ்சரி ,மிளகு, திற்பலி, சுக்கு ஆகியவற்றை சுத்த மான நீரி லிட்டு காய்ச்சிக் கொள்க.

### புதுவருடத்தில் அனுஷ்டிக்க வேண்டியவை

யாவரும் இப்புண்ணிய காலத் தில் விதிப் படி சங்கற்பித்து மருத்து நீர் தேய்த்து சிரசில் விளாவிலையும் காலில் கடப்பமிலையும் வைத்து ஸ்நானஞ் செய்து பொன்நிறமுள்ள பட்டாடையாயினும் வெள்ளை சிவப்புக்கரை அமைந்த பட்டாடை யாயினும் அல்லது பச்சை நிறம் கலந்த பட்டாடை, பச்சைக் கரை அமைந்த வெள்ளைப்புது ஆடை யாயினும் தரித்து ஆபரணம் அணிந்து சுகந்த சந்தனம் பூசி, நறுமலர் சூடி, விநாயகர் முதலிய குல தெய்வங்களை வழிபட்டு சூரியனுக்கு பொங்கல் பூசை செய்து, குரு, பெற் றோரிடம் ஆசி பெற்று, தானதருமங்கள் செய்து, உற்றார், உறவினர், நண்பர்களுடன் இனிமையாகப் பழகி மங்கலகரமாக புதுவருடத்தின் வரவேற்க கடவர்.

### விகிர்தி வருட கைவிசேடம்

### வாக்கிய பஞ்சாங்கம்

15.04.2010 வியாழன் காலை 6.49 மணிமுதல் 7.44 மணிவரை, 15.04.2010 வியாழன் முற்பகல் 9.59 மணி முதல் 11.58 மணிவரை, 15.04.2010 வியாழன் பிற்பகல் 3.10 மணி முதல் 4.06 மணி வரை.

### திருக்கணித பஞ்சாங்கம்

15.04.2010 வியாழன் காலை 6.02 மணி முதல் 9.50 மணி வரை, 15.04.2010 வியாழன் பிற்பகல் 3.19 மணி முதல் 6.00 மணி வரை, 18.04.2010 ஞாயிறு காலை 6.01 மணி முதல் 7.37 மணி வரை.

# எதிர்க்கட்சிகளினால் இன்றைய அரசாங்கத்துடன் ஒன்றிணைந்து ஒரு போதும் செயற்பட முடியாது

## ரில்வின் சில்வா தெரிவிப்பு

(கொழும்பு)

இன்றைய அரசாங்கத்துடன் எதிர்க்கட்சிகளினால் ஒன்றிணைந்து ஒருபோதும் செயற்பட முடியாது. எதிர்வரும் காலங்களில் நாட்டின் ஜனநாயகம் மற்றும் பொருளாதாரம் உட்பட இதர பிரச்சினைகள் உக்கிர நிலையை அடையும். அப்போது பொது மக்கள் மாற்று அரசியலுக்காக போராட்டம் நடத்துவார்கள் .அந்நாள் வெகுதொலைவில் இல்லையென ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

நாட்டில் ஜனநாயகம் , நல்லாட்சி தேசிய ஒற்றுமை என்பவற்றைப் பாதுகாப்பதற்கான எமது போராட்டம் எந்தச் சூழ்நிலையிலும் கைவிடப்படமாட்டாது. பாராளுமன்றத்திற்குள்ளும் வெளியிலும் நாட்டிற்காகவும் பொதுமக்களுக்காகவும் ஜே.வி.பி.யின் போராட்டம் தொடரும் எனவும் அவர் குறிப்பிட்டார்.



ஜே.வி.பியின். எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பில் நேற்று முன்தினம் தெளிவு படுத்துகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்தும் கூறுகையில்,

அரசாங்கம் எதிர்பார்த்த மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவை பொதுமக்கள் நிராகரித்துள்ளனர். ஆனால் தமது இலக்கை அடைய அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. அதனால் தான் நாட்டின் எதிர்காலத்திற்கான வேலைத் திட் டங்களுக்காக எதிர்க்கட்சிகள் ஆதரவளிக்க வேண்டும் என்ற பிரசாரங்களை அரசாங்கம் முன்னெடுத்து வருகின்றது.

எந்தவொரு அரசியல் கட்சியினாலும் தற்போதைய அரசாங்கத்துடன் இணைந்து செயற்படமுடியாது. ஜே.வி.பி ஒருபோதும் அரசுடன் இணையாது. ஏனென்றால் இந்த அரசாங்கத்தினால் மக்களின் பிரச்சினைகளையோ தேசியப் பிரச்சினையையோ முடிவுக்கு கொண்டுவர முடியாது.

மாறாக தற்போது காணப்படும் அனைத்துப் பிரச்சினைகளும் மிகவும் ஆபத்தான முறையில் மீளத் தலைதூக்கும். பொது மக்கள் நமது உரிமைகளை வென்றெடுப்பதற்காக சுதந்திரமாக வீதியில் இறங்கிப் போராடுவார்கள். ஆனால் ஜே.வி.பியின் போராட்டங்களையும் அரசியல் பயணத்தையும் எவராலும் தடுத்துவிட முடியாது என்றார். (6)

## வடமாகாண பிரதேச செயலகங்களில்

## பணியாற்றுவதற்கு தொழில்நுட்ப அலுவலர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

வடமாகாணத்தில் உள்ள பிரதேச செயலகங்களில் செயற்படும் அபிவிருத்தி பணிகளை நடைமுறைப்படுத்துவதற்காக அரசாங்க மற்றும் மாகாண சபைகளில் பணியாற்றி ஓய்வு பெற்றும் தகைமைகளைக் கொண்டுள்ளதுமுமான இலங்கை தொழில்நுட்ப சேவையின் தொழில்நுட்ப அலுவலர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இவ் அலுவலர்கள் 06 மாத காலப்பகுதிக்காக மட்டும் ஆட்சேர்ப்புச் செய்யப்படுவதுடன் விண்ணப்பிக்கும் போது அரசாங்க சேவையிலிருந்து ஓய்வு பெறச் செய்வித்த சான்றிதழின் பிரதி மற்றும் அலுவலரின் சுயவிபரத் தரவுகள் ஆகியவற்றுடன் விண்ணப்பம் அனுப்பப்படும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் வட மாகாணத்தில் உள்ள பிரதேச செயலகங்களில் பணியாற்றுவதற்கு தொழில் நுட்ப அலுவலர்களை ஆட்சேர்ப்புச் செய்தல் என்று குறிப்பிட்டு இம் மாதம் 20ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத் தபாலில் கீழ் குறிப்பிடும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டு என அரசாங்க நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார். (6)

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்

## மதமும் ஒழுக்கமும்



இந்தச் சூழ்நிலைகளைக் கடந்து, அப்பால் அந்தக் கருத்துக்களுக்கு எந்தவித மதிப்பும் கிடையாது. ஆனால் மதம் ஆன்மீக வாழ்க்கை ஆகியவற்றிலிருந்து பெறப்படும். ஒழுக்கம், நீதி ஆகிய இவை பரந்த மனிதகுலம் முழுவதிலும் புகுந்து நற்செயலாற்ற முடியும். அது ஒரு தனி மனிதனை எடுத்துக்கொள்கிறது.

என்றாலும் அதன் தொடர்புக்ள் அனைத்தும் அகண்டமான மெய்பொருளோடு தொடர்பு கொண்டவையே ஆகும். ஏனென்றால் சமுதாயம் என்பது இத்தகைய தனி மனிதர்கள் பலருடைய ஒரு தொகுப்பே தவிர வேறு இல்லை.

# சைவ மகிமைக்கு நித்திய வாழ்வளித்த தெய்வச் சேக்கிழார்

சைவம், உயிருக்குயிராய் உள்ள சிவனை அறிந்து சிவனருளையே ஆதரித்து அவன ருளாலே அவன்தாள் வணங்கி வாழ்வதே உண்மை வாழ்வென்றும், வாழ்க்கைத் தொடர்ச்சி நீங்கியதும் சிவனடியடைந்து பேரின்ப வெள்ளத்துள் திளைத்து மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்திருத்தலே வாழ்க்கைப் பயன் என்றும் கொள்ளும் பண் பாடான உயர் நோக்குள்ளது.

சிவபூமியாக விளங்குகின்ற தமிழ் நிலப்பரப்பு முழுவதிலும் இச் சைவ இயல்பிற் பயன்பெற்ற தொண்டர்கள் ஆகிய சிவனடியார்கள் காலத்துக்குக் காலம் இடத்துக்கிடம் வாழ்ந்து சிறந்துள்ளார்கள். அவ்வப்போது ஆங்காங்கு பல அற்புதச் செயல்களும் நிகழ்ந்துள்ளன. மன்றுளே திருக்கூத்தாடி, அடியவர் மனைகள் தோறும் சென்று அவர் நிலை காட்டிய இடங்கள் பல.

சிவனடியார்களின் அருமை பெருமைகளை உலகுக்கறிய வைக்கும் திருவருட் கைங்கரியம் ஒரு காலத்தில் திருவாரூர் என்ற சிவதலத்தில் நடைபெற்றுள்ளது. சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஒருநாள் அங்கு சுவாமி தரிசனம் செய்யச் சென்றபோது அத்தலத்தில் நிறைந்திருந்த திருத்தொண்டர் கூட்டத்தைக் கண்டு வியந்து இவர்களுக்கு நான் அடியவனாகும் நாள் எந்நாளோ என்று எண்ணி மன வருத்தங் கொண்டார்.

அச்சுந்தரர் மூலமாகவே அத்தொண்டர் மகிமையை உலகறிய வைக்குமாறு திருவாரூர்த் தியாகராஜப் பெருமான் திருவுளம் கொண்டு "தில்லைவா ழந்தணர் தம் அடியார்க்கு மடியேன்" என அடி எடுத்துக் கொடுத்து அவர்கள் மகிமையை தேவாரத் திருப்பதிகம் ஆகப் பாடவைத்தார். அத் திருப்பதிகம் அடியார் பெயரும் அவர்கள் பற்றிய சில குறிப்புக்களும் கொண்டு திருத்தொண்டர் தொகை என்ற திருப்பெயரில் வழங்கி வரலாயிற்று. பின் சில நூற்றாண்டுகளில், திருநாரையூர்ப் பொல்லாப் பிள்ளையார் உபாசகரான நம்பியாண்டார் நம்பி ஒவ்வொருவரதும் வாழ்க்கைக் குறிப்புக்கள் சில சில அமையுமாறு திருத்தொண்டர் திருவந்தாதி ஆக்கி அருளினார்.

பின் சில நூற்றாண்டுகளில் சோழ நாட்டு இராஜாவாய் விளங்கிய இரண்டாம் குலோத்துங்கள் ஆகிய அனபாயசோழ மகாராஜாக்கு முதன் மந்திரியாயிருந்த செந்தமிழ்ப் பெரும்புலவரும், சிறந்த சைவ ஞானியும், பெரும் பத்திமானுமாகிய சேக்கிழார் பெருமான், திருத்தொண்டத் தொகை, திருத்தொண்டர் திருவந்தாதி என்பவற்றின் சைவ ஞானச் சிறப்புக்களை விரித்து விளக்கும் வாய்ப்புக் கிடைத்தது. அக்காலம் காவிய இரசனை விரும்பிப் போற்றப்பட்ட காலம். சீவகசிந்தமாணி ஆகிய இலௌகீகக் காவியத்தின் இரசனையில் சோழனது வித்துவ சபையும் ஈடுபாடு கொண்டிருந்தது.

**இக்கட்டுரை சேக்கிழார் அருளிய பன்னிரண்டாம் திருமுறை முற்றோதல் நிறைவு விழாவையொட்டி பிரசுரமாகின்றது.**

சமண காவியமான சீவகசிந்தமாணியைப் போற்றிப் படித்துக் காலத்தைப் போக்கிய சோழனுக்கும் ஏனையோர்க்கும் சிவகதையாகச் சேக்கிழார் பெருமான் இயக்கிய இரசனையோடு கேட்பாரெல்லாம் மகிழும்படியாக திருத்தொண்டர் வரலாறுகளை எடுத்துக் கூறினார். பரவசமுற்ற சோழ மன்னன் அதனைக் காப்பிய வடிவில் ஆக்குமாறு சேக்கிழாரைப் பணித்தான். அப்பணி மேற்கொண்ட சேக்கிழார் சிதம்பர தலத்திற் போயிருந்து நடராஜப்பெருமான் 'உலகெலாம்' என அடியெடுத்துக் கொடுக்கப்பெற்று திருத் தொண்டர் தொகை, திருத்தொண்டர் திருவந்தாதி ஆகிய நூல்களை அடிப்படையாகக் கொண்டு திருத்தொண்டர் புராணம் என்ற நூலை பக்திச் சுவையும், தமிழினிமையும், காவியநலமும் மிக்கதாகப் படைத்தருளினார்.

இப்புராணம் குறித்த திருத்தொண்டர் வரலாறுகளை விரித்துக்கூறுதல் மூலம் சைவத் திருமுறைகளில் தேவாரங்கள் தோன்றிய பதிக வரலாற்றையும் அவற்றின் பொருள் விளக்கங்களையும், சிவபெருமா னின் திருவருட் பெருக்கால் அவ்வப்போது நாட்டில் விளைந்த அற்புதங்களையும் அதனாற் சமூகத்தில் விளைந்த மலர்ச்சியையும் விளக்கும் அருள்நூலாய் விளங்குகின்றது. இதனைப் பார்த்தறிந் துணர்ந்த பெரியார் இது சேக்கிழார்க்கன்றித் தேவர்க்குமரிதெனப் பாராட்டுகின்றனர்.

சைவமெய்யுண்மைகளின் ஆழ நீளங்களை எடுத்துக்காட்டும் கலங்கரை விளக்கமாய்ப் பெரியபுராணம் காட்சியளிக்கிறது. தேவாரம் அருளிய சமயாசாரியார்களான மூவர் முதலிகளின் பக்தி அனுபவங்களைச் செழிப்பாக அள்ளி வீசுதல் மூலம் படிப்போர் கேட்போர் அனைவரையும் சிவபக்தர்களாக்கும் சக்தி பெரியபுராணத்திற் பொதிந்திருத்தலைக் கற்றாரும் கேட்டாருமறிவர். சைவக் கோயில்கள் பெரியபுராண படனத்தினாலே தெய்வீகக்களை ததும்பி வருதல் கண்கூடு. பெரிய புராண படனம் ஆலயங்களில் நடைபெற உதவுபவர் உளரேல் அவர் பாராட்டுக்குரியவராவர்.

**பண்டிதர் வ.பேரின்பநாயகம்**
தலைவர்,
அகில இலங்கைத் திருமுறை மன்றம்

# கண்களில் ஏற்படும் வெண்படல பாதிப்பால் 50இற்கும் மேற்பட்டோர் பார்வையிழப்பு

## சுகாதார அமைச்சு தெரிவிப்பு

கண்களில் வெண்படலம் படர்வதால் நாட்டில் சுமார் 50 ஆயிரத்திற்கு மேற்பட்டோர் பார்வையிழந்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

நாட்டில் அண்மைக்காலமாக கண்களில் வெண்படலம் படரும் நோய் அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சின் பொது சுகாதார பிரதிப் பணிப்பாளர் நாயகம் டாக்டர் பாலித மகிபால குறிப்பிட்டார்.

இதனை எதிர்கொள்ளும் பொருட்டு தேசிய ரீதியான செயற்திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளதாக அவர் கூறினார்.

நாட்டில் வயோதிபர்கள் மற்றும் நீரிழிவு நோயாளர்களின் அதிகரிப்பு உட்பட பல காரணிகள் கண்களில் வெண்படலம் படர்வதற்கு காரணமாக அமைந்துள்ளது என அமைச்சின் பொது சுகாதார பிரதிப் பணிப்பாளர் நாயகம் சுட்டிக்காட்டினார்.

கண்பார்வை குறைந்தவர்கள் தங்களது கண்களைப் பரிசோதிப்பது சிறந்தது எனக் குறிப்பிட்ட டாக்டர் விசேட வைத்திய நிபுணர்களின் ஆலோசனைக்கு அமையத் தொடர்ந்து சிகிச்சைகளை பெற்றுக்கொள் வது அவசியமானது எனவும் தெரிவித்தார்.

இதற்கமைய கண்களில் தோன்றுகின்ற வெண்படலத்தை அகற்றுவதற்கான இலவச சத்திரசிகிச்சைகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக டாக்டர் பாலித மகிபால மேலும் தெரிவித்தார்.

இதற்கென விசேட கண்சிகிச்சைப் பிரிவுகளை நிறுவுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் கடந்த வருடத்தில் மலைப்பிட்டி, கந்தளாய், வவுனியா ஆகிய வைத்திய சாலைகளில் புதிதாக கண்சிகிச்சைப் பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு இந்த வருடத்திலும் வைத்தியசாலைகள் பலவற்றில் புதிதாக அந்தப் பிரிவுகளை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் கூறினார். (6-4)

# தோல் புற்றுநோயை குணப்படுத்த புதிய மருந்து கண்டுபிடிப்பு

(லண்டன்)

தோல் புற்றுநோயால் உலகம் முழுவதும் ஏராளமானோர் அவதிப்பட்டு வருகின்றனர். இங்கிலாந்தில் கடந்த 25 ஆண்டுகளில் மற்ற புற்றுநோய்களை விட தோல் புற்று நோயினால் 2ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

எனவே, இதற்கான மருந்தை சிகாகோ ரஷ் மெடிக்கல் சென்டர் பல்கலைக்கழக பேராசிரியர் டாக்டர் ஹோவர்ட் கவுப் மேன் தலைமையிலான குழு கண்டுபிடித்துள்ளது.

இந்த மருந்தை இங்கிலாந்தில் தோல் நோயால் பாதிக்கப்பட்டவர்களிடம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. தோல் நோயினால் மிகவும் பாதிக்கப்பட்ட 50 நோயாளிகளுக்கு புதிய மருந்தின் மூலம் சிகிச்சை அளிக்கப்பட்டது. அவர்களுக்கு 9 மாதங்களுக்கு மேல் அளிக்கப்பட்ட சிகிச்சையின் மூலம் 16 சதவீதம் பேருக்கு முற்றிலும் நோய் குணமானது. 28 சதவீதம் பேருக்கு பாதிக்கு மேல் குணமானது.

இந்த மருந்து, புற்றுநோயை ஏற்படுத்தும் செல்களை அழித்து ஆரோக்கியமான செல்களை உருவாக்குவதாக பேராசிரியர் டாக்டர் ஹொவர்ட் தெரிவித்துள்ளார்.

இன்னும் பல ஆய்வுக்குப் பின் இந்த புதிய மருந்து 5 ஆண்டுகளில் விற்பனைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. (6)

# எதிர்க்கட்சிகள் தலைமைத்துவங்களையும் கொள்கைகளையும் மாற்ற வேண்டும்

## சம்பிக்க ரணவக்க தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்க்கட்சிகள் எதிர்காலத்தில் தமது கொள்கைகளையும் தலைமைத்துவங்களையும் மாற்றிக் கொள்ளும் என்று எதிர்பார்க்கின்றோம்.

மாறாக ஆளும் கட்சியை எதிர் த்துக் கொண்டிருப்பதன் மூலம் எதனையும் சாதிக்க முடியாது என்று ஜாதிக ஹெல உறுமயவின் கொள்கை வகுப்பாளர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

கொழும்பில் அமைந்துள்ள மகாவலி கேந்திர நிலையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது,

சட்டங்களை இயற்றும் இடமே பாராளுமன்றம் ஆகும். இந்நிலையில் ஜனநாயக ரீதியில் நடத்தப்பட்ட கடந்த பாராளுமன்ற தேர்தலில் எமது ஆளும் கூட்டணிக்கு மகத்தான வெற்றி கிடைத்துள்ளது.

முக்கியமாக இந்த தேர்தலில் இரண்டு கட்சிகள் என்ற எண்ணக்கரு உடைத் தெறியப்பட்டுள்ளது. மாறாக பல கட்சிகளையுடைய கூட்டணிக்கே பலம் கிடைத்துள்ளது.


மலேசியா, சிங்கப்பூர், ஜப்பான், சீனா ஆகிய நாடுகளில் பல கட்சிகளையுடைய கூட்டணிகளே வெற்றிகரமாக ஆட்சியமைத்து வருகின்றன.

இந்நிலையில் எதிர்க்கட்சிகள் தமது தலைமைத்துவங்களை மாற்றிக்கொள்ள வேண்டும். அத்துடன் கொள்கைகளையும் மாற்றவேண்டும். அதனைவிடுத்து ஆளும் கட்சியின் வேலைத்திட்டங்களுக்கு எதிர்ப்பு தெரிவித்துக் கொண்டிருப்பதில் அர்த்தம் இல்லை என்றார். (6)

சிவமயம்
திருச்சிற்றம்பலம்
"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"
திருமுறைப் பண்ணிசை செகமெல்லாம் பரவும் வழி செய்வோமாக
**அகில இலங்கைத் திருமுறை மன்றம்**
திருவாவடுதுறை ஆதீனம் வழங்கிய சமயாச்சாரியர் நால்வர்,
பன்னிரு திருமுறை எழுந்தருளிய சந்நிதியில் விரோதி வருடம் மாதம் ஒரு கோவில் மாதம் ஒரு திருமுறை ஆக

**பன்னிரு திருமுறை முற்றோதற் பாராயண நிறைவு விழா**

இடம் :- காரைநகர் மருதடி வீரகத்தி விநாயகர் ஆலயம்
காலம்:- விரோதி வருடம் பங்குனித் திங்கள்
30ஆம் நாள் 13.04.2010 செவ்வாய்க்கிழமை
நேரம்:-2.00 மதியம்



*சிவனேசச் செல்வர்களே,*

சிந்தையைச் சிவமாக்க வல்லவை திருமுறைகள் பாடிய நாயன்மார்களுக்கு பல அற்புதங்களை நிகழ்த்திக்காட்டியவை .அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினர் நாட்டில் நல்லவை பெருகவும் அல்லவை அருகவும் பன்னிரு திருமுறைகளை மாதந்தோறும் ஒவ்வொரு திருமுறையை ஒவ்வொரு ஆலயமாக பலவருட காலமாக ஓதிவருவதை நீங்கள் அறிவீர்கள். அந்த வகையில் 2009 சித்திரை மாதம் யாழ்ப்பாணம், நல்லூர் கைலாசபிள்ளையார் உடனுறை ஸ்ரீ கைலாசநாதர் ஆலயத்தில் முதலாந்திருமுறை ஓதி அங்கு நால்வரைத் திருவீதிகள் உலாவர பல்லக்குத் தந்து அதில் நால்வரையும் ஒவ்வொரு விநாயகர் ஆலயம் சென்று ஒவ்வொரு திருமுறையாக ஓதி இறுதியில் பன்னிரண்டாம் திருமுறை காரைநகர் மருதடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் இனிதே நிறைவுபெற உள்ளது. அன்றைய தினம் மழை வேண்டல் பதிகங்கள் எனும் நூலும் வெளியிட உள்ளனர். இது தெய்வத்தின் திருவருளே.

அடுத்த சுற்றின் முதலாந்திருமுறை காரைநகர் ஈழத்துச் சிதம்பர ஆலயத்தில் ஆரம்பிக்க திருவருள் பாலித்துள்ளது. திருவாவடுதுறை ஆதீனம் வழங்கிய நால்வர் திருமுன் நடைபெறும் இத்திருமுறை முற்றோதல் நிகழ்வில் கலந்து நாடும் வீடும் நாமும் நலம் பெறுவோமாக.

திருமுறை ஓதி தலைமுறை காக்க இருகரம் கூப்பி தங்களைப் பணிவன்புடன் அழைக்கின்றோம்.

அகில இலங்கைத் திருமுறை மன்றம் யாழ்ப்பாணம்.

(9/041)
அனுசரணை : தில்லையம்பலம் மகாதேவன்
புதுறோட் -கிழவன்காடு,
காரைநகர்.

பொறுப்புரிமை சபை
காரைநகர் மருதடி வீரகத்தி
விநாயகர் ஆலயம்.

# பெங்களூர் அணியை வீழ்த்தி டெக்கான் சார்ஜர்ஸ் தப்பியது

சகலதுறையிலும் பிரகாசித்த டெக்கான் சார்ஜர்ஸ் அணி 13 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தீர்க்கமான வெற்றியைப் பெற்று அரையிறுதி வாய்பை தக்க வைத்துக்கொண்டது.

இந்தியாவில் நடைபெற்று வரும் இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்.) அமைப்பின் 8 அணிகள் மோதும் இருபது-20 கிரிக்கெட் தொடரில் லீக்சுற்றின் 46ஆவது போட்டி நேற்று நாக்பூரில் நடைபெற்றது.

இப் போட்டியில் கில்கிறிஸ்ட் தலைமையிலான டெக்கான் சார்ஜர்ஸ் அணியும் கும்ளே தலைமையிலான பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணியும் மோதின.

இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணித்தலைவர் கும்ளே முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய டெக்கான் சார்ஜர்ஸ் அணி ஆரம்பத்தில் 2.3 ஓவர்களில் 14 ஓட்டங்களை மாத்திரமெடுத்து கில்கிறிஸ்ட், சுமன், கிப்ஸ் ஆகியோரையிழந்து தடுமாறியது.

எனினும் அடுத்துக் களமிறங்கிய றோகித் சர்மா மனேஜ் மிர்ஷாவின் சிறப்பான இணைப்பாட்டத்தின் மூலம் டெக்கான் சார்ஜர்ஸ் அணி 20 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களையிழந்து 151 ஓட்டங்களை எடுத்தது.

இதில் றோகித் சர்மா 46 பந்துகளில் (7 பவுண்டரிகள் அடங்கலாக) 51 ஓட்டங்களையும் மனேஜ் மிர்ஷா 30 பந்துகளில் (ஒரு பவுண்டரி, 3 சிக்ஸர்கள் அடங்கலாக) 41 ஓட்டங்களையும் அன்ரூ சைமண்ட்ஸ் 20 பந்து களில் (2 பவுண்டரிகள் அடங்கலாக) 19 ஓட் டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் டயல் ஸ்ரையன் 3 ஓவர்கள் பந்துவீசி 18 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் வினேஸ்குமார், அணித் தலைவர் அனில் கும்ளே ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணி 19.4 ஓவர்களில் 138 ஓட்டங்களை மாத்திரமெடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்து 13 ஓட்டங்கள்வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இதில் ராகுல் டிராவிட் 35 பந்துகளில் (8 பவுண்டரிகள் அடங்கலாக) 49 ஓட்டங்களையும் றொபின் உத்தப்பா 20 பந்துகளில் (3 சிக்ஸர்கள் அடங்கலாக) 34 ஓட்டங்களையும் ஜக் கலிஸ் 27 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் ஹரிஸ், ஆர்.பி.சிங்., பிரஜன் ஓஜா ஹாமிர் சிங் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் அன்ரூ சைம்ண்ட்ஸ் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இவ்வெற்றியின் மூலம் டெக்கான் சார்ஜர்ஸ் அணி தான் விளையாடிய 12ஆவது போட்டியில் 6ஆவது வெற்றியைப் பெற்று 12 புள்ளிகளுடன் 5 ஆவது இடத்திற்கு முன்னேறியது. அத்துடன் அரையிறுதிவாய்பையும் தக்கவைத்தது.

இதேவேளை பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணி தான் விளையாடிய 12ஆவது போட்டியில் 6ஆவது தோல்வியைச்சந்தித்த போதும் 12 புள்ளிகளுடன் ஓட்டவிகித சராசரியில் தொடர்ந்து இரண்டாவது இடத்திலுள்ளது.

## போல்வோல்ட் சாதனை வீராங்கனை யுலினா காலவரையற்ற ஓய்வு

ரஷியாவை சேர்ந்த பிரபல தடகள வீராங்கனை யுலினா இசின்பயேவா போல்வோல்ட் போட்டியில் பலமுறை உலக சாதனை படைத்துள்ளார். 27 வயதான யுலினா 4 முறை உள்ளக விளையாட்டரங்க உலக சம்பியன் ஷிப் போட்டியிலும், 3 தடவை திறந்த வெளியில் நடைபெற்ற உலக சம்பியன் பட்டத்தை தனதாக்கி உள்ளார்.

சமீப காலங்களில் உடல் தகுதி இல்லாததால் சரியாக செயல்பட முடியாமல் தோல்வியை சந்தித்த யுலினா காலவரையற்ற ஓய்வு எடுப்பதாக அறிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் கூறுகையில்,

கடந்த 3 வாரங்களாக தீவிர சிந்தனைக்கு பின்னர்போட்டியில் இருந்துவிலகி இருக்கவேண்டியது அவசியம் என்ற முடிபுக்கு வந்துள்ளேன்.

கடந்த 8 வருடங்களுக்கு மேலாக தீவிர பயிற்சியுடன், சர்வதேச அளவிலான போட்டிகளில் தொடர்ந்து கலந்து வருவதால் எனது உடல் களைப்பில் இருந்து விடுபட ஓய்வு தேவையாகும். அடுத்து எப்போது போட்டியில் கலந்து கொள்வேன் என்பதை உறுதியாக சொல்ல முடியாது.

இந்த ஆண்டின் கோடைக்கால சர்க்யூட் மற்றும் ஐரோப்பிய சம்பியன் ஷிப் போட்டியில் நிச்சயம் கலந்து கொள்ள மாட்டேன் என்று கூறிவிட முடியாது. எனது நீண்ட நாள் இலக்கில் எந்தவித மாற்றமும் இல்லை. 2011 மற்றும் 2013 உலக போட்டியில் சம்பியன் பட்டம் வெல்ல வேண்டும்.

2012ஆம் ஆண்டு லண்டனில் நடைபெறும் ஒலிம்பிக் போட்டியில் தங்கப்பதக்கம் கைபற்ற வேண்டும் என்ற முடிபில் உறுதியாக இருக்கின்றேன் என்று அவர் தெரிவித்துள்ளார்.

## அரையிறுதி வாய்ப்பு யாருக்கு?

இந்தியன் பிரிமியர் லீக் மூன்றாவது இருபது-20 கிரிக்கெட் தொடர் இந்தியாவில் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று வரை நடைபெற்ற முதல் சுற்று 46ஆவது ஆட்டம் வரையில் மும்பை இந்தியன்ஸ் அணி 16 புள்ளிகளை எடுத்து முதலாவது அணியாக அரையிறுதிக்கு முன்னேறியது. இந்நிலையில் 7 அணிகளும் அரையிறுதிக்கு முன்னேற போராடிவருகின்றது. இதில் கிங்ஸ் லெவின் பஞ்ஜாப் அணி ஒரு போட்டியில் தோல்வியடைந்தாலும் அரையிறுதிவாய்பை இழந்துவிடும். அணியின் தரவரிசை வருமாறு,

| DLF INDIAN PREMIER LEAGUE அணிகள் | போட்டிகள் | வெற்றி | தோல்வி | சமநிலை | புள்ளிகள் | ஓட்டவிகித சராசரி |
|---|---|---|---|---|---|---|
| மும்பை இந்தியன்ஸ் | 11 | 8 | 3 | 0 | 16 | +1.040 |
| பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் | 12 | 6 | 6 | 0 | 12 | +0.343 |
| டில்லி டேர்டேவில்ஸ் | 11 | 6 | 5 | 0 | 12 | +0.206 |
| ராஜஸ்தான் றோயல்ஸ் | 12 | 6 | 6 | 0 | 12 | -0.288 |
| டெக்கான் சார்ஜர்ஸ் | 12 | 6 | 6 | 0 | 12 | -0.438 |
| சென்னை சுப்பர் கிங்ஸ் | 11 | 5 | 6 | 0 | 10 | +0.107 |
| கொல்கத்தா நைட் ரைடர்ஸ் | 11 | 5 | 6 | 0 | 10 | -0.417 |
| கிங்ஸ் லெவின் பஞ்சாப் | 12 | 4 | 8 | 0 | 8 | +0.484 |


# யாழ் நகரில்

## British College of Higher Studies

ஏற்பாட்டில்

வேலைவாய்ப்பைத் தேடும் இளைஞர் யுவதிகளுக்கு 100% வேலைவாய்ப்பினைப் பெற்றுத்தரும்/உறுதிப்படுத்தும் முகமாக அவர்களின் ஆளுமையை விருத்திசெய்யும் **(Personality Development)** பயிற்சிப் பட்டறைகள் **(Work shops)**

### இப் பயிற்சி நெறியில் உள்ளடங்குபவை

- நேர்முகத்தேர்வினை எவ்வாறு எதிர் கொள்வது?
- அங்கு கேட்கும் கேள்விகளுக்கு எவ்வாறு பதிலளிப்பது?
- எப்படியான ஆயத்தங்களிற்கமைய உங்களைத் தயார்படுத்துவது?
- உங்களிடம் உள்ள ஆவணங்களை எவ்வாறு முறைமைப்படுத்துவது?
- அலுவலகத்தில் பேசக்கூடிய ஆங்கிலமும், அதற்கான உரையாடற் பயிற்சிகளும்
- முகாமைத்துவம் (Management)
- மனிதவளப் பயன்பாடுகள் ( Human Resource Management)
- அலுவலகப் பிரயோகத்திற்கான கணினிப் பயிற்சிகள் (Ms.Windows, Ms Word, Excel, Power Point, Accounting)

பயிற்சியின் முடிவில் தரம் வாய்ந்த சான்றிதழ் வழங்கப்படும்

**பயிற்சிப் பட்டறைகள் : 15 மணித்தியாலங்கள்**
**சனி, ஞாயிறு மற்றும் வாரநாட்களிலும் நடாத்தப்படும்**


பயிற்சிப் பட்டறையில் பங்குபெறும் மாணவர்களின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் உங்களின் பதிவுகளை தாமதமின்றி முன்கூட்டியே பதிவு செய்து உங்கள் நேரஅட்டவணையைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

இப் பயிற்சிப் பட்டறையில் பயிலும் அனைவருக்கும் எமது நிறுவனத்தினால் சுயவிபரக்கோவை (Bio-Data) தயாரிக்கப்பட்டுத் தொழில் வங்கியிலும் (Jop Bank) இணைத்துக் கொள்ளப்படுவார்கள்.

**British College of Higher Studies**
No. 15, Sirambiyadi Lane (Off Stanley Road), Jaffna.
web: www.bchs.lk Email:info@bchs.lk Tel: 021-2224550, Mobile:0777222422, 0714299935, 0773501499

(C-034)


## லாரஸ் விருது வென்றார் ஜமெக்காவின் உசைன் போல்ட்




(அபுதாபி)

உலகின் சிறந்த விளையாட்டு வீரருக்கு வழங்கப்படும் லாரஸ் விருதை, ஜமேக்காவின் தடகள வீரர் உசைன் போல்ட் கைப்பற்றினார். சிறந்த வீராங்கனைக்கான விருதை அமெரிக்க டென்னிஸ் வீராங்கனை செரினா வில்லியம்ஸ் வென்றார்.

ஜேர்மனியின் டைம்லர், சுவிட்சர்லாந்தின் ரிச்மண்ட் ஆகிய பிரபல நிறுவனங்கள். இணைந்து கடந்த 1999ஆம் ஆண்டு லாரஸ் விருதுகளை அறிமுகப்படுத்தின. கடந்த 2000இல் இருந்து ஒவ்வொரு ஆண்டும் லாரஸ் விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

ஆண்டின் சிறந்த விளையாட்டு வீரர் விருது உட்பட பத்து பிரிவுகளின் கீழ் விருதுகள் வழங்கப்படுகின்றன. சிறந்த வீரர்களுக்கான விருதை கடந்த 2005ஆம் ஆண்டு முதல் 2008 வரை 4 முறை பெற்று அசத்தியுள்ளார். சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெரடரர்.

### இரண்டாவது முறை

இந்த ஆண்டுக்கான விருது வழங்கும் விழா அபுதாபியில் கடந்த சனிக்கிழமை நடந்தது. ஆண்டின் சிறந்த வீரர் மற்றும் வீராங்கனைக்கான விருதுகளை முறையே ஜமெக்காவின் உசைன் போல்ட் மற்றும் அமெரிக்காவின் செரினா வில்லியம்ஸ் வென்றனர்.

ஒலிம்பிக் சம்பியனான போல்ட் 100 மீற்றர் 200 மீற்றர் ஓட்டத்தில் உலக சாதனை படைத்துள்ளார்.

சிறந்த அணிக்கான விருதை பிர்ட்டனின் பிரான் போர் மூலா-1 அணி வென்றது. ஓய்வுக்குப்பின் சாதித்த வீராங்கனைக்கான விருதை பெல்ஜியத்தின் கிம் கிளைஸ்டர்ஸ் வென்றார்.

சிறந்த அறிமுக வீரருக்கான விருதை பிரிட்டனின் போர் மூலா-1 வீரர் ஜென்சன் பட்டன் தட்டிச் சென்றார்.

நாவாந்துறைப் படிப்பகம்



## ஜனநாயக தேசிய கூட்ட...

பொலிஸாரினால் தடுத்து வைக்கப்பட் டுள்ள ஜெனரல் சரத் பொன்சேகாவை விடுதலை செய்யுமாறு கோரி ஜனநாயகத் தேசியக் கூட் டமைப்பினர் பொதுக் கூட்டம் ஒன் றை நடத்தி யுள்ளனர்.

1981 ஆம் ஆண்டு முதலாவது நாடாளு மன்றச் சட்டத்தை மீறும் வகையில் குறித்த கட்சி செயற்பட்டுள்ளதாக நீதிமன்றில்சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இந்த மனு மீதான விசாரணைகளை எதிர் வரும் 23 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட் டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-5)


A/L-2012
(கலை, வர்த்தகப் பிரிவுகள்)
ஏப்பிரல்-17 (சனி)
காலை-9 மணி
DMI Jaffna
(அ-042)


## நாட்டிலுள்ள...

பொருளாதாரம் உட்பட இதர பிரச்சினைகள் உக்கிர நிலையை அடையும். அப்போது பொதுமக்கள் மாற்று அரசியலுக்காகப் போராட்டம் நடத்துவார்கள். நாட்டில் ஜனநாயகம், நல்லாட்சி, தேசிய ஒற்றுமை என்பவற்றைப் பாதுகாப்பதற்கான எமது போராட்டம் எந்தச் சூழ்நிலையிலும் கைவிடப்படமாட்டாது என அவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் எதிர்பார்த்த பெரும்பான்மை ஆதரவைப் பொதுமக்கள் நிராகரித்துள்ளனர். ஆனால் தமது இலக்கை அடைய அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. அதனால்தான் நாட்டின் எதிர்காலத்திற்கான வேலைத் திட்டங்களுக்காக எதிர்க்கட்சிகள் ஆதரவளிக்க வேண்டும் என்ற பிரசாரங்களை அரசாங்கம் முன்னெடுத்து வருகின்றது.

எந்தவொரு அரசியல் கட்சியினாலும் தற்போதைய அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட முடியாது. மாறாக தற்போது காணப்படும் அனைத்துப் பிரச்சினைகளும் மிகவும் ஆபத்தான முறையில் மீளத் தலைதூக்கும்.

பொதுமக்கள் தமது உரிமைகளை வென்றெடுப்பதற்காகச் சுதந்திரமாக வீதியில் இறங்கிப் போராடும் நிலை கட்டாயமாக உருவாகும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ச-5)


### விடுமுறை கால வகுப்பு
(திங்கள் முதல் வெள்ளிவரை)

| நேரம் | A/L-2010 & DAY | A/L-2011 |
|---|---|---|
| 8.00-10.00 | B.St. | Acc. |
| 10.00-11.30 | Eco. | B.St. |
| 11.30-2.00 | Acc. | Eco. |

DMI Jaffna (அ-043)


## தவறிவிட்டது


புத்தூர் கிழக்கு, புத்தூர் எனும் முகவரியுடைய மகாலிங்கம் ரஞ்சித் என்பவருடைய தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரம், தற்காலிக இன்சுரன்ஸ், மோட்டார் திணைக்களத்தால் பதிவு செய்யப்பட்ட தற்காலிகச் சான்றிதழ் மற்றும் வீடியோக் கமரா, பற்றறி உட்பட இன்னும் சில முக்கிய ஆவணங்கள் நேற்று (12.04.2010) யாழ். நகரப் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஒப்படைத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்புகளிற்கு: K.M.ரஞ்சித்
புத்தூர் கிழக்கு, புத்தூர்.
077 3632234, 077 6544738
(1183)

## மரண அறிவித்தல்

# நடேசு குணசசிகரன் (சசி)

### (உரிமையாளர், சாதனாஸ்)



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் 426/4, கில்னர் லேனை வசிப்பிடமாகவும் கொண்ட நடேசு குணசசிகரன் (11.04.2010) ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடேசு கமலா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற நடராசா மற்றும் இராஜேஸ்வரியின் பெறாமகனும், காலஞ்சென்ற வரதராசா மற்றும் சரஸ்வதி தம்பதியினரின் அன்பு மருமகனும், ஜெயலலிதாவின் அன்புக் கணவரும், சர்மிளா, சசிரேகா, சாதனா ஆகியோரின் அருமைத் தந்தையும், கௌரி மனோகரன், தேவிகாராணி (கொழும்பு), ஜெயசிறிரட்ணாகரன் (கனடா), சந்திரிகா (கனடா), ராதிகா (கனடா) ஆகியோரின் அருன்மச் சகோதரரும், நவரத்தினம், மோகனதாஸ் (கொழும்பு), நந்தினி (கனடா), விஜயகுமார் (கனடா), லோகராசா (கனடா), பிரபாகரன் -சாளினி (சுவிஸ்), பாலகிருஷ்ணன்-நிர்மலா (கனடா), விஜயலலிதா (கனடா) ஆகியோரின் அருமை மைத்துனரும், கிருஷாந்தி (பிரதேச செயலகம், உடுவில்), காலஞ்சென்ற சுதாகரன் மற்றும் பிரபாகரன் (கரன் எலக்ரிக் கல், யாழ்ப்பாணம்) ஆகியோரின் சித்தப்பாவும், சமித்தன், சமிக்கா, சகானா, புருசோத்தமன், சுரபி, நிதர்ஷன் ஆகியோரின் பெரியப்பாவும், யோகச்சந்திரன், ரேனுஜா, துஸ்யந்தி, வையந்தி, அனந்தப்பிரகாஷ், நிதுஷா, நிறோன், டிசோன், நிம்ஷா, துரஷிகன், பிரவிந், அனுஷிகன் ஆகியோரின் மாமனும், லக்ஷிகன், ஜெயசுலக்ஷன், அக்ஷயன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (13.04.2010) செவ்வாய்க்கிழமை பி.ப.2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காகக் கோம்பையன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல் லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

426/4, கில்னர் லேன்,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.
(1177)

## அமைச்சுப் பதவி வழங்கு...

என நம்பகரமாகக் கூறப்படுகின்றது.

இதேவேளை பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் மற்றும் மகிந்த சமரசிங்க ஆகிய முன்னாள் அமைச்சர்கள் புதிய அரசாங்கத்தின் வெளிவிவகார அமைச்சுப் பதவியை எதிர்பார்த்துள்ள நிலையில் அந்த அமைச்சை நிமல் சிறிபால டி சில்வாவிற்கு வழங்க ஜனாதிபதி தீர்மானித்துள்ளதாக ஜனாதிபதி செயலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன் நிமல் சிறிபால டி சில்வா வகித்து வந்த சுகாதார அமைச்சுப் பொறுப்பை ஜோன் செனவிரட்ணவிற்கு வழங்கப்படவுள்ளது.

மேலும் மின்வலு எரிசக்தி அமைச்சு ஜாதிக ஹெலஉறுமயவின் ஆலோசகர் சம்பிக்க ரணவக்கவிற்கும் கல்வி அமைச்சு கலாநிதி சரத் அமுனுகவிற்கு, கைத்தொழில் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு குமார் வெல்கமவுக்கும் வழங்கப்படலாம் என அந்தத் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.

இதேவேளை பசில் ராஜபக்ஷவுக்குப் பிரதமர் பதவி வழங்குவது குறித்து நம்பிக்கைக்குரிய ஆலோசகர்களுடன் ஜனாதிபதி ஆலோசித்துள்ளதாகவும் ஜனாதிபதி மாளிகையில் கடந்த 9 ஆம் திகதி இவ் ஆலோசனை மேற்கொள்ளப்பட்டதாகவும் அதில் பசில் ராஜபக்ஷவுக்குப் பிரதமர் பதவியை வழங்குவதற்கு ஆலோசகர்கள் இணக்கம் தெரிவித்ததாகவும் ஜனாதிபதி செயலக வட்டாரங்களை மேற்கோள்காட்டி செய்திகள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## கொடுப்பதை...

இணைந்து செயற்பட வேண்டும் என்வும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் அபிவிருத்தியே தற்போது எம் எல்லோருடையதும் இலக்கு. அதனை அடைய அனைவரும் ஓரணியில் நல்லெண்ணத்துடன் திரள வேண்டும்.

இலங்கையில் தற்போதைய அரசாங்கம் பாரிய வெற்றியை நாடாளுமன்றத் தேர்தலில் அடைந்துள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் தேர்தல் விஞ்ஞாபனத்தை எம்மால் ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது.

ஏனெனில் அது புலிகளின் கோரிக்கையே. தமிழ் மக்களின் தேவை தமிழீழம் அல்ல. ஆனால் தமிழ் மக்களின் தேவை தமிழீழமே என்று கூறி நாட்டைத் துண்டாட முயற்சி செய்யக்கூடாது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ச-5)

## பெரும்பான்...

நடைபெற்று முடிந்த ஏழாவது நாடாளுமன்ற தேர்தலில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் 117 வேட்பாளர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். இத்துடன், இந்த முன்னணிக்கு 17 தேசிய பட்டியல் ஆசனங்களும் கிடைக்கவுள்ளன.

இந்நிலையில், எதிர்வரும் 20ஆம் திகதி மீள்வாக்குப் பதிவு இடம்பெறவுள்ள நாவலப்பிட்டி மற்றும் திருகோணமலை மாவட்டங்களிலிருந்து ஐக்கிய மக்கள் சுந்திர முன்னணியின் 10 உறுப்பினர்கள் நிச்சயம் தெரிவு செய்யப்படுவார்கள் என்று அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை கணக்கெடுப்பின் அடிப்படையில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு நாடாளுமன்றில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையான 150 ஆசனங்களுக்கு ஆறு உறுப்பினர்கள் மாத்திரமே குறைவாக உள்ளது.

ஆகவே, இந்த பெரும்பான்மையை நிரூபிப்பதற்கு எதிர்க் கட்சிகளின் பக்கமிருந்து நாடாளுமன்ற உறுப்பினர்களை உள்வாங்குவதற்கான நடவடிக்கைகள் பசில் ராஜபக்ஷ இரகசிய பேச்சுக்களில் ஈடுபட்டு வருவதாக கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு நாடாளுமன்றில் மூன்றிலிரண்டு பெரும்பான்மை நிரூபிக்கப்பட்ட பின்னர் அரசமைப்பு சீர்திருத்த சட்ட மூலம் ஒன்றினை உடனடியாக நிறைவேற்றுவதற்கு அரசு திட்டமிட்டிருப்பதாகவும் அதன் பின்னர் ஜனாதிபதி பதவிக்காலம் நாடாளுமன்ற பதவிக் காலம் ஆகியவை தொடர்பாக சட்டத் திருத்தங்களும்பெரும்பான்மை பலத் துடன் நாடாளுமன்றின் ஊடாக மாற்றம் செய்யப்படவுள்ளன என்றும் அரச வட்டாரங்களிலிருந்து அறிய வருவதாக அச் செய்திகள் மேலும் தெரிவித்தன. (ச-5)

## அரசிடமி...

உறுதியாகவும் தீவிரமாகவும் அவற்றைச் செயற்படுத்துவதற்காகவும் தனது நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்றும் சம்பந்தன் தெரிவித்தார்.

அதேவேளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியலில் நாடாளுமன்ற உறுப்பினராக ஏற்கனவே தேர்தல் ஆணையாளரிடம் சமர்ப்பிக்கப்பட்ட தேசியப் பட்டியலில் இடம்பெற்ற முதன்மை வேட்பாளர் எம். ஏ.சுமந்திரன் நியமிக்கப்படுவார் என்றும் சம்பந்தன் மீண்டும் வலியுறுத்தினார். (ச-5)

## உயர்...

வித்துள்ளார்.

விடுதலைக்குப் பின்னர் சென்னை ராஜபேட்டையில் தான் தங்கியிருந்தால் சட்ட ஒழுங்குப் பிரச்சினை ஏற்படும் என்று தமிழக அரசு தெரிவித்துள்ள கருத்தைச் சுட்டிக்காட்டியுள்ள நளினி வேறு இடத்தில் தங்குவது குறித்துக் கேட்டிருந்தால் சம்மதம் தெரிவித்திருப்பேன் என்று மனுவில் கூறியுள்ளார்.

பத்து ஆண்டுகளில் 2 ஆயிரம் ஆயுள் தண்டனைக் கைதிகளைக் கருணை அடிப்படையில் தமிழக அரசு விடுதலை செய்திருப்பதாகத் தெரிவித்துள்ள நளினி, தம்முடைய விடுதலைக்கு மட்டும் பொலிஸாரிடம் அறிக்கை கேட்பது பாரபட்சமானது என்று கூறியுள்ளார். (ச-5)


### ஐடியல் அக்கடமி

| சண்டிலிப்பாய் | யாழ்ப்பாணம் | மானிப்பாய் |
|---|---|---|
| 9.00 AM | 6.30 AM | 3.00 PM |

O/L DAY CLASS
A/L 2012
கலை/வர்த்தகப்
இரண்டும் ஒரே நாளில் மூன்று இடங்களிலும் ஆரம்பம்.
(1179)
பிரிஆரம்பம்: 15.04.2010 (வியாழன்)
மாணவச் செல்வங்களே! ஒரு தடவை தவறி விட்டீர்களா? கவலை வேண்டாம். மறு தடவை ஐடியலுடன் இணையுங்கள். வெற்றி நிச்சயம். -நிர்வாகி

### முன்பள்ளி பாடசாலை
(Maria Montessori Method)

| Class | Age | Time |
|---|---|---|
| Lower Nursery | 2½ - 3 | 8. 30 a.m 11.00 a.m |
| Upper Nursery | 3 - 4 | 8. 30 a.m 11.30 a.m |
| Pre - Grade | 4 - 5 | 8. 30 a.m 12.00 a.m |



100% ஆங்கிலத்தில் பயிற்சி

பயிற்றுவிக்கும் முறைகள்
* ஆங்கிலத்தில் பேச்சு பயிற்சிகள்
* (Audio & Video Visual) மூலமாக பாட்டு, கதைகள்
* கணனி தொடர்பான அறிவுசார் விளையாட்டுக்கள்
* பாரம்பரிய கதைகள், வரைதல், கைவேலைகள்
* இசைக்கருவி பயிற்சிகள் (Guitar, Keyboard)

100% எதிர்காலக் கல்வியில் வெற்றி

இன்றைய நவீன யுகத்திலே சிறு பிராயத்திலிருந்தே மாணவர்களின் ஆங்கில / தமிழ் அறிவை புதிய தொழில் நுட்பங்களுக்கேற்றவாறு விருத்தி செய்வதனூடாக எதிர்காலத்தில் அவர்கள் வளமான ஒரு வாழ்வைப் பெற்றுக் கொள்வதற்கமைவாக அவர்களை தயார்ப்படுத்தும் செயல் திட்டமே எமது முன்பள்ளிப் பாடசாலை

BRITISH College of Higher Studies
No.15,2/1, Sirambiyadi Lane,Off Stanley Road, Jaffna.
Tel: 021 2224550 HotLines: 0773501499 / 0777222422 Email: info@bchs.lk
(C-036)

### Pre School வகுப்புகள்
(ஆங்கில மொழிமூலம்)

பாடசாலையில் ஆங்கில மொழிமூலம் பயிலும் மாணவர்களை ஊக்குவிக்கும் முகமாக பாடசாலை பாடத்திட்டத்திற்கு அமைய ஆரம்பிக்கப்படுகிறது .

வகுப்புகள் : 1,2,3,4 & 5

SUBJECTS: Maths, Enviorment Studies, English, Computer, Elocution.

எமது புதிய தொழில்நுட்பத்துடன் கூடிய கற்கைநெறிகளில் இணையும் மாணவர்களின் ஆங்கிலப் புலமை விருத்திசெய்யப்பட்டு அவர்களின் சிறந்த பரீட்சைப் பெறுபேறுகளுக்கு எம்மால் உத்தரவாதம் அளிக்கப்படும்

BRITISH COLLEGE OF HIGHER STUDIES
No.15, 2/1, Sirambiyadi Lane,Off Stanley Road, Jaffna
Tel :021-2224550, 0777222422, 0714299935, 0773501499
Email :info@bchs.lk
(C-035)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.04.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.